KALKI 7.5.95 ரூ. 3.00

# கல்கி



# கட்டுரைப் போட்டி

# ரூ. 1,00,000 மதிப்பிற்கான பரிசுகள் !

இன்று — அங்கிங்கெனாதபடி எங்கும் எதையும்
வாங்குகிறோம் வழியின்றி போலிப் பொருள்களையே.
பொதுமக்கள் அடைவது நித்தம் ஏமாற்றம்.
உண்மையே! நீதியே! எங்கோ போய் ஒளிந்தாயே.
சோப்பு, சீப்பு, டால்கம் பவுடர் — ஏதாயினும்
நாம் வாங்கிடும் பொருள் எல்லாம் போலியே.

பொதுமக்கள் நித்தம் போலிப் பொருள்களினால் ஏமாற்றப்படுகிறார்கள். இவ்வாறு பொதுமக்களிடம் தினமும் மோசடி நடப்பதற்கு எதிராய் நமக்கு புதிய சட்டங்களும், தண்டனை முறைகளும் தேவையா ? இது சம்பந்தமாய் ஒரு கட்டுரையை எழுதி எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

நாங்கள் தேர்ந்தெடுக்கும், சிறந்த எழுத்தாளர்களுக்கு கீழ்கண்டவாறு ரூ. 1,00,000 மதிப்புக்கான பரிசுகள் வழங்கப்படும்.

ரூ. 1250/- ஒவ்வொரு எழுத்தாளருக்கும் என 10 எழுத்தாளர்களுக்கு (எழுத்தாளர்களுக்கு தக்க மதிப்பளித்து இந்த கட்டுரைகள் வெளியிடப்படும்.)
ரூ. 1000/- ஒவ்வொருவருக்கும் என 10 எழுத்தாளர்களுக்கு
ரூ. 500/- ஒவ்வொருவருக்கும் என 30 எழுத்தாளர்களுக்கு
ரூ. 250/- ஒவ்வொருவருக்கும் என 250 எழுத்தாளர்களுக்கு

மே 31-ம் தேதிவரை எங்களை வந்தடையும் கட்டுரைகளை மட்டுமே கருத்தில் கொள்ளப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளின் எழுத்தாளர்களின் பெயர்கள் செய்தித்தாள்களில் வெளியிடப்படும்.

இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் மக்கள் பெரிதும் விரும்பப்படுவது உஜாலா மட்டுமே. அதற்குக் காரணம் என்ன ?

## உஜாலா




12 ஆண்டுகளுக்கும் மேலாக, உஜாலா அனைவரும் விரும்புவதாய் விளங்குகிறது. இத்தனை ஆண்டுகளில் நூற்றுக்கணக்கான போலிகள் இதேபோன்ற பலவித பெயர்களில் மார்க்கெட்டில் வந்து மாயமாய் மறைந்தும் போய்விட்டன. ஆனால் உஜாலா தொடர்ந்து உலகெங்கும் மக்கள் மனதில் நீங்காது நிலைத்து விளங்குவதற்குக் காரணம்தான் என்ன ?


1. அதற்குக் காரணம், ஜோதி லாப் ஆய்வுக்கூடத்தில் மைக்ரோ-டிஸ்பெர்ஷன் மற்றும் மைக்ரோ-ஒயிட்டனிங் தொழில் நுட்பங்களின் கீழ் உருவாகும் விஞ்ஞான ரீதியிலான V+ ஃபார்முலாவை ஒருவராலும் பெற முடியாததனாலா ?
2. அதற்குக் காரணம், விஞ்ஞான ரீதியினாலின்றி தயாராகும் மற்ற பவுடர்/லிக்யுட் புளுக்கள் போலின்றி, தினம் உபயோகிப்பதனால் துணிகளை பாதிக்கும் இரசாயன மூலப்பொருள்கள் உஜாலாவில் இல்லாததனாலா ?
3. அதற்குக் காரணம், உஜாலா மட்டுமே எளிதில் தண்ணீரில் கரைந்து, துணிகளுக்கு தன்னிகரற்ற வெண்மையளித்து உங்கள் மனதை மகிழச் செய்வதனாலா ?
4. அதற்குக் காரணம், தினம் உபயோகிப்பதால் வெற்றிலைக் கறைபோல் துணிகளில் படிந்து துணியின் நிறம் மாய்வதற்கு விஞ்ஞான ரீதியிலாகாத தயாரிப்புகள் காரணமாகும்பொழுது உஜாலா, துணிகளை சலவை செய்யும்பொழுது, அழுக்கு மற்றும் சோப்புடன் முற்றிலும் அகலச் செல்வதனாலா ?
5. அதற்குக் காரணம் உஜாலா மிகவும் நாசுக்கான சருமம் கொண்ட குழந்தைகளுக்கும் பாதுகாப்பானது என்பதனாலா ?

காரணம் எதுவானாலும், உலகெங்கும் கோடிக்கணக்கான மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாய் விளங்குகிறது உஜாலா. கோடிக்கணக்கில் புதிதாய் உஜாலா உபயோகிக்கத் துவங்கிய வண்ணம் இருக்கின்றனர். இப்போது 250 மில்லி பெரிய பாட்டிலும் விற்பனைக்கு வருகிறது.

Marketing Office:
JYOTHY LABORATORIES,
44, Shivshakthi Ind. Estate, Marol,
Bombay-400 059.

# ரூ. 34,193/- பெறுமானமுள்ள

# மோட்டார் சைக்கிள் பரிசு!




**கல்கி நிறுவனத்துடன் இணைந்து**
**TVS - SUZUKI Ltd இந்தப் பரிசை வழங்குகிறது.**

இருபத்தாறு வாரங்களுக்குச் சளைக்காமல் போட்டிகளில் பங்கேற்றுக் கூப்பன்களை அனுப்பியதுடன், மிக அதிகமான எண்ணிக்கையில் சரியான விடைகள் எழுதி புத்தம்புதிய டிவி.எஸ். ஸுஸுகி மோட்டார் சைக்கிளைப் பரிசாகப் பெறுபவர் :

**வே. செந்தில்குமார்,**
**கோரணம்பட்டி அஞ்சல்,**
**கொங்கணாபுரம் (வழி)**
**சேலம் - 637 102.**

பத்தொன்பது போட்டிகளில் சரியான விடை எழுதிய செந்தில்குமாருக்கு வாழ்த்துக்கள்!

இவருக்குப் பல சிறப்பு அம்சங்களை உள்ளடக்கிய சமீபத்திய மாடல் SUZUKI MAX 100R பரிசாக வழங்கப் படுகிறது. சாலை வரிகள் உள்பட சகலமும் கவனித்துக் கொள்ளப்பட்டுவிட்டதால் செந்தில்குமார் 'ஜம்'மென்று ஏறி அமர்ந்து ஓட்டிச் செல்ல வேண்டியதுதான்!



வே. செந்தில்குமார்

போட்டிகளில் வெகு உற்சாகத்துடன் பங்கேற்று கூப்பன்களால் எங்களைத் திணறடித்த மற்ற கல்கி வாசகர்களுக்கும் நன்றி. மோ. சைக்கிள் பெறும் வாய்ப்பை மயிரிழையில் இழந்த நான்கு வாசகர்களுக்கு (இவர்கள் பதினெட்டு போட்டிகளில் சரியான விடை எழுதியுள்ளனர்) ஆறுதல் பரிசாகத் தலா 250 ரூபாய் வழங்குகிறோம்.

ஆறுதல் பரிசு பெறுவோர் :

- **ஆர். பாஸ்கரன், பவித்ரமாணிக்கம், கும்பகோணம் ரோடு, திருவாரூர் - 610 051.**
- **மு. பூங்கொடி, 19, சத்யநாராயணத் தெரு, பெரம்பூர், சென்னை - 11.**
- **ஆர். ராஜாராம், 7, மூன்றாவது டிரஸ்ட் குறுக்குத் தெரு, மந்தைவெளிப் பாக்கம், சென்னை - 28.**
- **என். சிவபாதசுந்தரம், 28, கஸ்தூரிபாய் தெரு, கள்ளக்குறிச்சி 606 202.**

---

**(போட்டிக்கான விடைகள் 21.5.95 கல்கி இதழில் வெளியாகும்.)**

# அராஜகத்தை வென்ற ராதாபாய்!



• ராதாபாய்

பத்திரிகைகள் சு. சுவாமி விவகாரத்தில் பிசியாக இருந்ததால் ஒரு முக்கியமான விஷயத்திற்குச் சரியான முக்கியத்துவம் கொடுக்காமல் போய்விட்டன. அதுதான் முன்னாள் பாண்டிச்சேரி முதல்வரும் இன்றைய அ.தி.மு.க. பிரமுகருமான டி. ராமச்சந்திரனுக்கு எதிராகச் சமீபத்தில் சுப்ரீம் கோர்ட் கொடுத்த நெற்றியடி.

சரி, விவகாரம் என்ன?

பாண்டிச்சேரி அரசின் கீழ், சமூக நலத்துறையில் அபலைகள் இல்லம் (Service home for destitutes and children) ஒன்று உள்ளது. பரூக் மரக்காயர் காலத்திய (1971-72) தி.மு.க. அமைச்சரவையில் சமூக நலத்துறை அமைச்சராக இருந்தார் ராமச்சந்திரன். அவ்வப்போது அபலைகள் இல்லத்துக்கு விசிட் செய்து, பெண்களை பலவந்தப்படுத்தும் முயற்சியில் இறங்கினார். புதுவையின் அப்போதைய கவர்னர் ஜாட்டி, ராமச்சந்திரனைப் பதவி நீக்கம் செய்யச் சொல்லியும் பலனில்லாமல் போயிற்று.

அந்த சமயத்தில்தான், பஞ்சாயத்துத் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த ராதாபாய், சமூக நலத் துறையின் உதவி - இயக்குனராகப் புதுவைக்கு வருகிறார். அமைச்சர் ராமச்சந்திரனின் எதிர் வீட்டில் குடியேறுகிறார். அமைச்சர் ராமச்சந்திரனின் பார்வை ராதாபாய் மேல் விழுகிறது. 'உனக்கு பிரமோஷன் தருகிறேன்' என்று நேரங்கெட்ட நேரத்தில் அவரை வீட்டுக்கு அழைக்கிறார். இணங்க மறுக்கும் ராதாபாய்க்கு மிரட்டல்கள் வருகின்றன. இதற்கிடையில், தமது பொறுப்பில் உள்ள அபலைகள் நிலையத்தில் ராமச்சந்திரன் நடத்திய முறைகேடுகள் பற்றிப் பெரிய அறிக்கை அனுப்புகிறார் ராதாபாய். அமைச்சருக்கு ஆத்திரம் தலைக்கேறுகிறது. இருந்தாலும் அதைப் பொறுத்துக் கொண்டு ராதாபாயை எப்படியும் வளைத்துப் போட்டுவிடலாம் என்று புடவைகள், நகைகள் கொடுத்தனுப்புகிறார். அவையெல்லாம் சுவரில் அடித்த பந்தாகத் திரும்பி வருகின்றன.

அரசியல் மாறுதல்கள். 1977 இல் அ.தி.மு.க. அமைச்சரவையில் உள்துறை அமைச்சராகப் பொறுப்பேற்கிறார் ராமச்சந்திரன். ராதாபாயைப் பழிவாங்கச் சந்தர்ப்பத்தை எதிர் நோக்கி இருக்கிறார்.

ராதாபாயிடம் தவறாக நடந்து கொண்டு அடி வாங்கிய ஓர் அதிகாரி, 'ராதாபாய்க்குப் பைத்தியம் பிடித்துவிட்டது; முறைகேடாக நடந்து கொள்கிறார்' என்று வதந்தியைப் பரப்பி விடுகிறார்.

ராதாபாய்க்குப் பதவி உயர்வு மறுக்கப்படுகிறது. தமக்கு இழைக்கப்படும் அநீதிகளை எதிர்த்தும், ராமச்சந்திரனின் மிரட்டல்களிலிருந்து பாதுகாப்புக் கோரியும், மூன்று முறை உண்ணாவிரதம் இருக்கிறார் அவர். ஆட்சியாளர்களுக்கு ஆத்திரம்.

1978 இல் புதுவையில் தாற்காலிகமாக கவர்னர் பொறுப்பு ஏற்கும் பிரபுதாஸ் பட்வாரி முழு விவரத்தையும் புரிந்து கொண்டு, 'மாவட்ட நீதிபதி ஒருவர் விசாரித்து அறிக்கையளிக்க வேண்டும்' என்று உத்தரவிடுகிறார். ஆனால் உள்துறை அமைச்சராக இருந்த ராமச்சந்திரன் கவர்னரின் ஆணையை ஏற்றுச் செயல்படாதது மட்டுமல்லாமல் ராதாபாயையே பதவியிலிருந்து 'நீக்கி'விடுகிறார்!

வேறு வழியில்லாமல் நீதி தேடி கோர்ட்டுகளுக்குப் படையெடுக்கிறார், ராதாபாய். சென்னை உயர்நீதி மன்றத்தில் அவருக்கு எதிராகவே தீர்ப்பு இருந்தது. ஆனால், சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் குல்தீப் சிங்கும், பரிபூரணனும், ராதாபாய்க்கு இழைக்கப்பட்ட அநீதிகளைச் சரியாகப் புரிந்து கொண்டு தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள்! ராமச்சந்திரனும் அப்போதைய தலைமைச் செயலாளரும் ராதாபாய்க்கு மூன்று லட்ச ரூபாய் நஷ்ட ஈடு தர வேண்டும் என்பது தீர்ப்பு!

ராதாபாய் பெரும் பணக்கார குடும்பத்தில் பிறந்தவர். வக்கீலுக்குப் படித்தவர். இவருடைய மாமா பனம்பள்ளி கோவிந்தமேனன் மத்திய அரசில் சட்ட அமைச்சராகவும், பின்னர் கேரள முதல்வராகவும் பணியாற்றியவர். வெற்றி பெற்ற ராதாபாய் பெண் குலத்துக்கே அநீதிகளை எதிர்த்துப் போராட துணிவு தரும் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்கிறார்.

- ப்ரியன்

# ஜெ. ஜெ. டீவிக்கு வரவேற்பு எப்படி?



• எம். ரமேஷ்

**திருமதி பானுமதி பாஸ்கர் (குடும்பத் தலைவி) :**

நிறைய செலவு செய்து நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படு கின்றன என்பது நிகழ்ச்சி களைப் பார்க்கும்போது தெரி கிறது. வழக்கமான புரோ கிராம்கள்தான் என்றாலும் கூட, நிகழ்ச்சிகளில் உள்ள 'ரிச்னஸ்' பார்க்கும் ஆர்வத் தைத் தூண்டுகிறது. பால சந்தர், பாரதிராஜா, மனோகர் போன்ற பிரபலங்கள் வழங்கு கிற, வழங்கப்போகிற நிகழ்ச்சிகள் மக்களை வெகுவாய்க் கவரும் என்பதில் சந்தேக மில்லை.



• திருமதி பானுமதி பாஸ்கர்

• தீபா

• சாம்பசிவம்

**சாம்பசிவம் (கனரா வங்கி மானேஜர்) :**

பத்திரிகைகளில் பக்கம் பக்கமாய் எழுதப்பட்டு, காண்ட்ரவர்ஸி கிளம்பி மக்களிடையே ஏகப்பட்ட எதிர்பார்ப்பை யும் பரபரப்பையும் ஏற்படுத்தியது. ஜெ.ஜெ டீ.வி. ஜி.ஈ.சி.யில், சோவின் அரசியல் நையாண்டியையும், விமரிசனத்தையும் சகித்துக் கொள்ள முடியாது நிறுத்தப்பட்டு விட்ட சூழ்நிலையில், ஜெ.ஜெ. டீ.வி.யில் தொகுதி தொகுதியாய்ச் சென்று மக்களைச் சந்திக்கிற 'தொகுதி உலா' நிகழ்ச்சி இடம் பெறுவது வேடிக்கைதான். ஸ்போர்ட்ஸ், பிஸினஸ் மற்றும் நாட்டு நடப்பு விஷயங்கள் அதிகம் ஒளிபரப்பாக வேண்டும்!

**தீபா (கல்லூரி மாணவி) :**

ஜெ.ஜெ. டீ.வி.யில் இடம்பெறும், சொல் இல்லை செல், ஐ.கியூ., கின்னஸ் சாத னைகள் (தமிழ் வடிவம்), ஸ்டார் டீ.வி. கிரிஸ் டல் மேஸ் போல - புதையல் வேட்டை, கே.பி.யின் சின்னத்திரை கதைகள் ஆகி யவை மிகவும் பிடித்த நிகழ்ச்சிகள். சினிமாக் களைக் கூட நல்ல படமாகத் (புதிது + பழை யது) தேர்ந்தெடுத்துப் போடுவது சிறப்பான விஷயம்.

**எம். ரமேஷ் :**

தரம் என்று பார்த்தால் ஸ்டார், Zee டீ.விக்களுடன் ஒப்பிடவே முடியாது. ஏற்கெ னவே உள்ள ஸ்டார், Zee, சன், ஜி.ஈ.சி. டீ.விக்களில் இடம்பெறும் நிகழ்ச்சிகளைத் தான் இவர்கள் பெயரில் வழங்குகிறார்கள். அரைத்த மாவையே அரைக்கும் பத்தோடு பதினொன்றுதான் ஜெ.ஜெ. டீ.வி.யும்.

- நமது நிருபர்

படங்கள் : கேமரா திருஞானம்



• தாமோதரன்

# TV டிப்ஸ்

**'விஜயா எலக்ட்ரானிக்ஸ்' தாமோதரன், டீ.வி, வி.சி.பி, வி.சி.ஆர்., பழுது பார்ப்பதில் படு சமர்த்தர்; நீண்டகால அனுபவம் உள்ளவர். டெலிவிஷன் பெட்டிகளைப் பாதுகாக்க அவர் தரும் டிப்ஸ் :**

எந்த டீவியை வாங்கினாலும், வருடத்துக்கு ஒரு தடவையாவது, சர்வீஸ் மெக்கானிக்கிடம் கொண்டு போய் க்ளீன் பண்ணி விடுங்கள்.

மழைக் காலத்தில், உள்ளே படியும் தூசு, ஈரத்தோடு சேர்ந்து ஒட்டிக் கொண்டுவிடும். குறிப்பாக LOT டிரான்ஸ்ஃபார்மர் மீது படிந்துவிடும். மழைக் காலத்தில் இந்த டிரான்ஸ்ஃபார்மர் மீது [illegible] இருக்கும்போது, தீப்பற்றிக் கொள்ளும் வாய்ப்பு உண்டு. ஹைவோல்டேஜ் இருப்பதால், பற்றிக் கொள்ளும் அபாயம் இருப்பதை நினைவு வைத்துக் கொள்ளுங்கள். இதைத் தவிர்க்கத்தான் இந்த யோசனை.

அதேபோல், மழைக் காலத்தில், இடி மின்னல் வரும்போது, அது பிக்சர் டியூபைத் தாக்கும் வாய்ப்பு உண்டு. மின்னல், 'எர்த்'தைத்தான் தேடும். ஆன்டெனா ப்ளக்கைக் கழற்றுவதை விட, டீவி ப்ளக்கைக் கழற்றுவது எளிது. உடனடியாகக் கழற்றிவிடுங்கள்.

வாரத்துக்கு ஒரு தடவையாவது, டீவியின் மேலும், பக்கவாட்டிலும் துடைக்க வேண்டும்.

கண்ணாடி ஸ்க்ரீனை லேசான ஈரத் துணியால் துடைக்கலாம்.

டீவி பார்க்கும் நேரத்தில் டீவி கவரை (துணியால் ஆனதோ, பிளாஸ்டிக்கினால் ஆனதோ - எதானாலும் சரி) நீக்கிவிடுங்கள். அணைத்தபின் மறுபடி மூடிவிடுங்கள்.


வாக்குவம் க்ளீனர் இருந்தால், டீவிக்கு உள்ளே படியும் தூசை அகற்ற நிச்சயம் உபயோகிக்கலாம். தவறில்லை.

ஆனால் துணி அல்லது டஸ்டர் துணியால் தட்டித் தட்டி மட்டும் தூசை அகற்றாதீர்கள். 'பார்ட்'டுகள் நெகிழ்ந்து விடவும், துணியிலுள்ள நூல் அவற்றில் சிக்கி, அவற்றை இடம் பெயரவும் செய்துவிடும்.

ஆன்டெனாவை மழைக் காலத்துக்குப் பிறகு ஒரு தடவை க்ளீன் பண்ணுவது நல்லது.

பல சானல்கள் பார்ப்பதற்காக பட்டன்களையோ, குமிழ்களையோ, மாற்றி மாற்றி அமுக்கி அவை பாழானாலும் ரிப்பேர் செய்து விடலாம்; அல்லது வேறு பொருத்திக் கொள்ளலாம். பயம் வேண்டாம்.

— சாருகேசி



# சுதந்திரமில்லாததால் விலகிவிட்டேன்!

சோ- கங்கை அமரன் கூட்டணியில் பிரமாதமான விளம்பரத்துடனும், பரபரப்புடனும் துவங்கிய ஜி.ஈ.சி. சாடலைட் டீ.வி.யிலிருந்து சோ விலகி விட்டார். இதற்குக் காரணம் என்ன? சோவையே சந்தித்துக் கேட்டோம்.



"நான் வழங்கிய அரசியல் நையாண்டி, விமர்சன நிகழ்ச்சிகளை ஆளும் கட்சியால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. நான் முழு சுதந்திரமாய் நிகழ்ச்சிகளை வழங்குவதில், குறுக்கீட்டை ஏற்படுத்தியது. அதன் பின்னும், 'காம்ப்ரமைஸ்' செய்து கொண்டு நான் பணியாற்ற விரும்பவில்லை. எனவே விலகி விட்டேன்."

"சட்டசபைக்குள்ளே எதிர்க்கட்சியினர் விமர்சிப்பதைப் பொறுத்துக் கொள்ள முடியாத ஆளுங்கட்சியினர் உங்களுடைய 'சத்த சபை'யையும், அரசியல் விமர்சனத்தையும் ஸ்போர்டிவ்வாக எடுத்துக் கொள்ளுவார்கள் என்று நீங்கள் எந்த அடிப்படையில் நம்பினீர்கள்?

"ஆளும் கட்சியினர் குறுக்கீடு எதுவும் இருக்காது என்று ஜி.ஈ.சி. நிறுவனத்தினர் நினைத்தாலும், நான் அப்படி நினைக்கவில்லை. ஆகவே தான், என் சுதந்திரத்தில் குறுக்கீடு இருக்கக் கூடாது என்றும் அப்படி குறுக்கீடு இருந்தால் விலகி விடுவேன் என்றும் ஜி.ஈ.சியில் சேருவதற்கு முன்பே நான் கண்டிஷன் போட்டேன். சுதந்திரமாய்ச் செயல்பட முடியாத சூழ்நிலையில், விலகி விட்டேன்."

"நீங்கள் இன்னும் ஜி.ஈ.சியின் ஆலோசகராய்த் தொடருவதாய்க் கூறப்படுகிறதே?"

"இல்லை. எனக்கும் அதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது."

"உங்கள் நிகழ்ச்சிகளுக்கு வரவேற்பு எப்படி இருந்தது?"

"சத்தசபை, அரசியல் விமர்சனம் ஆகிய நிகழ்ச்சிகளைப் பார்த்துவிட்டு, நூற்றுக்கும் அதிகமான பாராட்டுக் கடிதங்கள் வந்தன. தொகுதி மக்களின் குறைகளையும், எம்.எல்.ஏ.வின் விளக்கங்களையும் எடுத்துக்காட்டும் நிகழ்ச்சிக்கும் நல்ல வரவேற்பு."

"இன்று நிறைய தனியார் சாடலைட் டீ.விக்கள் இருக்கிற சூழ்நிலையில், உங்களது அரசியல் நையாண்டி, விமர்சன நிகழ்ச்சிகளை வேறு டீ.விக்களில் வழங்க வாய்ப்பு கிடைத்தால் பயன்படுத்திக் கொள்ளுவீர்களா?"

"ஏற்கெனவே வாய்ப்பு வந்தது. அரசியலில் ஒரு சாராரைத் தனிச்சையாய் விமர்சிக்க என்னை அனுமதித்தாலும் இன்னொரு சாரார் விமர்சிக்கப்படுவதில் அவர்களுக்கு விருப்பமில்லை. எனவே நான் அவர்கள் அழைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை."

"எல்லாருமே சினிமா சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளையே அதிகமாய் அளிக்கிறார்கள். இது ஆரோக்கியமானதா?"

"அந்தக் கேள்விக்கே இங்கே இடமில்லை. அறிவூட்டும் நிகழ்ச்சிகள் வேண்டும் என்று கருதி, எல்லா டீ.வி.களிலும் ஓரளவு அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை அளித்தாலும் கூட, பெரும்பாலான மக்கள் அவற்றைத் தவிர்த்து, சினிமா நிகழ்ச்சிகளைத்தானே பார்க்கிறார்கள். அதற்கு என்ன செய்ய!"


சந்திப்பு : எஸ். சந்திரமௌலி


ஐடிபிஐ என்றால் பலருக்கு பலவித அர்த்தங்கள் தோன்றும். ஆனால் முப்பதாண்டுகள் முதலீடு அனுபவத்தைக் கொண்டு மூலதன வளர்ச்சி வாய்ப்பைத்தருவதில்,



# ஸ்டாக் மார்க்கெட்டைக் கண்டால் பயம், ஆனால் அதில் வரும் பணம் விரும்புவோருக்கு.

''எல்லாரும் ஸ்டாக் மார்க்கெட்ல பணம் போடச் சொல்றாங்க. ஆனா எனக்கென்னவோ ஐடிபிஐ மியூட்சுவல் தான் நல்லாயிருக்கும்னு தோணுது.






**ரிஸ்க் அம்சங்கள் :** செக்யூரிட்டிகளில் செய்யப்படும் முதலீடுகள் மார்க்கெட் ரிஸ்க் கொண்டவை. மற்ற செக்யூரிட்டி முதலீடுகள் போலவே இதிலும் யூனிட்களின் என்.ஏ.வி. ஸ்டாக் மார்க்கெட்டின் ஏற்றத் தாழ்வுகளைப் பொறுத்து மாறுபடும். எனவே இத்திட்டத்தின் சாதனைகள் பற்றி எந்த உத்தரவாதமும் அளிக்க இயலாது • I-NIT '95 என்பது திட்டத்தின் பெயரே தவிர, அதன் எதிர்கால செயல்பாடுகளையோ தரும் லாபத்தையோ குறிப்பிடுவது அல்ல • ஐடிபிஐ மியூச்சுவல் ஃபண்டை உருவாக்குவதற்கு அளித்த ரூ.25 கோடியைத் தவிர இத்திட்டத்தில் ஏதேனும் நஷ்டம் ஏற்பட்டால் அதற்கு ஸ்பான்சர் பொறுப்பில்லை • ஸ்பான்சரின் கடந்தகால செயல்பாடு மியூச்சுவல் ஃபண்ட் திட்டத்தின் எதிர்கால செயல்பாடுகளுக்கு உத்தரவாதம் இல்லை.

ங்கும் அது ஒரு பொருளைத்தான் தரும் : ஒரு சிறந்த முதலீட்டுக் கொள்கை

IDBI | Mutual

குட் பை ஃபிக்ஸட் டெபாசிட்டுகளுக்கு

"ஸ்கீம் முடியும் வரை காத்திருக்க
வேண்டாம். தேவைப்பட்டா எப்பவும்
பணத்தை எடுக்கலாம்."



# IDBI I-NIT'95

## மார்ச் 27 முதல் மே 6, '95 வரை

**ஐ-நிட் என்பது என்ன ?**

ஐ-நிட் என்பது ஐடிபிஐ மியூச்சுவல் வழங்கும் யூனிட்கள். இதில் இரண்டு அம்சங்கள் உள்ளன. ஒன்று, தொடர்ந்து டிவிடெண்ட் தருகிற பிளான் (டிவிடெண்ட் ஐ-நிட்ஸ்). மற்றொன்று மூலதன வளர்ச்சி தருகிற பிளான் (வளரும் ஐ-நிட்ஸ்). ஐ-நிட் '95 ஐந்தாண்டுகளுக்கான திட்டம்.

**நான் எவ்வளவு முதலீடு செய்யலாம் ?**

இத்திட்டத்தில் எவ்வளவு வேண்டுமானாலும் முதலீடு செய்யலாம். எந்த வரம்பும் இல்லை. குறைந்த பட்ச முதலீடு ரூ. 1000/-. மற்ற பப்ளிக் இஷ்யூக்கள் போலல்லாது ஐ-நிட் '95 (எந்த அளவானாலும்)-ல் நிச்சய அலாட்மென்ட் உண்டு.

**ஸ்கீம் முடியும் முன்பே பணம் தேவைப்பட்டால் என்ன செய்வது ?**

பணத்தேவை ஏற்பட்டால் ஐ-நிட்களை பணமாக்கிக் கொள்ளலாம். பணமாக்கும் வசதி (என்கேஷ்மென்ட்) முதல் ஆண்டில் ஆறு மாதத்திற்கு ஒரு முறையும், அதன் பிறகு மூன்று மாதத்திற்கு ஒரு முறையும் உண்டு. ஒவ்வொரு முறையும், இவ்வசதி ஒரு வாரத்திற்கு இருக்கும்.

**என் ஐ-நிட்களை பணமாக்குவது எப்படி ?**

"கவுண்டரில் கேஷ் பெறும் வசதி"யை தேர்ந்தெடுங்கள். (இது 5000 ஐ-நிட் வரை வாங்குவோருக்கு உண்டு). கேஷ் கூப்பனை, பணமாக்கும் காலத்தில் 100 நகரங்களிலுள்ள குறிப்பிட்ட ஏதாவது ஒரு வங்கிக்குச் சென்று கவுண்டரில் கொடுத்து பணத்தை பெற்றுக் கொள்ளலாம். (வங்கிகளின் பெயர் விண்ணப்ப படிவத்தில்) சர்டிபிகேட் அனுப்பவேண்டியதோ அல்லது காசோலைக்குக் காத்திருக்க வேண்டியதோ இல்லை. மேலும் நீங்கள் உங்கள் ஐ-நிட்களை எந்த அளவானாலும் தபால் மூலமும் பணமாக்கிக்கொள்ளலாம்.

**என் ஐ-நிட்களை என்ன விலையில் பணமாக்கிக் கொள்ளலாம் ?**

உங்கள் ஐ-நிட்களை நிகர சொத்து மதிப்பில் (என்.ஏ.வி) பணமாக்கிக் கொள்ளலாம். என்.ஏ.வி உங்கள் முதலீட்டின் மதிப்பைக் குறிப்பிடுகிறது. இம்மதிப்பு முக்கிய பத்திரிகைகளில் தொடர்ந்து வெளியிடப்படும்.

**கடன் வசதி உண்டா ?**

உண்டு. ஐ-நிட்களின் மேல் கடன் வழங்க பல வங்கிகள் கொள்கை அளவில் ஒப்புக்கொண்டிருக்கின்றன (விவரங்கள் விண்ணப்ப படிவத்தில்).

**என் முதலீடு எவ்வளவு பாதுகாப்பாக இருக்கும் ?**

முதலீடுகள் மார்க்கெட் ரிஸ்க்கிற்கு உட்பட்டவை. ஆனால் அதிகமான லாபங்கள் பெற கொஞ்சமாவது ரிஸ்க் எடுக்க வேண்டும். ஐடிபிஐ முதலீட்டாளர்களின் பாதுகாப்புகருதி ஒரு ஆண்டிற்கு உங்கள் ஐ-நிட்களை அதன் அசல் விலையில் (ஐ-நிட்டிற்கு ரூ.10) திரும்பி வாங்கிக் கொள்ள தயாராக உள்ளது. இந்த வசதி (ஐடிபிஐ கேப்டி நெட்) 5000 ஐ-நிட்வரை ஒரிஜினலாக அலாட்மென்ட் கிடைத்தவர்களுக்கு மட்டுமே.

ஸ்பான்ஸர் & லீட் மேனேஜர்: **இன்டஸ்ட்ரியல் டெவலப்மென்ட் பாங்க் ஆஃப் இந்தியா** இன்வெஸ்ட்மென்ட் மேனேஜர்: **ஐடிபிஐ இன்வெஸ்ட்மென்ட் மேனேஜ்மென்ட் கம்பெனி லிமிடெட்** ரெஜிஸ்ட்ரார்: **கார்வி கன்ஸல்டன்ட்ஸ் லிட்.** கஸ்டடியன்: **சிட்டிபேங்க் என்.ஏ.**

விரிவான பிரசுரத்துக்கும், விண்ணப்ப படிவத்துக்கும் **ஐடிபிஐ மியூச்சுவல்** தபால் பெட்டி எண். 9980
நரிமன் பாயின்ட், பம்பாய்-400 021. என்ற முகவரிக்கு எழுதுங்கள்

முதலீடு செய்யுமுன் குறிப்பீட்டு ஆவணத்தைப் படிக்கவும்.

Sobhagya/95-Tam

# Kalki Shopping Page

## நீண்ட நேரம் பாதுகாப்பு — உடல் நாற்றத்திலிருந்து

இப்பொழுது கோடிக்கணக்கான இந்தியர்கள் உடல் நாற்றமின்றி நாள்முழுதும் புது நம்பிக்கையுடன் செயல்படலாம்.
சர்வதேச புகழ்பெற்ற ரெக்சோனா டியோடொரண்ட் இப்பொழுது இந்தியாவிற்கு வந்துள்ளது. டியோ-பெர்ஃப்யூம் உள்ள ரெக்சோனா டியோடொரண்ட், உடல் நாற்றத்திலிருந்து நாள் முழுதும் பாதுகாப்பு அளிக்கிறது. இதில் மட்டுமே உள்ள உன்னத டிபோஸ்டெரால் இதை மற்றவைகளை விட நீண்ட நேரம் செயல்பட உதவுகிறது.
ரெக்சோனா டியோடொரண்ட் மூன்று நவீன மற்றும் வசதியான பேக்குகளில் கிடைக்கிறது. ஸ்டிக் (ரூ. 20/-), ரோல்-ஆன் (ரூ. 50/-), மற்றும் ஸ்ப்ரே (ரூ. 72/-) ஒவ்வொரு தனி மனித மற்றும் குடும்ப வசதிக்கேற்ப.
ரெக்சோனா டியோடொரண்ட் இப்பொழுது தமிழ்நாட்டில் மற்றும் கிடைக்கும். விரைவில் தேசமெங்கும் கிடைக்கும்.

---

ॐ

## PADMASHRI PEARLS

### ANNOUNCES

THE IRRESISTIBLE OFFER YET AGAIN !
BUY ANY OF YOUR BIRTHSTONES (WE HELP YOU IN SELECTING YOUR BIRTHSTONES ACCORDING TO YOUR DATE-OF-BIRTH AND JANMA-NAKSHATRAM) AND GET IT SET IN A SILVER RING FOR A-B-S-O-L-U-T-E-L-Y F-R-E-E (OR) IN GOLD AGAINST ORDER WITH NO MAKING CHARGES. ALSO AVAIL A SPECIAL 20% DISCOUNT ON ALL OTHER ITEMS ON DISPLAY.

**PADMASHRI PEARLS**
PEARL DEALERS & QUALITY GEMS.
53, NORTH USMAN ROAD, (OPP. ARR COMPLEX), T. NAGAR, MADRAS-17.
ALSO AT
M.G. ROAD, SECUNDERABAD-3 A.P.

---

ஸ்ரீராமபிரானுக்குப் பாலம் அமைக்க சின்னஞ்சிறு அணிலும் மண் சுமந்தது. உங்கள் பொருளாதார முன்னேற்றத்துக்குப் பாலம் அமைக்க நாங்களும் உதவமுடியும்.

## நடராஜ் ஃபைனான்ஸ்

இந்நன்னாளில் அனைவர் இல்லங்களிலும் செல்வம் செழிக்க ஸ்ரீநடராஜ பெருமானையும், ஸ்ரீராமபிரானையும் பிரார்த்திக்கிறோம்.

### புத்தாண்டு சிறப்புப்பரிசு (சித்திரை, வைகாசி வரை)


டெபாஸிட் ரூ. 10,000 ❑ கால அளவு 12 மாதங்கள்
ஸ்பெஷல் பரிசு 1 கிராம் தங்கக்காசு (22காரட்)
வழக்கமான பரிசு 4% +1% ❑ வட்டி 24% P.A.
90 நாட்கள் | 6 மாதம் | 12 மாதம் | 24 மாதம் | 36 மாதம்

90 நாட்களுக்கு ஒருமுறை ரினிவல் வசதி ✱ ஒவ்வொரு ரினிவலுக்கும் பரிசு அசலுக்கும், வட்டிக்கும் 'செக்' ✱ சீட்டு குரூப்பில் கடன் வசதி ✱ 36 மாதங்களுக்கு ரூ. 12000 டெபாஸிட் செய்து 3 சவரன் தங்கம் பெறும் திட்டம் ✱ 3 ஆண்டுகளில் இரட்டிப்பு டெபாஸிட் திட்டம் ✱ நடராஜன் என்ற பெயர் உள்ளவர்களுக்கு 1 கிராம் தங்கம் அதிகம் பெறும் ஐயாயிரம் டெபாஸிட் திட்டம்.

**CALL 4342098, 4840150**

**NATARAJ FINANCE & INVESTMENTS,**
**NATARAJ CHITS (TAMILNADU) PVT., LTD.**
**NATARAJ ESTATES - FARM HOUSE PROMOTERS,**
"Shanthi Complex", 3rd Floor, 26-Ranganathan St.,
T.Nagar, Madras - 600 017. B.O. KANCHEEPURAM - 1

★ சீட்டுநிதி ★ ஆயில்மில்ஸ் ★ ஏற்றுமதி ★ பார்ம் ஹவுஸ் ★ பப்ளிகேஷன்ஸ் ★
நாட்டுப் பணியிலும் நாட்டம் உள்ளவர்கள்






1995 மே 7
யுவ சித்திரை 24
மலர் : 53
இதழ் : 40

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. - பாரதியார்.




# ஜெயந்திக்கு இந்த கதி; ஜனங்களுக்கு என்ன கதி?

தார்மிகு சென்னை மாநகரில் காங்கிரஸ் எம்.பி.யான ஜெயந்தி நடராஜன் போலீஸாரால் நடத்தப்பட்டுள்ள விதம் சராசரி மக்களை கதிகலங்கச் செய்துள்ளது. ஒரு எம்.பி.யிடம் அதுவும் பெண்மணியிடம் போலீஸ் அதிகாரி அவமரியாதையாக நடந்து கொள்வதுடன் கைநீட்டி அவரை உலுக்கவும் தாக்கவும் கூடுமென்றால் - ஏனைய மக்கள் என்ன பாதுகாப்பு எதிர்பார்க்க முடியும்? தமிழக போலீஸ், மக்கள் காவலர்களாக விளங்குவதற்குப் பதில் ஆளும் கட்சி குண்டர்களாக மாறி வருவதைத்தான் சம்பவம் உணர்த்துகிறது.

ராஜ்யசபையில் ஜெயந்தி நடராஜன் கண்ணீரும் கம்பலையுமாக நின்று உரிமைப் பிரச்னை எழுப்பவும், அது மாநிலங்கள் அவைத் தலைவர் கே. ஆர். நாராயணன் பார்வைக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், உள்துறை அமைச்சர் எஸ். பி. சவாண் தமிழக அரசிடம் விளக்கம் கேட்டுப் பெறுவதாகவும் வாக்களித்திருக்கிறார்.

அவருக்குத் தமிழக அரசிடமிருந்து மழுப்பலான பதில்தான் கிடைக்கும் என்பதற்கு ஏற்கெனவே இங்கே போலீஸ் தரப்பு அறிக்கை கட்டியம் கூறுகிறது. போலீஸ் கமிஷ்னரின் பூசி மெழுகும் வாதத்தை இன்றையச் சூழலில் மக்கள் ஏற்பது நடக்காத காரியம்.

கொடுமை என்னவெனில், ஜெயந்தி தாம் எம்.பி. என்பதை உணர்த்திய




பிறகும், முக்கியமான வழக்கு நிமித்தம் உயர்நீதிமன்றத்துக்கு அவசரமாகப் போய்க் கொண்டிருப்பதை விளக்கிய பிறகும் போலீஸ் அதிகாரி அவரைத் தாமதப்படுத்தியதுடன், எல்லா எம்.பிக்களைப் பற்றியுமே ஒட்டுமொத்தமாகத் தாறுமாறாகப் பேசியிருக்கிறார். இதன் மூலம் தமிழக போலீஸ், நாடாளுமன்றத்தையும் நீதிமன்றத்தையும், பெண்மையையும் ஒரே சமயத்தில் அவமதிக்கிற அரிய சாதனை புரிந்திருக்கிறது.


தமிழக அரசிடம் ஜெயந்திக்கு நீதி கிடைக்காது; நாடாளுமன்ற உரிமைக் கமிட்டி தீவிர நடவடிக்கை எடுத்தால்தான் உண்டு.

## ஜெ: பதவி பிழைக்க பிராணவாயு!

தமது அரசியல் வாழ்வுக்கும் முதல்வர் பதவிக்கும் பிராணவாயு செலுத்தி மேலும் சில காலம் பிழைக்க வைக்க, உயர்நீதிமன்றத்தில் தோற்றுவிட்ட தமது வழக்கை உச்ச நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லத் தீர்மானித்துள்ளார் ஜெயலலிதா.

சட்டரீதியாக அவர் போராடுவதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. ஆனால் சட்டம் தமக்குச் சாதகமாக இல்லை என்ற கருத்தும் வழக்கு என்று நடந்தால் தம்மைக் குற்றமற்றவர் என்று நிரூபித்துக் கொள்ள முடியாது என்ற அச்சமும்

● *தமிழக போலீஸ், நாடாளுமன்றத்தையும் நீதிமன்றத் தையும், பெண்மையையும் ஒரே சமயத்தில் அவமதிக் கிற அரிய சாதனை புரிந்திருக்கிறது.* ●




> "ஆளுனர் பதவி என்பது பெரும்பாலும் அலங்காரப் பதவிதான்; ஆனால் சும்மா கிடக்கும் ஃபயர் இன்ஜின், ஆபத்து சமயத்தில் உதவுவது போல கவர்னர் உதவுவார்"

அவரைச் சட்டத்துக்கும் ஜனநாயக நல்மரபுகளுக்கும் முரணான காரியங்களில் ஈடுபடச் செய்கின்றன. ஆளுனர் மாளிகை முன்பும் நீதிமன்ற வளாகத்திலேயும் ஆர்பாட்டங்களை அனுமதிப்பது, சு.சுவாமி மீது அபத்தமான வழக்கு ஜோடித்து மூக்குடைபட்டு வாபஸ் பெறுவது; சட்டமன்றத்தில் ஆளுனர் மீது தாமே அருவருப்பான குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதுடன் கட்சி எம்.எல்.ஏக்களுக்கும் வசை புராணம் பாட தூண்டுதலளிப்பது முதலியன உதாரணங்கள். எல்லாவற்றையும் விட மோசம், சு.சுவாமிக்குப் பாதுகாப்பு தந்த உச்ச நீதிமன்றத்தின் செயல்பாட்டில் குறை கண்டு பேசி, பிறகு அந்தர் பல்டி அடித்து உச்சநீதிமன்றத்திடம் தமக்கு மதிப்பும் மரியாதையும் உண்டு என்று கூறி பூசி மெழுகியதாகும். இவையெல்லாம் முதல்வர், பயத்தில் ரொம்பவும் கலகலத்துப் போய் இருப்பதையே உணர்த்துகின்றன.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த உயர் நீதிமன்றத் தீர்ப்பு இன்னொரு அடிப்படை அம்சத்தையும் உணர்த்துகிறது. "ஆளுனர் பதவி என்பது பெரும்பாலும் அலங்காரப் பதவிதான்; ஆனால் சும்மா கிடக்கும் ஃபயர் இன்ஜின், ஆபத்து சமயத்தில் உதவுவது போல கவர்னர் உதவுவார்" என்பது ராஜாஜி உவமை. "ஆளுனர் பதவியே தேவையில்லை" என்று கூறிவந்த நமது தமிழகத் தலைவர்களில் சிலர் இப்போதேனும் விழிப்புணர்ச்சி பெற்றால் நல்லது.

ஆப்பிள் பழத்தட்டைக் கோபத்தோடு தூக்கியெறிகிறாள் மருமகள். உருண்டோடும் ஆப்பிள்களைப் பார்க்கும் மாமனார், அதிர்ச்சியோடு மருமகள் பக்கம் திரும்புகிறார். ''ஓகே. கட்!'' என்கிறார் டைரக்டர். மாமனார் - சிவகுமார்; மருமகள் - காவேரி!

ஆனாலும் இது சினிமா ஷூட்டிங் அல்ல. பிறகு? இந்த மாதம் கோல்டன் சுகின் டெலிவிஷனில் வரப் போகும் 'நீதிமான்' தொடரின் படப்பிடிப்பு. இந்தத் தொடரின் முக்கிய பாத்திரங்களாக வருபவர்கள் சிவகுமாரும் காவேரியும்தான் என்பதால், சிவகுமாருக்கு ஈடுகொடுத்துக் காவேரி நடிக்க வேண்டும்! முடியுமா காவேரியால்?

''என்ன இப்படிக் கேட்டு விட்டீர்கள்? நீங்கள் நேற்றைக்கு வந்து பார்த்திருக்க வேண்டும்... நடந்து விட்ட ஒரு விஷயம் உண்மையா என்று கணவனைப் போட்டு உலுக்கி எடுக்கிற காட்சி. நானே அசந்து போய் விட்டேன்! சும்மா பின்னி எடுத்து விட்டது, இந்தப் பெண் காவேரி...'' என்று உற்சாகமாகச் சொல்கிறார், டைரக்டர் பி.ஆர். சோமசுந்தரம்.

டைரக்டரின் பாராட்டைக் காவேரியிடம் சொன்ன போது, புகழ்ச்சியின் காரணமாக வெட்கம் வந்து விட்டது, அவருக்கு!

''சினிமாவில் அறிமுகமான நீங்கள், இப்போது டெலிவிஷன் தொடர்களில்தான் அதிகம் நடிக்கிறீர்கள். ஏன் அப்படி?''

''டெலிவிஷனில்தான் வித்தியாசமான கேரக்டர்கள் கிடைக்கின்றன. வித்தியாசமான கேரக்டர்கள் கிடைக்கும் போதுதானே என்னிடமிருக்கும் நடிப்புத் திறமையை நான் பல வகைகளிலும் வெளிக்காட்ட முடியும்! அதனால்தான் டெலிவிஷன் தொடர்களை நான் சந்தோஷமாக ஒப்புக் கொள்கிறேன்.''

''ஒரு நட்சத்திரம் என்கிற அந்தஸ்து சினிமாவில்தானே கிடைக்கிறது?''

''அப்படி நான் நினைக்கவில்லை.''

''நான் சொல்ல வருவது என்னவென்றால், ஒரு சினிமா எத்தனை நாட்கள் ஓடுகிறது என்பதைப் பொறுத்துத்தான் அதில் நடித்துள்ளவர்களுக்கான நட்சத்திர அந்தஸ்து நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால், டெலிவிஷன் தொடர்களில் அதுபோன்றதொரு கட்டாயம் இல்லை. எப்படியும் மக்கள் பார்த்துத்தான் ஆக வேண்டியிருக்கிறது. எனவேதான், டெலிவிஷன் நட்சத்திரங்களைவிட சினிமா நட்சத்திரங்களுக்கு அதிக செல்வாக்கு இருக்கிறது என்று கூறுகிறேன்.''

''இன்றைய நிலைமை அப்படியில்லை. டெலிவிஷனில் ஒரு சானல் இரண்டு சானல் என்கிற காலமெல்லாம் போய், பத்து, இருபது என்று சானல்களின் எண்ணிக்கை அதிகரித்து விட்டது. மக்கள் தேர்ந்தெடுத்துத்தான் நிகழ்ச்சிகளைப் பார்க்கிறார்கள். ஒரு நிகழ்ச்சி பிடிக்கவில்லையென்றால் உட்கார்ந்த இடத்திலிருந்தே ரிமோட் கண்ட்ரோல் பட்டனை அழுத்தி அடுத்த சானல் நிகழ்ச்சிக்குப் போய் விடுவார்கள். இந்த நிலையில் டெலிவிஷன் தொடர்கள்தானே என்று யாரும் ஏனோ தானோவென்று எடுக்கவும் முடியாது; நடிக்கவும் முடியாது. அப்புறம் பாப்புலாரிட்டி விஷயம். என்னை இதுவரை சந்தித்தவர்களெல்லாம் 'சினிமாவிலும் நடியுங்கள்' என்றுதான் சொல்லியிருக்கிறார்களே தவிர, நான் சினிமாவில்தான் நடிக்க வேண்டுமென்றோ அல்லது நான் சினிமாவில் அவ்வளவாக நடிக்காததை ஒரு பெரிய குறையாகவோ சொன்னதேயில்லை. ஆக, டெலிவிஷன் தொடர்களைப் பார்ப்பவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிமாகத்தான் இருக்கிறது என்பதால் சின்னத்திரையின் பாப்புலாரிட்டியிலேயே திருப்தியும் சந்தோஷமும் அடைகிறேன்.''

# ''சின்னத்திரை: பெரிய சந்தோஷம்!''

''உங்களுடைய உயரம் என்ன?''

''ஐந்தடி, இரண்டு அங்குலம்.''

''இந்த உயரக்குறைவு கூட உங்களின் நட்சத்திர அந்தஸ்துக்கு ஒரு தடை என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா?''

''என்னுடைய உயரம் ஒரு சராசரிப்

பெண்ணின் உயரம்தான். ஒருவேளை இன்னும் சற்று உயரமாக இருந்திருந்தால், ஒரு சில கேரக்டர்களுக்கு அந்த உயரமே கூட ஒரு பொருத்தத்தைத் தரலாம் என்பதையும் ஒப்புக் கொள்கிறேன். அதனால்தான் சில குறிப்பிட்ட கேரக்டர்களைச் செய்யும் போது - அந்த கேரக்டர்களுக்குத் தேவையான உயரத்தை ஈடுசெய்கிற விதமாக அதிகபட்ச நடிப்புத் திறமையை வெளிக்காட்ட வேண்டியிருக்கிறது. இப்படி வெளிக்காட்டத் தெரிந்து விட்டால் உயரம் ஒரு பிரச்னையே அல்ல."

"அளவான உயரமும் கச்சிதமான உடலமைப்பும் நடிகைகளுக்கான கூடுதல் தகுதிகள், இல்லையா?"

இருக்கிற பட்சத்தில், பார்க்கிற பெண்களுக்கு நான் அந்நியமாகத்தான் தெரிவேன். ஆண்களுக்கோ ஆபாச எண்ணங்களைத் தூண்டி விடுகிற ஒருவித கவர்ச்சி பொம்மையாகத் தான் இருப்பேன். எனவே, ஒரு சராசரிப் பெண்ணைப் போல்தான் நான் இருக்கிறேன் என்பதில் எனக்கு மிகவும் சந்தோஷமே!"

"இன்னின்ன கேரக்டர்களில்தான் நடிக்க வேண்டும் என்கிற மாதிரியான கட்டுப்பாடுகள் ஏதும் வைத்திருக்கிறீர்களா?"

"பரிசோதனை செய்து பார்த்துக் கொள்கிற மாதிரியான கேரக்டர்களில் நடிப்பதற்குக் கூட நான் தயக்கம் காட்டியதில்லை. உதார [illegible]



"என்னைப் பொறுத்தவரை நடிப்புத் திறமைதான் முதல் தகுதி. தோற்றம் ஓரளவுக்கு இருந்தாலே போதும். சுருக்கமாகச் சொன்னால், திரையிலே பார்க்கிற மக்களுக்கு அவர்களின் மகளைப் போல், சகோதரியைப் போல், மருமகளைப் போல், தோழியைப் போல் அல்லது என்வயதுப் பெண்களுக்கு நான் அவர்களையே பிரதிபலிப்பதுபோல் இருக்க வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கும் எனக்குமிருக்கிற - நடிகை, ரசிகர் என்கிற அந்த கண்ணுக்குத் தெரியாத இடைவெளி விலகிப் போய் மானசீகமானதொரு உறவு பலப்படும். மாறாக, நடிப்பைவிட உடலமைப்பு தூக்கலாக

டெலிவிஷன் சீரியலான 'அந்த ஒரு நிமிடம்'. அதில் வருகிற நாயகி, கடைசியில் எயிட்ஸ் நோயாளியாக இறக்கிறாள் என்பது கதை. அந்த நோய், தான் பெற்ற ரத்த தானத்தால் தான் வந்தது - தவறான உறவுகள் காரணமாக அல்ல என்கிற நிலையிலும் அந்தக் கதாபாத்திரத்தில் நடிக்க இரண்டு பேர் மறுத்து விட்டதாகவும் நான் கேள்விப்பட்டேன். ஆனால் நான் மறுக்கவில்லை. ஏனெனில், அந்தத் தொடர், எயிட்ஸ் பற்றிய ஒரு விழிப்புணர்ச்சியை மக்களிடம் ஏற்படுத்தும் என்று நான் முழுமையாக நம்பினேன். எனது நம்பிக்கை வீண் போகவில்லை."

"டெலிவிஷன் தொடர்களில் நடிப்பதை விட சினிமாவில் நடிக்கும் போது அதிக பணம் கிடைக்குமே?"

"உண்மைதான். வாழ்க்கைக்குப் பணம் அவசியம் தேவைதான். செய்கிற வேலைக்கும் ஊதியம் தேவைதான். இதன் காரணமாகவே பணத்துக்கு நமது வாழ்க்கையில் முதல் அந்தஸ்தைக் கொடுத்துவிட முடியாது. எனவே தான் டெலிவிஷன் தொடர்களில் கிடைக்கிற ஊதியத்திலேயே நான் திருப்தியடைகிறேன்."

"பொதுவாகவே நடிகைகள் என்றாலே அவர்களுக்கு நாட்டு நடப்புகளைப் பற்றி ஒன்றும் தெரியாது - சமூகத்தின் மேல் இயல்பானதொரு அக்கறை கிடையாது என்றெல்லாம் ஒரு கருத்து உண்டு!"

"நான் நிஜத்தைச் சொல்கிறேன். நான் செய்தித்தாள்கள், பத்திரிகைகள் என்று படிப்பதேயில்லை. காரணம், பெரும்பாலும் அவற்றில் நல்ல செய்திகளே வருவதில்லை. பேப்பரைப் பிரித்தாலே, இந்த நடிகை இன்னாரை விவாகரத்து செய்தார். இன்னாரை இன்னார் கொலை செய்தார். வன்முறை... பலி... என்று எல்லாமே கெட்ட செய்திகளாகத்தான் இருக்கின்றன. அவற்றைப் படித்தால் ஏற்படும் பாதிப்புகள் அந்த நாள் முழுவதும் என்னை வேலை செய்யவிடாமல் செய்து விடுகின்றன. மேலும் சில செய்திகள் நாட்டில் இப்படியெல்லாமா நடக்கின்றன என்று கோபமூட்டுகின்றன. அந்தக் கோபம் காரணமாகச் சம்பந்தப்பட்டவர்களை நேரில் சந்தித்து நாலு வார்த்தை நறுக்கென்று கேட்க வேண்டுமென்று தோன்றும். அப்படியெல்லாம் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டால் அதைத் தாங்கிக் கொள்கிற பக்குவத்திலா அவர்கள் இருக்கிறார்கள்? ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு, 'எதைப் பார்க்காமலிருக்கிறாயோ - கேட்காமலிருக்கிறாயோ - அவற்றால் உனக்கு பாதிப்புகள் இல்லை!' என்று. இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால் மகாத்மா காந்தியடிகள் சொன்ன மூன்று குரங்கு பொம்மைகள் மாதிரி, 'தீயவற்றைப் பார்க்காதே; தீயவற்றைக் கேட்காதே; தீயவற்றைப் பேசாதே!' என்பதைத்தான் நான் கடைப்பிடிக்க ஆசைப்படுகிறேன்."

"நீங்கள் ஓர் ஆங்கிலோ இந்தியப் பெண்ணாக இருந்தும் இத்தனை சுத்தமாகவும் தெளிவாகவும் தமிழ் பேசுகிறீர்களே, எப்படி?"

"ஏஞ்சலா என்கிற ஆங்கிலோ இந்தியப் பெண்தான் இந்தக் காவேரி. சர்ச் பார்க் கான்வென்டில் படித்தவள். சாதாரணமாகக் கான்வென்ட்களில் படிக்கிற தமிழ்ப் பெண்களே ஆங்கிலத்தில்தான் பேசுவார்கள், அப்படியே தமிழ் பேசுகிற கட்டாய மேற்பட்டாலும் தத்தித் தத்தித்தான் பேசுவார்கள் என்கிற நிலையைப் பார்த்துப் பார்த்துப் பழகியதால்தான் நீங்கள் என்னை இப்படிக் கேட்கிறீர்கள். மற்றபடி தமிழ்நாட்டில் பிறந்து, வளர்ந்த ஒரு பெண் தமிழில் பிரியம் காட்டுவதும் தமிழில் தெளிவாகப் பேசுவதும் ஒரு பெரிய விஷயமே இல்லை என்பதுதான் எனது கருத்து."

பேட்டி : **இளங்கோவன்**

அட்டை வண்ணப் படமும் படமும் :

**கேமரா திருஞானம்**



**மங்கையர் மலர்**

மே '95

- **ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் டேஸ்ட்!** – இணைப்புப் புத்தகம்
- **வேலைக்குச் செல்வதால் கிடைத்து விட்டதா பெண் சுதந்திரம்?**
- **கோடையில் கண் பாதுகாப்பு.**



# ருபா
## கோல்டு கவரிங்




**உத்திரவாதம் உடையது!**

உபயோகித்திருந்தாலும்
கம்பெனி நிபந்தனையின்படி
பணம் திருப்பி தரப்படும்.

பரதநாட்டியம் செட்டும்
அமெரிக்கன் டயமண் செட்
நகைகளும் கிடைக்கும்.

# கதம்ப மாளிகை

36, பாண்டிபஜார், தி.நகர்,
சென்னை-600 017.



RCFC

# RAMESH CARS FINANCE CORPORATION

149, Bells Road, Chepauk
Madras - 600 005.

உங்கள் முதலீட்டுக்கு

# 24% + 2%*

வட்டி வழங்குகிறது — ஊக்கத் தொகையுடன்

*மே 31-க்குள் முதலீடு செய்பவர்களுக்கு மட்டுமே.

ஒரு வருட டெபாசிட்டிற்கு 21%
இரண்டு வருட டெபாசிட்டிற்கு 22.5%
மற்றும் மூன்று வருட டெபாசிட்டிற்கு 24%

## டெபாசிட் திட்டங்கள்

- ஐஸ்வர்யம் ரெகுலர்
- ஐஸ்வர்யம் பாண்டு
- ஐஸ்வர்யம் கூட்டுவட்டி டெபாசிட்
- ஐஸ்வர்யம் குழந்தைகள் நல்வாழ்வு டெபாசிட்
- ஐஸ்வர்யம் தம்பதியர் நலவாழ்வு டெபாசிட்
- ஐஸ்வர்யம் முதியோர் நல்வாழ்வு டெபாசிட்
- ஐஸ்வர்யம் மாங்கல்யம் டெபாசிட்
- ஐஸ்வர்யம் குறுகிய கால டெபாசிட்

PROMOTED BY



RAMESH CARS

கார் வாங்க, விற்க எங்ககிட்ட வாங்க!

Phone: 831197, 831198, 831911, 842925
Fax: 044 - 835748

# பஸ் ஸ்டாண்ட் பஜ்ஜி போல்...

♦ 'ஸ்போர்ட்ஸ் ஸ்பெஷல்' சகல விஷயங்களையும் கொண்டு, அருமையாக அமைந்திருந்தது.
ஊஞ்சவேலாம்பட்டி, — பூடி. பசுபதி.

♦ முன்னணி டென்னிஸ் தேவதைகளின் நிஜ முகங்கள் அவர்களைப் பற்றி நாங்கள் அறியாத பல செய்திகளை அளித்தது. ஆனந்த நடராஜனை எங்களுக்கு ஓரளவு மட்டுமே தெரிந்திருந்தபோதிலும் கட்டுரை வாயிலாக விரிவாகத் தெரிந்துகொள்ள முடிந்தது. 'டைட்டில் பழசு நடிப்பவர் புதுசு', 'கிரிக்கெட் பக்கங்கள் இவ்வார இதழுக்கு வெயிட் கொடுத்தன!
செம்பட்டி, — சோ. இராமு.

♦ ஆனந்த நடராஜன், மன்னிக்கவும், ஒட்டராஜன் - பதக்க ராஜனாக பவனி வர வேண்டும்; வருவார்!
பம்பாய் - 19, — ஜான் சாமுவேல்.

♦ உடற்கல்வி இயக்குநரான நானே, சாதாரண குக்கிராமத்துக் கபாடி போட்டியில் அம்பயரிங் செய்ய நாளொன்றுக்கு 150 ரூபாய் பெறுகிறேன். மாநில தேசிய போட்டிகளில் நடுவர்களாக உள்ளவர்களுக்கு இவ்வளவு குறைந்த சம்பளம் என அறிந்து வேதனைப்படுகிறேன்.
பிடி. மொரப்பூர், — சி. ஆர். காளியப்பன்.

♦ "சாதா வார்த்தை; செம அர்த்தம்" படித்து வெடிச் சிரிப்புச் சிரித்தேன். நான்காண்டு கால 'ஜெ' ஆட்சியின் அவலத்தை 'நாகலை இளவல்' சொற்களால் நன்கு அபிஷேகித்துள்ளார். அவருக்கு 'ஜே!'
கருமத்தம்பட்டி, — அ. இராஜப்பன்.

♦ உமா குமார் எழுதியுள்ள "மற்றும் சில மனிதர்கள்" கதை காலத்திற்கேற்ற படைப்பு.
திருப்பணந்தாள், — ஜி. மதுரபாஷிணி.

♦ "ஒரு ஸ்போர்ட்ஸ் நிருபரின் டயரி குறிப்புகள்" பகுதி மிகவும் அருமையாக இருந்தது.
கீரம்பூர், — 'பாக்யா' பாஸ்கர்.

♦ பதினாறு வயதில் உலகின் எட்டுத் திக்கும் ஒளி வீசி 'செஸ்' வானில் சிறகடித்துப் பறக்கும் விஜயலட்சுமியின் வெற்றி, பெண் குலத்திற்கே பெருமை சேர்க்கும் வெற்றி!
மேலப்பாதி, — என். ராஜலெட்சுமி.

♦ 'முதலமைச்சரின் டீச்சர்' படித்தேன். சொல் மட்டுமா விளங்கியது! நிஜங்களின் நிதர்சனம் புரிந்தது! பஸ் ஸ்டாண்ட் பஜ்ஜி போல் சூடான கருத்து! கதை எழுதிய சொல்விளங்கு பெருமாள் அசத்தி விட்டார்!
திருத்துறைப்பூண்டி, — கி. இளம்பரிதி.

♦ 23.4.95 கல்கி இதழில், "என்னுயிரும் நீயல்லவோ" தொடரின் கடைசி வரியில் "பகவதி மதுரைக்குப் போயிருப்பதாகத் தெரிந்ததும் நாச்சியப்பனும் மோட்டார் சைக்கிளில் ஜெயந்தியோடு மதுரைக்குக் கிளம்பினான்" என்று உள்ளது. நாச்சியப்பன் என்பதற்குப் பதில் ஆறுமுகம் என்றல்லவா இருக்க வேண்டும்!
காட்டூர், — பி. வி. குப்புசாமி.

♦ அரசியல் தலைவர்களின் மரணம் ஏற்படுத்தும் மனவருத்தத்தை விட, அவர்களுக்குச் செலுத்தும் அஞ்சலியாக எண்ணி அறிவிக்கப்படும் விடுமுறையை, மகிழ்ச்சியோடு வரவேற்கும் இழிநிலை தான் இன்று மக்கள் மத்தியில் காணப்படுகிறது. இந்த கீழ்த்தரமான எண்ணம் மாறவும், தேசப் பொருளாதார நிலை சீர்குலையாமல் இருக்கவும், நாங்கள் தலையங்கத்தில் கூறியுள்ளபடி மற்ற விடுமுறை நாட்களை வேலை நாட்களாக அறிவிப்பது குறித்து மத்திய, மாநில அரசுகள் சிந்தித்துச் செயல்பட வேண்டும்.
நாகை, — சந்திரா.




- குலபதி

பதிவு எண்: 26383 போன்: 583241

# கல்பதரு பெனிபிட் பண்டு லிமிடெட்

(கம்பெனிகள் சட்டப்படி பதிவு செய்து நிறுவப்பட்டது)
பதிவு அலுவலகம்: 134, ராசப்ப செட்டி தெரு,
(ஸ்ரீ கந்தகோட்டம் அருகில்) பார்க் டவுன், சென்னை-600 003.

**பிக்சட் டிபாசிட் திட்டம் மாத வட்டிக்கான காசோலைகள் முன் கூட்டியே வழங்கப்படும்**

| காலம் | 46 நாள் | 90 நாள் | 6 மாதம் | 1 ஆண்டு | 2 ஆண்டு | 3 ஆண்டு | 4 ஆண்டு | 5 ஆண்டு |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருட வட்டி விதம் | 14% | 15% | 16% | 17.5% | 18.5% | 19% | 19.5% | 20% * |



## குபேரன் வைப்பு திட்டம்


வட்டி 21% குறைந்த அளவு டிபாசிட் ரூ. 50,000/- காலம் : 5 வருடம்.
மாத வட்டிக்கான செக்குகள் முன்னதாகவே வழங்கப்படும்

## அமுத சுரபி டிபாசிட் திட்டம்



| டிபாசிட் தொகை | காலம் | கிடைக்கும் தொகை |
|---|---|---|
| ரூ. 5,600 | 15 வருடம் | ரூ. 1,00,000 |
| ரூ. 7,000 | | ரூ. 1,25,000 |

## கல்பதரு மணிபேக் திட்டம்




அ) பிரதி மாதம் ரூ.100/- வீதம் தொடர்ந்து 15 வருடம் செலுத்த வேண்டும்.
முதல் 5ம் ஆண்டு முடிவில் நீங்கள் செலுத்திய ரூ. 6000/-ஐ பெறுவீர் !
2வது 5ம் ஆண்டு முடிவில் மீண்டும் ரூ.6000/-ஐ பெறுவீர் !
3வது 5ம் ஆண்டு முடிவில் ரூ.51,000/-ஐ பெறுவீர் !



**முதியவர் நலத்திட்டம்: வயோதிகர் விதவைகள் கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.**

| தொகை | காலம் | வட்டிவீதம் |
|---|---|---|
| ரூ. 10,000 | 12 மாதங்கள் | 20% |
| ரூ. 10,000 கீழ் | | 19% |

**சேமிப்பு டிபாசிட் திட்டம் - 10% வரை வட்டி வழங்கப்படும்**



**கடன்**

நகைகள் பேரில் கிராம் 1க்கு ரூ.300/- வழங்கப்படும்
சென்னை மாநகரில் உள்ள சொத்துக்கள் பேரிலும் வழங்கப்படும்

**வட்டி விகிதம் ரூ.1.95**

அலுவலக நேரம் : காலை 8.30 முதல் 12.30 வரை மாலை 2.00 முதல் 6.00 வரை ஞாயிறு காலை 8.30 முதல் 12.30 வரை

பயன் பெற ரூ. 5/- செலுத்தி பங்குதாரர் ஆவீர். (செவ்வாய் விடுமுறை) பாதுகாப்பு • சேவை • சுபிட்சம்

ஒரே முதலீட்டில் பல பயன்கள்!

# அணிலின் உதவி ஸ்ரீராமனுக்கு அன்று!
# இலக்கிய அணிலாக "ஸ்ரீராம்" இன்று!!



## ஸ்ரீராம் டிரஸ்டில் ரூ. 5,000/- டெபாஸிட் செய்யுங்கள். 5 வருடங்களில் இரட்டிப்பாக ரூ. 10,000/- திரும்பப் பெறலாம்.

47 வருடங்களாக தொடர்ந்து வெளிவரும் ஒரு நல்ல குடும்ப மாதப் பத்திரிகை "அமுதசுரபி" இயல், இசை, நாடகத்துறைக்கு அணில்போல் சேவை புரிந்து வரும் ஸ்ரீராம் குரூப் கம்பெனிகளில் ஒன்றாக அமைந்து தமிழ் இலக்கிய வளர்ச்சிப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. தமிழ் வாசகர்கள் எல்லாரும் சில நல்ல பயன்களை ஒரு சேரப் பெற "ஸ்ரீராம் டிரஸ்ட்" புதிய ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்துவதில் பெருமைப்படுகிறது.



**பயன்கள் பல:**

1. ஒவ்வொரு மாதமும் அமுதசுரபி மாத இதழ் முதலீடு செய்த உங்களுக்கோ அல்லது நீங்கள் விரும்பும் அன்பருக்கோ 5 வருடங்களுக்குத் தொடர்ந்து அனுப்பப்படும்.
2. 5 வருடத்திற்குத் "தீபாவளி மலர்" எங்கள் செலவிலேயே (பதிவுத் தபாலில்) அனுப்பி வைக்கப்படும்.
3. நீங்கள் முதலீடு செய்தவுடன் உங்களுக்குச் சிறப்பு அன்பளிப் பாக 10 கிராம் ஸ்ரீராமர் பட்டாபிஷேக வெள்ளிப் பதக்கம் அன்பளிப்பாக அளிக்கப்படும்.


தமிழ் இலக்கியம் வளர உங்கள் ஆதரவு அவசியம் தேவை.
"ஸ்ரீராம் டிரஸ்ட்" பெயருக்கு (A/c Payee) செக்/டிராப்ட் அனுப்பவும்.

SHRIRAM GROUP COMPANIES MADRAS

**ஸ்ரீராம் டிரஸ்ட்**

145, லிங்கச் செட்டி தெரு
தபால்பெட்டி எண் 5043
சென்னை - 600 001
போன்: 5228545
510535

● கலையும், நிதியும் கலந்து அளிக்கும் ஸ்ரீராம். ●




தமது இனிய தமிழ் மக்களை, மறுபடி மாட்டு வண்டியிலேற்றி ஒரு கிராமத்துக்குக் கூட்டிப் போகிறார் பாரதிராஜா.

ஊர்ப் பெரியவர், பஞ்சாயத்து, நாத்து - நடவு, மக்கா-மயனே என்று வட்டார மொழிப்புரட்சி, கொஞ்சம் காதல், பங்காளி சண்டை, நிறைய கண்ணீர், அப்புறம் தாய்ப்பாசம் - வழக்கமான விஷயங்கள்.

ஃப்ளாஷ்பேக்கில் ஒன்றிரண்டு சீன்களிலும் படம் முழுக்க ப்ளாக் அன்ட் ஒயிட் போட்டோவிலும் மட்டுமே வருகிறார் சிவாஜி. கைக் குழந்தையோடு விதவையாகி விட்ட மகளை சிவகுமாருக்கு மறுமணம் செய்து வைத்து விட்டுக் காணாமல் போய் விடுகிறார்.

அப்புறம் சிவகுமாருக்கும் - ராதிகாவுக்கும் இரண்டு குழந்தைகள் பிறக்க - முதல் குழந்தையைக் (பிரபு) கர்ணனாகக் காட்டும் முயற்சியில் கொஞ்சம் திணறியிருக்கிறார்கள்.

அவர் ஏன் தாயை - ஸாரி ஆத்தாவை - வெறுக்க வேண்டும்? அல்லது வெறுப்பதாக பாவனை செய்ய வேண்டும்? ('ஆத்தா செத்துப் போச்' என்றொரு டயலாக் வேறு.) பிறகு என்னத்துக்கு அவர் போட்டோவைப் பூஜையில் வைத்து யாருக்கும் தெரியாமல் வணங்க வேண்டும்?

ஆக, அடிப்படையில் கேள்வி எழுந்து விடுகிறது!

இன்னொரு விஷயம், படத்தில் எல்லோரும், எல்லோரையும் அத்தை, மாமா, மச்சான் என்றே கூப்பிடுகிறார்கள். பெர்முடேஷன் காம்பினேஷனில் கிட்டத்தட்ட அரை நூறு அத்தை, மாமா, மச்சான் உறவு அழைப்புகளைக் கேட்க வேண்டியிருப்பதால் மண்டை காய்கிறது.

மகன் பாசத்தில் ராதிகா இரண்டரை மணி நேரமும் அழுகிறார். கண் துடைக்க கர்ச்சீப், துண்டு போதாது; திரௌபதி வஸ்திரம் பெட்டர்.

சிவகுமாரைச் சொல்ல வேண்டும். வசனங்களே இல்லாமல் வெறும் கண் அசைவில் என்னமாய் உணர்ச்சிகளைக் காட்டுகிறார்! (வேறு எந்தப் படத்திலும் சிவகுமாரிடம் இத்தனை தத்ரூபம் காணக் கிடைத்த ஞாபகமில்லை. வேலை வாங்கியிருக்கும் இயக்குநருக்கு இதற்காக ஒரு ஸ்பெஷல் வாழ்த்து.)

உத்தமனான இரண்டாவது புருஷன் கேரக்டர் தமிழுக்குப் புதுசு. 'என் மவன்' என்று ராதிகா குறிப்பிடுகிற போது திருத்தி, 'நம்ம மகன்' என்று சிவகுமார் நெகிழ்த்துகிற கட்டங்கள் யாருக்கும் ரசிக்கும். துணிந்து செயல்பட்டிருக்கும் பாரதிராஜாவுக்கு மீண்டும் சபாஷ்!

காதல் பாட்டுக்களில், வயல், அதன் மேல் ஹீரோயின், அவள் மேல் மலர், அதன் மேல் பட்டாம்பூச்சி என்ற சூப்பர் இம்போஸிங் டெக்னிக்கைத் தொடர்ந்து சளைக்காமல் காட்டி வருகிறார் இயக்குநர். போரடிக்கிறது.

பாரதிராஜா, இந்தப் படத்தில், பாசப் போராட்ட சமாசாரத்தை ஒட்ட ஒட்டப் பிழிந்தெடுத்து விட்டபடியால் அடுத்ததில், கொஞ்சம் கட்டம் தாண்டி வெளியே வருவார் என்று நம்பலாமா?

— ஆர்.பி.ஆர்.

**நா**லரை மணி நேரம் லாரி பிரயாணம் செய்த போது மனசில் துக்கமில்லை. வெறுமைதான் இருந்தது. இனி என்ன செய்யப் போகிறோம் என்கிற பயம் இருந்தது. மதுரை நகர விளிம்பில் பஸ்ஸுக்கு நின்ற போது மலைக்குப் போகிற லாரி இவர்களைப் பார்த்து விட்டு நின்றது.

லாரி டிரைவர் இறங்கி ஓடி வந்தார்.

"செட்டியார் போயிட்டாருங்களாமே." கைகட்டி விசாரித்தார். அவர் முகத்தில் துக்கம் வழிந்தது. வண்டியிலிருந்த இரண்டு பேரை இறக்கி விட்டு பகவதியையும் கூட்டத்தினரையும் ஏற்றிக் கொண்டார். ஒரு தொலைவு வரை லாரிக்குள் நாச்சியப்பன் கொடுத்ததும், வாழ்த்தியதும், கோபம் கொண்டதும் பேச்சாய்ப் பரவின. மலை ஏறும் போது அந்தப் பேச்சு நின்றது. போடிமெட்டு தாண்டியவுடன் பாதை சரிந்து போயிற்று. பிறகு மறுபடி மேலேறிற்று. கேரளத்திற்குள் பாதை புகுந்து மேலேறுகையில் இரண்டு புறமும் ஏலக்காய்த் தோட்டங்கள் கண்ணில் படத் துவங்கின. இதற்கு மேல் வண்டி போகாது என்ற இடத்தில் இறங்கி சற்று மலை ஏற, இடதுபக்கம் பெரிய பள்ளத்தாக்காய் நாச்சியப்பன் எஸ்டேட் வந்தது. இங்கிருந்து வீடு அரை பர்லாங். இறங்கி, ஏறி, திரும்பி வளைந்து போக வேண்டும். ஏலக்காய்ப் புதர்களால் பாதை மறைக்கப் பட்டிருக்கும். சட்டென்று ஒரு சமதளம் தெரியும். வீடு தெரியும். சமதளம் தாண்டி, படியேறி, சாவி போட்டுக் கதவு திறந்து வெராண்டாவில் உட்கார்ந்தவுடன் ஓவென்று அழுகை வந்தது. நாச்சியப்பன் விட்டுப் போன செருப்பைப் பார்த்துக் கதறல் அதிகமாயிற்று. அப்படியே தரையில் சரிந்து விழ, படுக்கையறையும் சாமி படங்களும் தெரிந்தன. நாச்சியப்பன் நின்றதும் நடந்ததும் கிடந்ததும் பல்வேறு கோணங்களில் ஞாபகம் வந்தன.

தோட்டத்துக்குள் நுழைந்து வாசற்படியிலேயே அமர்ந்து வாயைப் பொத்திக் கொண்டிருந்தார்கள். பகவதி எழுந்து உட்கார்ந்தாள்.

"தலைக்கு ஊத்திக்கணும்மா. இந் நேரம் அங்க தகனம் ஆயிட்டிருக்கும். நீ தலைக்கு ஊத்திக்கறது மட்டுமில்லாம வூடு முழுக்க கழுவித் தள்ளணும். செட்டியார் படமிருக்கா. விளக்கேத்தி ஊதுபத்தி கொளுத்தி வைக்கணும். இன்னிக்கு நீ சமைக்கக் கூடாது. இங்க யாருனா சமைச்சுக் கொண்டாந்தா சாப்பிடலாம். யாரைக் கேக்கறது?"

தோட்டத்தில் வேலை செய்யும் கூலிக்காரப் பெண் கவலையோடு பேசினாள். இன்னொருத்தி வீடு சுற்றி வந்து கட்டைகளில் கெரஸின் ஊற்றி.



**பாலகுமாரன்**

# நீயல்லவோ 5

தண்ணீர் கொதிக்க வைத்தாள்.

"எல்லாருக்குமா வெந்நீர் போடு. இருட்டற நேரத்துல நீங்க பச்சைத் தண்ணில குளிக்க வேண்டாம்." பகவதி தலையை அவிழ்த்துக் கொல்லைப்புறம் உட்கார்ந்து கொண்டாள்.

"ஆச்சிக்கு உடம்பு சரியில்லைன்னு தந்தி வந்ததுன்னீங்களே... ஆச்சி நல்லாதானே இருக்காங்க" ஏலக்காய் பறிக்கும் புனிதவதி கேட்க, பகவதிக்குத் திடுக்கிட்டது.

புனிதவதியும் அவள் புருஷனும் ஐந்து வருஷமாய் இந்த எஸ்டேட்டில் இருப்பவர்கள். புனிதவதியின் புருஷன் நாராயணன் மலையாளி. புனிதவதியைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டவன். இந்த எஸ்டேட்டின் எல்லா விவகாரங்களும் அந்த மலையாளியால் தான் நடைபெறுகிறது. நாராயணன் நினைத்தால் அந்த எஸ்டேட்டை லாபம் இல்லாமல் செய்து விடலாம். பறிக்குமுன்போ பறிக்கும் பின்போ ஏலக்காய்களை அழித்து விடலாம். ஆனால் நாராயணன் அப்படியில்லை. நாச்சியப்பன் எஸ்டேட்டைத் தன் எஸ்டேட்டாய் நினைத்துச் செய்பவன். நாராயணனுக்குக் கோளத்தின் கோடியில் மனைவி குழந்தைகள் உண்டென்றும் நாராயணன் முற்றிலும் அவர்களைத் துறந்து விட்டு இங்கு வந்து விட்டானென்றும் இங்கு வந்து பல்வேறு எஸ்டேட்டுகளில் வேலை செய்து முதலாளிகளோடு ஒத்துப் போகாமல் இருந்தான் என்றும் சொல்வார்கள். ஆனால் தரைக்குப் போயிருந்த போது புனிதவதியை ஒரு மோசமான இடத்தில் சந்தித்தானாம்.


'என்னைத் திருமணம் செய்து கொள்கிறாயா.... மலைக்குப் போய் விடலாம்' என்றானாம். சரி என்று அந்த தமிழச்சி தலையசைக்க, அந்த மலையாளி அவளை மலைக்குக் கூட்டி வந்து விட்டான். தரையிலிருந்து ஆட்கள் கிளம்பி புனிதவதியைத் தேடி வருகையில் அந்த மலையாளி நாச்சியப்பனிடம் சரணடைந்தான்.

நானும் கெட்டுப் போன நாய். இவளும் கெட்டுப் போன நாய். இனிமேயாவது நல்லபடியா இருக்கணும்னு நினைக்கிறோம். விடாத துரத்திட்டு வராங்க. நாச்சியப்பரு இடம் கொடுத்தா இந்த ரெண்டு நாயும் நன்னியோட இருக்கும்."



மல்லிகைச் சரத்தை மாலையாக மாற்றி, அந்த மாலையில் அங்கங்கே செம்பருத்தி பின்னி வைத்து நாச்சியப்பன் வீட்டுக்குள்ளேயே வெங்கடாசலபதி படத்துக்கு முன்பு அவர்கள் மாலை மாற்றிக் கொண்டார்கள்.

முரடன் என்று பேர் வாங்கின நாராயணனைப் பற்றித் தெரிந்திருந்தும் ஒரு கணம் கூட தாமதிக்காமல் நாச்சியப்பன் அடைக்கலம் கொடுத்தார். புனிதவதியைச் சமையல் கட்டுக்குள் போகச் சொல்லிவிட்டு நாராயணனுக்கு ஒரு நாற்காலி கொடுத்து விட்டு, தானும் ஒரு நாற்காலி போட்டுக் கொண்டு நாராயணனுக்குத் திருவினை




யாடற்புராணத்திலிருந்து கதை சொல்ல ஆரம்பித்தார். துரத்தி வந்த கும்பல் இரண்டு நாள் எஸ்டேட் வாசலில் நின்று விட்டு மெல்ல ஒரு ஆளைத் தூது அனுப்பியது.

"நம்ம சிநேகிதன் மச்சினிய நாராயணன் கொண்டாந்துட்டாராம். கேட்டா வெளில தங்கச்சிங்கறாராம். உங்க இடத்துலதான் இருக்கார் போல. எதுனா அசிங்கம் ஆவறதுக்குள்ள நாராயணனை வெளிய அனுப்பிச்சிரணும்."

நாச்சியப்பன் பதிலே பேசவில்லை. பெரிய வீச்சரிவாளை எடுத்துக் கொண்டு பேசியவனை நோக்கி ஓட, ஏலப் புதரில் பதுங்கியிருந்து பார்த்துக் கொண்டிருந்த கூட்டம் சிதறி ஓடியது. முள்ளம் பன்றியைக் கொல்லுவதற்காக வெடிமருந்தில் எறிகுண்டுகள் செய்து வைத்திருந்தது. நாராயணன் ஓடுகிற கூட்டம் நடுவில் நாலு வீசினான்.

"ஏய்... செத்துறப் போறானுங்கடா..." நாச்சியப்பன் தடுத்தார்.

ஆனால் நாராயணன் விடவில்லை. பஸ் போகும் பாதை வரை அவர்களைத் துரத்தி விட்டுத்தான் வந்தான்.

மறுவாரம் தரைக்குப் போய் நாச்சியப்பன் விசாரிக்க அவர்கள் வியாபாரமே இல்லாது போலீசாரால் ஒழிக்கப்பட்டு விட்டது. தேனியிருந்து எஸ்டேட்டுக்கு போன் செய்து நாராயணனுக்குச் சொல்லி மதுரைக்குப் போய் நான் பார்த்து மல்லிகைப் பந்தும் தாலிக் கயிறும் கோடித் துணியும் நான்கு கிராமில் தங்கப் பொட்டும் வெள்ளிக் கொலுசும் பட்டுப் பாயும் ரெட்டைத் தலைகாணியும் வாங்கி மலைக்கு வந்த போது நாராயணன் அதிர்ந்து போனான். கொஞ்சம் கோபப்பட்டான்.

"என்னத்துக்கு இது... தேவையில்லாத செலவு... அவ எனக்குப் பொண்டாட்டி... நான் அவளுக்குப் புருஷன். இந்த வார்த்தை தான் முக்கியம். தாலிக் கயிறு இல்லை. நான் அவளை நடத்தறதுதான் முக்கியம். வெள்ளிக் கொலுசு இல்லை."

"அது உங்க ரெண்டு பேருக்குள்ள.... தெருவுல போறவன் உன் பொம்பளையைப் பார்த்து நீ யாரு பொண்டாட்டின்னு கேக்கணும். அப்படி கேக்கறதுக்குத்தான் தாலிக் கயிறு... மெட்டி எல்லாம்.

"இது சலங்கைக் கொலுசு. ராத்திரி சத்தம் போடும். பகல் முழுக்க இந்தச் சத்தம் ஞாபகம் இருக்கும். ஒரு மனுஷனை நாம பல்வேறு விதமா ஞாபகம் வச்சுக்குவோம். ரொம்ப நெருக்கமான பொண்டாட்டிய எத்தனையோ விதமா மனசுல வச்சுக்குவோம். புனிதவதியை முதமுதல்ல பாத்தது உனக்கு மறக்காது. இப்ப கோடி உடுத்திக்கிட்டு நிப்ப பாரு. அதுவும் மறக்காது. சாகற வரைக்கும் இந்தப் புடவைல இருக்கற புனிதவதியை உன்னால மறக்க முடியாது. அப்படி மறக்கக் கூடாதுங்கறதுக்குத்தான் புதுப் புடவை. வாழ்க்கைல சின்னச் சின்னதா ரசனைகள் வேணும். டீ, நேந்திரம்பழம், கள்ளுன்னு வாழ்க்கைய முடிச்சுறாதே. மல்லிகைச் சரத்தை மாலையாக மாற்றி அந்த மாலையில் அங்கங்கே செம்பருத்தி பின்னி வைத்து நாச்சியப்பன் வீட்டுக்குள்ளேயே வெங்கடாசலபதி படத்துக்கு முன்பு அவர்கள் மாலை மாற்றிக் கொண்டார்கள். அந்த வீட்டின் இன்னொரு அறையில் குடித்தனம் துவங்கினார்கள்.

**நா**ராயணன் அந்த எஸ்டேட்டில் வேலை செய்யத் துவங்கினான். என்ன சம்பளம் என்று கேட்கவேயில்லை. சம்பளத்துக்குப்பதில் மரக்கட்டிலும் இரும்பு பீரோவும் கெரஸின் ஸ்டவ்வும் பாத்திரப் பண்டங்களும், ஹீட்டர், மின்விசிறி போன்ற பொருள்களும் வாங்கி வரச் சொல்லுவான். குளிர்காலத்தில் அறைக்குள் வெப்பம் வீச ஹீட்டர் மிக முக்கியமான தேவையாக இருந்தது. ஏலக்காய் விலை போனதும் நாராயணனுக்கு இருபது சதவிகிதம் போகும். நாராயணனால் நாச்சியப்பனுக்குப் பாரம் பெரிதாய்க் குறைந்தது. புனிதவதியின் வருகையால் பகவதியின் தனிமை குறைந்தது.

ஆனால் போன வருடம் எதிர்ப்பக்க எஸ்டேட்டில் ஆறு ஏக்கர் வாங்கினான். அதே எஸ்டேட்டை பத்து ஏக்கர் குத்தகைக்கு எடுத்தான். நாச்சியப்பன் எஸ்டேட்டையும் தன் எஸ்டேட்டையும் பார்த்துக் கொண்டான். மெல்ல மெல்ல நாராயணன் தனி எஸ்டேட் வாங்கி விடுவான் என்பது எல்லோருக்கும் தெரிந்திருந்தது.

"நாராயணா, நீ தனியா போறதா இருந்தா எனக்கு ஒரு வருஷம் டைம் குடு. என் காதோடு காதா போற விஷயத்தைச் சொல்லிட்டு வேற ஒரு ஆளை ட்ரெய்ன் பண்ணு. ட்ரெயின் பண்ண ஆளுக்கு பொறுப்பை மாத்திக் குடுத்துட்டு உன் எஸ்டேட்டுக்குப் போ. தடுக்குன்னு குரவளைய அறுத்துட்டுப் போயிடாதே."

நாச்சியப்பன் கடுப்புடன் சொல்ல அதே




கடுப்புடன் பதில் வந்தது.

"நான் எஸ்டேட் விட்டுப் போறதா இல்லை. இப்ப குத்தகை எடுக்கற பத்தும் நானே வாங்கறதா இருக்கேன். உன்னைத் தான் காசு கடன் கேக்கறதா இருக்கேன். என் பதினேழு ஏக்கரையும் உன் நாப்பது ஏக்கரையும் நான் மட்டுமே நின்னு கவனிச்சுக்குவேன். நீ போச் சொன்னாலொழிய இந்த எஸ்டேட் விட்டு நான் போ மாட்டேன்."

"நிசமாவா?"

"சத்தியமா அப்பமுன்னு தமிழ்லதான் பேசுவாங்க. நான் பேசறதெல்லாம் சத்தியம் தான். நீ சொல்லுவியே சிலதெல்லாம் ஞாபகம் இருக்கும். மறக்கவே மறக்காதுன்னு... எனக்காக நீ அருவா எடுத்துட்டு ஓடினது ஞாபகத்தில் இருக்கு. எனக்காக பட்டுப் பாய் வாங்கிட்டு வந்தது ஞாபகத்தில இருக்கு. நான் நிலம் வாங்கறது உன்னை விட்டுப் போறதுக்கில்ல. ஒருவேளை நான் செத்துட்டா... புனிதவதி ஒன்னுமில்லாத நிக்கக் கூடாது. ஒரு சொத்துக்காரியா நிக்கணும். தரைக்குப் போய் நாராயணன் பொண்டாட்டி செருப்படி படக்கூடாது. மலையிலயே ராணி மாதிரி இருக்கணும்.

"டேய்.. மடையா நான் இருக்கேன்டா. அப்படி நீ செத்துப் போயிட்டா நான் பாத்துக்க மாட்டேனா புனிதவதிய... கூறு கெட்டத்தனமா பேசிட்டிருக்க."

"நீ நல்லா பாத்துக்குவ. வெறும் கூலிக்காரியா புனிதவதி இருந்தா உன்னையும் அவளையும் முடிச்சுப் போட்டுத் தப்பா பேசுவாங்க. இல்ல... என் கூட கொஞ்ச நாள் இருடின்னு உலகம் புடவை புடிச்சு இழுக்கும். பதினேழு ஏக்கர் சொத்துக்காரியா இருந்தா எஸ்டேட்டு இருக்குங்கற மரியாதைல ஒழுங்காக நடக்கும். ஊர் மெச்ச தாலி கட்டிக்கிட்ட பொம்பளைகளுக்கு உறவுன்னு ரெண்டு பேராவது இருப்பான். இப்படி நாமா சேத்துக்கிட்ட பொம்பளைங்களுக்கு நாம சேத்து வைக்கற சொத்துதான் மரியாதை. நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதே. இந்த எஸ்டேட் யாரு பேருல இருக்குன்னு எனக்குத் தெரியாது. அத பகவதி அம்மா பேருக்கு மாத்து. வாசல்ல உரிமையாளர்னு அவங்க பேரை போர்டு எழுதி வை.

"இது மொத்தம் ஆச்சி பேர்ல இருக்கில்லா... ஆச்சி அவங்கப்பா அறுவது வருஷத்துக்கு முன்னாடி வாங்கினதுல்லா..." நாச்சியப்பன் முணுமுணுத்த போதுதான் பகவதிக்குத் தன் நிலைமை தெரியவந்தது. நாச்சியப்பன் நிலத்தை அவன் பெயருக்கு மாற்றுவதாகவோ மாற்ற முடியுமென்றோ சொல்லவேயில்லை.

"தண்ணி கட்டுருச்சும்மா." இருள் நேரத்தில் புனிதவதி தேக்ஸாவில் தண்ணீர் விளாவினாள். பாவாடையை நெஞ்சில் கட்டிக் கொண்டு உட்கார்ந்த பகவதியின் தலையில் தண்ணீர் ஊற்றினாள். இருள் கவிழும் அந்த நேரத்தில் பகவதி பெருங்குரலெடுத்து அழுவது அந்த எஸ்டேட்டில் எல்லோருக்கும் கேட்டது.

கையிலிருக்கிற மூங்கில் பிரம்பால் நாராயணன் ஆத்திரத்தோடு புதரை அடித்தான்.

"இத்தினி நாள் வுட்டுட்டு இப்ப அழுது என்னடி புண்ணியம். ஒரு பிடி ஏலக்கா கூட உனக்குச் சொந்தமில்லையே. வாளி தூக்கிட்டுப் போய் காய் பறிக்கக் கூட உனக்குத் தெரியாதே. செட்டியார் சுகமா போயிட்டான். நீதான் கிடந்து நாறப் போற."

இரவு எஸ்டேட்டில் முள்ளம் பன்றிகள் நடமாட்டம் அதிகம் இருந்தது. ஒரு ஆள் ஓடுகின்ற சத்தமாய் கீச்சுக் குரல் கொடுத்தபடி பத்துப் பதினைந்து முள்ளம் பன்றிகள் அலைந்தன.

விடியற்காலையில் அம்பாஸிடர் கார் வந்தது. "நாச்சியப்பன் எஸ்டேட் எது?" விசாரித்துக் கொண்டு நாலு பேர் இறங்கினார்கள்.

அதில் ஒருவன் கூடத்தில் நின்று ஆச்சியோடு சண்டை போட்ட ஆள் என்று கலபமாய் பகவதி புரிந்து கொண்டாள்.

"நான்தேன் தந்தி கொடுத்தேன். உன்னிய பாக்கணும்னுதேன் தந்தி கொடுத்தேன். உன்னண்ட நாலு விஷயம் பேசணும்னுதேன் தந்தி கொடுத்தேன். எதிர் வூட்டு துக்கம் மாதிரி பட்டுன்னு வந்துட்டுப் போயிட்டியா... எனக்கு ஒன்னும் புரியலை. இந்த எஸ்டேட்ல எனக்குப் பாத்தியதை இருக்கு. எப்படின்னு சொல்லட்டுமா..."

யாரும் கேட்காமல் வந்தவர் விளக்கினார்.

நாராயணன் முள்ளம் பன்றிக்காக மூங்கில் குழலில் வெடிமருந்து நிரப்பி, வெயிலில் வரிசையாக வைத்துக் கொண்டிருந்தான்.

வந்த நால்வரில் ஒருவருக்கு அது என்ன என்று புரிந்து போயிற்று.

(தொடரும்)

## ஸ்ரீ காஞ்சி பூஜ்ய ஸ்ரீ பரமாச்சார்யாள் அவர்கள் அத்வைத வித்யாசார்யாள் மஹாராஜா ஸாஹேப் பகவான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களின் வம்சத்தில் உதித்தவர்களே.

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால், 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 130 மாணாக்கர்கள் வேதாத்யாயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஓர் நாள் உணவளிக்க, உணவு வகையினை அனுசரித்து சுமார், முறையே ரூ. 500/-, ரூ. 750/- அல்லது ரூ. 1000/- ஆகிறது. இந்தத் தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 5000/-, ரூ. 7500/- அல்லது ரூ. 10,000/- மூலதனம் ஏற்படுத்தியோ, அவ்வப்போது தொகை அனுப்பியோ, ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம். நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும் :

**அத்வைத வித்யாசார்யா மஹாராஜா ஸாஹேப்**
**ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,**
**42, காமாக்ஷி ஜோசியர் தெரு, கும்பகோணம் - 612 001.**

செக் (or) டிராப்ட் முதலியவைகளை A.V.M.S.G.D.P.S. ஸமிதி என்ற பெயருக்கு அனுப்பலாம்.

......இந்த நன்கொடைக்கு 80-G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு......

குறிப்பு : எம்மிடம் வேத, வைதிக, ப்ரயோக நூல்கள் யாவும் கிடைக்கும். Rs. 3/- க்கு தபால் தலை அனுப்பி எமது **Catalogue** ஐ பெற்றுக் கொள்ளலாம்.

---

ESTD : 1955 — ஸ்ரீ — Ph : 24823




## 22 & 33 நாட்கள் கொண்ட இமாலய பத்ரிநாத், கேதார்நாத், நேபாள், பசுபதிநாத் 176 வது காசியாத்திரை ஸ்பெஷல்

16.7.95, 23.7.95 ஆகிய தேதிகளில் சென்னையிலிருந்து ஆரம்பமாகிறது. நித்திரை வசதி கொண்ட 3 Tier Sleeper கோச்களுகள் புறப்படுகின்றன.

யாத்திரை மார்க்கம் சென்னை, சோலாப்பூர், பண்டரீபுரம், பம்பாய், ஆக்ரா, மதுரா, ஜெய்ப்பூர், அலகாபாத், அயோத்யா, ஸ்ரீகாசி, நேபாள், காத்மாண்ட், கயா, கல்கத்தா, பூரி ஜெகந்நாதம், விஜயவாடா வழியாகச் சென்னை வந்து சேருகிறது. பல அன்பர்களின் வேண்டுகோளின்படி ஜெய்பூரும் சேர்த்துள்ளோம். (கட்டணம் ரூ. 625 தனி)

2-ஆம் வகுப்பு ரயில் டிக்கெட் முழுபர்த் வசதி, காலை காபி, டிபன், மாலை காபி 2 வேளை போஜனம், ரயில் கோச்சிலேயே தங்கும் வசதி கட்டணம் உள்பட நபருக்கு ரூ. 6775 பத்ரிநாத், கேதார்நாத் நேபாள் யாத்திரைக்குப் பஸ் சார்ஜ் ரூ. 2150. தனி நபருக்கு ரூ. 1500 விதம் அட்வான்ஸ் தொகையை செலுத்தி ரிசர்வ் செய்து கொள்ள வேண்டும்.

எமது 16.7.95-ம் தேதிய யாத்திரையில், தேனி அருள் ஜின்னிங் பாக்டரி திரு. S.N.P. குருசாமி, அமலோற்பவம் தம்பதியரும், உறவினர்களும், தூத்துக்குடி திரு. T. பெரியநாடார் - டால்மியபுரம் திரு. M. கோவிந்தராஜ், எசோதா தம்பதியரும், மலேஷியா - சிலாங்கூர், அருநெறி திருக்கூட்டத்தைச் சேர்ந்த திரு. K.U. கன்னியப்பன் அவர்கள் தலைமையில் 22 அன்பர்களும் பேரா. THO. முனியாண்டி அவர்களும், கோலாம்பூர் - ''இந்து தர்மம்'' இதழாசிரியர் சிவஸ்ரீ காஞ்சி தாசன். K. வள்ளிநாயகி தம்பதியரும், பினாங் திரு. R. கோபால கிருஷ்ணன் சென்னை HARITA STEEL INDUSTRIES திரு. S. ரெங்கபாஷ்யம், திருமதி சாந்தாரெங்கபாஷ்யம், சேலம் SPUN PIPES, திரு. S. தங்கையா தம்பதியரும், பதிவு செய்துள்ளார்கள். இன்னும் 16 டிக்கட்டுகளே உள்ளன. 22 நாட்கள் கொண்ட யாத்திரைக்கு கட்டணம், போஜ வசதியுடன் நபருக்கு ரூ. 5575/-.


விவரத்திற்கு ரூ. 2 ஸ்டாம்ப் அனுப்பி, முழு விவரங்கள் பெறலாம்.

**ஸ்ரீநாமகிரி டிராவெல் சர்வீஸ்,**
34-A/2 அக்ரஹாரம், மேலசிந்தாமணி, திருச்சி - 2.



# கருநீல உலகம்

மாலி



இந்தக் கண்ணாடியை, நானே சொந்தமாக உழைத்துச் சம்பாதித்து ஆசையுடன் வாங்கிய இந்தக் கண்ணாடியை, போட்டுக் கொண்டு போகமுடியாத நிலைமை எனக்கு. கேலி பண்ணுவார்களோ என்கிற பயம்.

ஒரு வேலை நிமித்தமாக வெளியே செல்ல ஆயத்தம் பண்ணிக் கொண்டிருக்கிறேன். இன்றைக்கு இரண்டாம் சனிக்கிழமை. விடுமுறை. அதற்காக இன்சூரன்ஸ் கம்பெனிகளுக்கெல்லாம் விடுமுறையாக இருக்க வேண்டிய அவசியமா என்ன? இல்லை என்கிற பதிலையே எனக்குச் சாதகமாக்கி இன்சூரன்ஸ் கம்பெனி ஒன்றுக்குப் போய் இன்றைக்கே premium கட்டிவிடுவதென்று தீர்மானம் செய்திருக்கிறேன்.

Premium notice, பணம், ஒரு ரூபாய் அறுபது காசுகள் சில்லறை, மற்றும் இப்போது எழுதிக்கொண்டிருக்கும் பேனா எல்லாம் எடுத்துக் கொண்டாகி விட்டது. முகம்பார்க்கும் கண்ணாடியில் என்னை ஒரு முறை பார்த்துக் கொண்டு வெயில் கண்ணாடியை எடுத்து மாட்டிக் கொண்டேன். சற்று இருட்டாகத் தெரிந்ததால் முகம் பார்க்கும் கண்ணாடியில், உண்மையிலேயே நான் இந்த வெயில் கண்ணாடியுடன் எப்படி தோற்றமளிக்கிறேன் என்பதைத்

# GOKULAM


*The monthly magazine for children*

**96 pages for just Rs. 5/-**

**MAY '95 ISSUE ON SALE!**

**GOKULAM,**
**Ekkaduthangal, Madras - 600 097.**

**HELPS YOU CREATE A**




*Are you bored with just playing this summer?*
***Gokulam** tells you how to keep busy....*


திருப்தியாகப் பார்க்க முடியாமல் போனது. எப்படியோ நான் நன்றாகத்தான் தோற்றமளிக்கிறேன் என்று அவசர அவசரமாக முடிவெடுத்துக் கொண்டு, விடுவிடுவென்று கீழே இறங்கினேன்.

வீட்டைப் பூட்டிக்கொண்டு, இன்சூரன்ஸ் கம்பெனிக்கு உத்தரவாதமாக அழைத்துச் செல்லும் சாத்தியக் கூறுகள் நிரம்பிய சாலையில் நடந்து கொண்டிருக்கிறேன். நான் அணிந்திருக்கும் கண்ணாடி, வற்ற அடித்துக் கொண்டிருக்கும் வெயிலின் கொடுமையைக் கண்களுக்கு மட்டும் குறைத்துக் காண்பித்துக் கொண்டிருந்தது. எல்லாமே கருநீலமாகத் தெரிந்தது. நிறைய கருநீலக் கிருஷ்ணர்கள். அப்பப்பா, எத்தனையெத்தனை கிருஷ்ண அவதாரங்கள்?...

சைக்கிளில் ஒருகையை ஹாண்ட்பாரிலும், இன்னொரு கையில் ஒரு பையுமாக கிருஷ்ணர். காரோட்டிக் கிருஷ்ணர்; ரிக்ஷா மிதிக்கும் கிருஷ்ணர்... அடடே பெண்கள் வேடத்திலும் கிருஷ்ணிகள்...! ஒரு பெரிய கிருஷ்ணர் இன்னொரு குட்டிக்கிருஷ்ணரை தரதரவென்று குருகுலத்துக்கு இழுத்துப் போதல்... பேஷ் நன்னாயிருக்கிறது! ஜீன்ஸ் கிருஷ்ணர், லோஹிப் கிருஷ்ணி... கொத்தனார் கிருஷ்ணர். ஒரு கிருஷ்ணர் பாவம், அவர் மோபெட்டைத் தரையில் குத்த வைத்துக் கொண்டு ரிப்பேர் பார்த்துக் கொண்டிருக்கிறார்... கண்கொள்ளவில்லை.

இப்போதைவிட திரும்பி வரும்போதுதான் எதிர்வெயில் கண்களைக் கூசவைக்கும். என் எதிரில் வருபவர்கள் வெயில் தாங்காமல் கண்களைக் கூடிய மட்டும் இடுக்கிக் கொண்டு மங்கோலியர்கள் மாதிரி வந்து கொண்டிருந்தார்கள். நல்லவேளை, நான் வெயில் கண்ணாடி அணிந்திருக்கிறேன். இதை நான் எப்போதோ ஒரு முறைதான் அணிகிறேன். வாங்கிக் கொஞ்சநாள் ஆகியிருப்பதால் இப்படியொன்றிருப்பது என் நண்பர்களுக்குக்கூட தெரியாது. தெரிய வேண்டும் என்கிற அவசியமுமில்லைதான். நானாவது சொல்லியிருக்கலாம். ஆனால் கேலி பண்ணுவார்களோ என்று பயந்துதான் சொல்லவில்லை. இது போன்ற, எனக்குப் பரிச்சயமில்லாத பொதுமக்கள் முன்னிலையில், வெயில் கண்ணாடி அணிந்து, என்னுடைய வேட்கையைத் தணித்துக் கொள்கிறேனோ என்னவோ? 'வெயில் அடிக்க வேண்டுமே' என்ற ஆசையும் அடி மனத்தில் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

நான் நினைத்திருந்தால் வேறு யார் மூலமாவது இந்த ப்ரீமியம் கட்டும் ஜோலியைச் செய்திருக்கலாம்... அப்படிச் செய்வதன் மூலம் வெயில் கண்ணாடி அணிந்து உற்சவம் வருகிற என்னுடைய அற்ப வேட்கை தணியாமலேயே போய்விடும் என்கிற பயத்தின் காரணமாகக்கூட நானே இந்த இரண்டாம் சனி வெயிலுக்காகக் காத்திருந்து இன்சூரன்ஸ் கம்பெனிக்குப் போகிற சாக்கில்...சே... அல்பப் பதரே...!

என் அலுவலகத்திற்குப் போய் வரும்போது கூட இந்தக் கண்ணாடியை, நானே சொந்தமாக உழைத்துச் சம்பாதித்து ஆசையுடன் வாங்கிய இந்தக் கண்ணாடியை, போட்டுக் கொண்டு போகமுடியாத நிலைமை எனக்கு. அதுதான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேனே, கேலி பண்ணுவார்களோ என்கிற பயம். நானும் ஒரு ஆண்- நல்ல சினிமாப் படத் தலைப்பு. கண்ணாடிக்காரன்... எங்க ஊர்க்கண்ணாடிக்காரன்...

எதிரே என்னைக் கடந்து செல்லும் சிலர் என்னையே உற்றுப் பார்ப்பதுபோல் தோன்றியது. என் தோற்றப் பொலிவு கூடியிருக்குமோ ஒருவேளை?... கொஞ்சம் கூச்சமாகக்கூட இருந்தது. கண்ணாடி அணிந்தாலும் கூச்சம். அணியாவிட்டால் வெயில் கூச்சம்! கழற்றி பையில் போட்டுவிட்டு நடக்க ஆசை வந்தது. எதிரே ஒரு பத்தடி தூரத்தில் வந்து கொண்டிருப்பவன் என்

னைப் பைத்தியம் என்று நினைத்துத் தொலைப்பான். யாருக்கும் தெரியாமல் பான்ட் பாக்கெட்டில் வைத்துக் கொள்ளலாம். இவன் போகட்டும்... அடடே இன்னொருவன்.. சரி ஒழிகிறது! இன்னும் கொஞ்ச தூரத்தில் இன்சூரன்ஸ் கம்பெனி வந்து விடப் போகிறது. பரவாயில்லை. இப்படிக் கண்ணாடி அணிவதிலும் சில சௌகரியங்கள் இருக்கத்தான் செய்கின்றன. கண்கள் எந்தப் பக்கம் பார்க்கிறது என்பது பரம ரகசியம்... எனக்குக் கருநீலமாகத் தெரிவது, இன்னொருவனுக்கு பிரவுனாகத் தெரியலாம். கண்ணாடியின் தன்மைகளைப் பொறுத்து...

இன்சூரன்ஸ் ஆபீஸ் வந்து விட்டது. கண்ணாடியை ஆசுவாசத்தோடு கழற்றிப் பையில் வைத்துக் கொண்டேன். என்ன வெயில்... முகப்பில் இருந்த நிழலோர வரிசையில் ஏழாவது நான். நேரம் ஆக ஆக என் பின்பும் வரிசை நீண்டு கொண்டிருந்தது. ப்ரீமியம் நோட்டீசை தெருப் பக்கம் இருக்கும் ஜன்னல் வழியாகத்தான் வரிசையில் நின்று கொடுக்க வேண்டும். அது ஒரு பெரிய ஜன்னல் . கவுண்டர் மாதிரியான ஜன்னல். அதன் கதவுகள் திறந்திருந்தாலும், ப்ரீமியம் நோட்டீசுகளை வாங்கி ரசீதைத் தயார் செய்யும் அலுவலர் இன்னும் வரவில்லை. பத்தரை மணியாகி விட்டது. வாடிக்கையாளர்கள் தெருவினில்... இனிமேல் தபாலில் அனுப்பிவிடத் தீர்மானித்து விட்டேன்... சே... கண்ணாடியாம் கண்ணாடி...! இப்படித்தான் சென்ற தடவையும் அலுத்துக் கொண்டது ஞாபகம் வந்தது. ஒரு வழியாக நாங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த மேய்ப்பர் வந்து விட்டார். இவர் நான் கண்ணாடி அணியாமலேயே கருநீலமாகத்தான் இருந்தார்.... சர்...வ்..வ்...வ்...வ அலட்சிய பூஷிதையாகத்தான் செயல்பட்டார்... மணி பத்து நாற்பது. பதினொன்றரை மணிக்கெல்லாம் இந்த 'கவுண்டர்' மாதிரியான ஜன்னல் மாதிரியான ஏதோ ஒன்றை மூடிவிடுவார்கள். காரணம் இன்று சனிக்கிழமை... இதையே யாரோ பின்பக்கம் முணுமுணுக்கிறார்கள் என்பதான பிரமை எனக்கு.


முண்டியடித்துக் கொண்டு வரிசையைப் பற்றிக் கவலையே படாமலேயோ, அல்லது செல்வாக்கைப் பயன்படுத்தியோ காரியங்களைச் சாதிப்பதும் நடந்து கொண்டிருக்கிறது. இந்த மாதிரி வரிசையில் நிற்பது என்பது என்னை மாதிரி நடுத்தர வர்க்கத்திற்குக் கற்றுக் கொடுக்கப்பட்ட ஒன்று. இப்படிக் கற்றுக் கொடுக்கப்படுகிற நிறைய விஷயங்கள்தான் என் வாழ்க்கை நடைமுறைக்கும், என்னுடைய உள்ளார்த்தமான பிரச்னைகளை அணுகுமுறைக்கும் ஒரு வடிவம் கொடுக்கிறதோ? சில சமயங்களில் பிறரின் பிரச்னைகளை எளிதாக அணுகி, அலசி வெவ்வேறு கோணங்கள் கொடுக்க முடிந்த எனக்கு, என்னுடைய பிரச்னைகளை அணுகும் விதம் ஏனோ தாறு மாறாகி விடுகிறது. நானும் ஒரு சாதாரண முறையில், எனக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்ட அல்லது நான் கற்றுக் கொண்ட முறைகள் ஏற்படுத்திய பாதிப்பில் react பண்ண முயல்கிறேன். அப்போது நானும் ஒரு வரிசையில் நிற்பதைப் போன்று உணர்கிறேன். இதெல்லாம் நான் எந்தவிதமான கண்ணாடியைப் போட்டுக் கொண்டிருக்கிறேன் என்பதைப் பொறுத்தது. கண்ணாடியைப் பொறுத்துதான் உண்மை... அதாவது உண்மை இருப்பது போல் பிரமை... உண்மையிலேயே உண்மையென்று ஒன்றுமில்லையோ? என்ன வெயில்...!

ப்ரீமியம் ஒரு வழியாகக் கட்டி, ரசீதை வாங்கிப் பையில் போட்டுக் கொண்டேன். மெயின் ரோடு. கண்ணாடி பையில் இருந்தும் அணியாமல் நடப்பது ஏனோ ஒரு குற்ற உணர்வைத் தூண்டியது. அவஸ்தை... இந்தச் சனியனை வாங்காமலேயே இருந்திருக்கலாம். தயக்கத்துடன் அணிந்து கொண்டேன். மீண்டும் ஒரே கருநீலம்... நடக்க ஆரம்பித்தேன்... இந்தக் கண்ணாடி புறஊதாக் கதிர்களிலிருந்து 100 சதவீதம் பாதுகாப்புத் தரக்கூடியதாம். அண்ணாந்து சூரியனைப் பார்த்துக் கொண்டே நடக்கும் போது, 'நட்' என்று ஒரு கல் தடுக்கி, முகங்குப்புற நான் ஒரு பக்கம்; கண்ணாடி ஒரு பக்கம்- தார்சாலையில் விழுந்து கிடந்த என் கண்ணாடிமேல் ஒரு மாட்டுவண்டியின் சக்கரம் ஏறி இதங்கிக் கொண்டிருந்தது. அப்பாடி...!

"நீங்க நேத்து, டீ.வி.யில 'திருப்புகழ் பெருமை'ன்னு பேசினீங்களே! பார்த்தேன்!"

"நீங்க கொடுத்துவைத்தவர் சார்! எங்க வீட்ல அப்போ எல்லாரும் சூப்பர் ஹிட் முகாப்பலா பார்த்ததால நான் என் புரோகிராமைப் பார்க்கவே முடியலை."

—ஜூலி



# கழுபாக ஓ குவிஸ்



• ஷோபா

• ராதிகா

• உமா மகேஸ்வரி

இங்கே டீ.வி. அறிவிப்பாளர்கள் காட்டும் 'ஆக்ஷன்' பார்க்கும்போது சில பிரபல டீ.வி. தொடர்களின் பெயர்கள் நினைவுக்கு வர வேண்டுமே...?



• விசாலி



• ப்ரியா

விடைகள் :
ஷோபா - டிக் டிக் டிக்
உமா மகேஸ்வரி - கையளவு மனசு
ப்ரியா - சட்டம்
விசாலி - அதிர்ஷ்டம்
ராதிகா - சோதனை

வண்ணப்படங்கள் :
கேமரா திருஞானம்

# பார்த்திபன் கனவு

## 18. பராந்தகபுரத்தில்

சூனியமான அந்த மகேந்திர மண்டபத்தைப் பொன்னன் உள்ளும் புறமும் பல முறை சுற்றிச் சுற்றித் தேடினான். மகாராஜா எப்படி மாயமாய்ப் போயிருப்பார் என்று சிந்தனை செய்தான். நேற்றுச் சாயங்காலம் காட்டு வெள்ளத்தில் கரை சேர்ந்தது முதல் நடந்தனவெல்லாம் ஒருவேளை கனவோ என்று கூட அவனுக்குத் தோன்றியது. இதற்கிடையில் வைத்தியனும் வண்டிக்காரனும் அவனைத் தொந்தரவு செய்யத் தொடங்கினார்கள். தன்னிடம் ஆபத்துக் காலத்தில் செலவுக்காக வைத்திருந்த பொற்காசுகளில் ஒன்றை அவர்களுக்குக் கொடுத்து அனுப்பினான்.

இளவரசருக்கு ஜுரம் முற்றி ஜன்னியின் வேகத்தினால் எழுந்து ஓடிப் போயிருப்பாரோ என்று பொன்னன் மனத்தில் தோன்றிய போது, பகீர் என்றது. அவனும் பித்தம் கொண்டவனைப் போல் அங்குமிங்கும் அலையத் தொடங்கினான். குடுகுடுவென்று நதிக்கரைக்கு ஓடுவான். மறுபடியும் மகேந்திர மண்டபத்துக்கு வந்து ஆசையுடன், நெஞ்சு திக்திக்கென்று அடித்துக் கொள்ள, உள்ளே எட்டிப் பார்ப்பான். மனம் கலங்கியிருந்தபடியால் இன்னது செய்கிறோமென்று தெரியாமல் விக்கிரமன் படுத்திருந்த வைக்கோலை எடுத்து உதறுவான். பிறகு வெளியிலே வந்து, உறையூர் சாலையோடு கொஞ்ச தூரம் போவான். மறுபடியும் திரும்பி வருவான்.

இப்படி ஒரு தடவை அவன் திரும்பி மண்டபத்தை நோக்கி வந்த போது, மண்டபத்திலிருந்து சற்றுத் தூரத்திலிருந்த ஒரு பெரிய இலுப்ப மரத்துக்குப் பின்னால் ஒரு உருவம் மறைவதைக் கண்டான். அது ஒரு சித்திரக் குள்ளனின் வடிவமாகத் தெரிந்தது. கொல்லி மலையில் அருவிப் பாதையில் தான் அன்று பார்த்த பயங்கர உருவங்கள் பொன்னனுக்கு ஞாபகம் வந்தன. நேற்றிரவு இருளில் நடந்த சம்பாஷணையும் நினைவு வந்தது. "ஓஹோ! மகாராஜா நரபலிக்காரர்களின் கையிலேதான் அகப்பட்டுக் கொண்டார்" என்று எண்ணிய போது, பொன்னனுக்கு வந்த ஆத்திரத்துக்கும் துயரத்திற்கும் அளவேயில்லை. இந்த ஆத்திரத்தையெல்லாம் அந்தக் குள்ளன் மேல் காட்டி விடுவது என்ற நோக்கத்துடன் பொன்னன் இலுப்ப மரத்தை நோக்கி வேகமாய்ப் பாய்ந்து சென்றான். தன்னைப் பிடிக்க வருகிறான் என்று தெரியாமல் மறைந்து நின்ற குள்ளன் மேல் திடீரெனப் பாய்ந்து கெட்டியாகப் பிடித்துக் கொண்டு இரண்டு குலுக்குக் குலுக்கினான்.

முதலில் சற்றுத் திகைத்த குள்ளன் விரைவில் சமாளித்துக் கொண்டு, "என்ன அப்பா! என்ன சமாசாரம்? எதற்காக இவ்வளவு ஆத்திரம்?" என்று கேட்டான்.

"அடே குள்ளா! மகாராஜா எங்கே?" என்று பொன்னன் அலறினான்.

"மகாராஜாவா? அது யாரப்பா, மகாராஜா?"

உடனே பொன்னனுக்குத் தன்னுடைய தவறு ஞாபகம் வந்தது. உதட்டைக் கடித்துக் கொண்டு, "அந்த மண்டபத்தில் படுத்திருந்தவர் எங்கே?" என்று கேட்டான்.

குள்ளன் தன்னுடைய இடுப்புத் துணியின் மடியை அவிழ்த்து உதறினான். பொன்னனைக் கேலியாகப் பார்த்து, "ஐயையோ! என் மடியிலே வைத்திருந்தேன். காணோமே!" என்றான்.

பொன்னனுக்கு இந்தக் கேலி ரசிக்காமல் குள்ளனை அடிப்பதற்காகக் கையை ஓங்கினான். துடுப்புப் பிடித்த வைரமேறிய அந்தக் கையின் அடி குள்ளன் மேல் விழுந்திருந்தால் என்ன ஆகியிருக்குமோ, தெரியாது. ஆனால், அதற்குள்ளே குள்ளன் உடம்பை ஒரு நெளி நெளித்துப் பொன்னனுடைய பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து

மறுகணம் மாயமாய் மறைந்தான்.

**பொ**ன்னன் அளவிட முடியாத கோபத்துடன் அங்குமிங்கும் ஓடினான். இதற்குள் இருட்டி விட்டபடியால் பத்தடி தூரத்துக்கு மேல் கண் தெரியவில்லை. மேலும் அந்த இடத்தில் நாலாபுறமும் புதர்களாயிருந்தன. எனவே குள்ளனைக் கண்டு பிடிக்க முடியவில்லை. மிக்க மனச்சோர்வுடன் பொன்னன் திரும்ப யத்தனித்த போது, திடீரென்று அந்த இலுப்ப மரத்தின் மேலேயிருந்து "ஊ" என்று ஆந்தை கத்துவது போல் ஒரு குரல் கேட்டது. பொன்னன் திகிலுடன் மேலே அண்ணாந்து பார்த்தான். அடர்ந்த மரக் கிளையில் இருண்ட குள்ள வடிவம் காணப்பட்டது. இன்னொரு தடவை "ஊ" என்று அழகு காட்டுவது போல் அவ்வுருவம் கூவிற்று.

பொன்னனுக்கு அப்போது வந்த கோபம் இவ்வளவு அவ்வளவு அல்ல. அந்த மரத்தை வேரோடு பிடுங்கிச் சாய்த்து விடலாம் என்று எண்ணினான். அப்போது குள்ளன், "அடே புத்தியற்றவனே! மகா பத்திரகாளியின் பக்தனை உன்னால் என்ன செய்ய முடியும்?" என்று கேட்டான்.

பொன்னனுடைய மனத்தில் இப்போது ஒரு யுக்தி தோன்றியது. அதைப் பற்றி அவன் யோசித்துக் கொண்டிருக்கும்போதே குள்ளன், "அடே முரடா! நீயும் மகா காளியின் பக்தன் ஆகின்றாயா? உன் கஷ்டங்கள் எல்லாம் நீங்கும்" என்றான்.

"என்னையா காளி பக்தனாகச் சொல்லுகிறாய்?" என்று பொன்னன் சிரித்தான்.

"ஏண்டா சிரிக்கிறாய்? ஜாக்கிரதை! காளியின் கோபத்துக்கு ஆளாவாய்!"

அப்போது பொன்னன், "நான் சேர்ந்து விட்டேன், அப்பா! சேர்ந்து விட்டேன். ஆனால் என்ன பிரயோசனம்? கபால பைரவர் எனக்கு இட்ட கட்டளையை நிறைவேற்றத் தவறி விட்டேனே! ஐயோ, அவருக்கு என்ன சொல்வேன்?" என்றான்.

அப்போது குள்ளன், வியப்புடன், "அப்படியா! என்ன கட்டளையிட்டிருந்தார்?" என்று கேட்டான்.

"இந்த மண்டபத்தில் படுத்திருந்தவனைப் பத்திரமாய்க் கொல்லி மலைக்குக் கொண்டு வரச் சொன்னார். நேற்று ராத்திரி இந்த இடத்தில்தான் கட்டளை இட்டார். ஐயோ! தவறி விட்டேனே?" என்று பொன்னன் அழுகிற குரலில் கூறினான்.

"அடடா! முன்னமே சொல்லியிருக்கக் கூடாதா? நீ வருவதற்குச் சற்று முன்னால், காஞ்சிச் சக்கரவர்த்தியின் மகனும் மகளும் இந்த வழியே போனார்கள். அவர்கள் அந்த மண்டபத்தின் அருகில் நின்றார்கள். மண்டபத்திலிருந்து ஒருவனை எடுத்துக் கொண்டு வந்து பல்லக்கில் ஏற்றிக் கொண்டார்கள். அவன் யார் என்று எனக்குத் தெரியவில்லை, உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

இந்தக் கேள்வி பொன்னன் காதில் விழவில்லை. ஏனெனில் அவன் வைத்தியனையும் கட்டை வண்டியையும் அழைத்து வந்த போது எதிரில் குதிரை, பல்லக்கு முதலிய ராஜ பரிவாரங்கள் வருவதைக் கண்டு ஒதுங்கி நின்றான். குதிரை மேல் குந்தவி தேவியைக் கண்டதும் அவளுடைய கண்ணில் பட்டுவிடாமல் வண்டியின் பின்னால் நன்றாய் மறைந்து கொண்டான். பல்லக்கை அவன் கவனிக்கவில்லை. இப்போது அதெல்லாம் பளிச்சென்று ஞாபகம் வந்தது. குள்ளன் சொல்வது உண்மையாயிருக்கலாமென்று தோன்றிற்று.

"ஏனப்பா மௌனமாயிருக்கிறாய்! என்ன யோசிக்கிறாய்?" என்று குள்ளன் மரத்தின் மேலிருந்து கேட்டான்.

பொன்னன் அவனைப் பார்த்து, "என்ன யோசிக்கிறேனா! உன்னை எப்படிக் காளிக்குப் பலிகொடுப்பது என்றுதான் யோசிக்கிறேன்" என்று கூறி, கீழே கிடந்த ஒரு கல்லை எடுத்து, அவன் மேல் வீசி எறிந்தான்.

குள்ளன் அப்போது முன்னம் விக்கிரமன் கத்தியை ஓங்கியவுடன் செய்ததைப் போல் வாயைக் குவித்துக் கொண்டு, தீர்க்கமான ஒரு கூச்சலைக் கிளப்பினான். அந்தப் பயங்கரமான ஒலியைக் கேட்டதும் பொன்னனுக்கு உடம்பெல்லாம் மயிர்க் கூச்சலெடுத்தது. அங்கிருந்து அவன் ஒரே ஓட்டமாக உறையூர்ச் சாலையை நோக்கி ஓடத் தொடங்கினான்.

**அ**ந்தக் காட்டாற்றங்கரையிலிருந்து சுமார் காத தூரத்திலிருந்த பராந்தகபுரம் என்னும் ஊரைப் பொன்னன் அடைந்த போது, இருட்டி ஒரு ஜாமத்துக்கு மேலிருக்கும். ஆனால் அங்கே தீவர்த்தி வெளிச்சமும் வாத்திய முழக்கமுமாய் ஏக தடபுடலாயிருந்தது. பொன்னன் என்னவென்று விசாரித்த போது, சக்கரவர்த்தியின் திருக்குமாரரும், திருக்குமாரியும் விஜயம் செய்திருப்ப

# அமரர் கல்கி

தாகவும், அவர்களுக்கு வரவேற்பு உபசாரங்கள் அவ்வூர்க் கோயிலில் நடந்து கொண்டிருப்பதாகவும், அதற்காக ஊருக்கு வெளியே கூடாரங்கள் அடிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிந்து கொண்டான்.

அவர்கள் ஆலயத்தில் இருக்கும் சமயத்தில் தன்னுடைய சோதனையை முடித்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் கூடாரங்கள் அடிக்கப்பட்டிருந்த இடத்திற்குப் பொன்னன் விரைந்து சென்றான்.

ஊரைச் சேர்ந்தாற்போல் ஒரு மைதானத்தில் கூடாரங்கள் அடிக்கப்பட்டிருந்தன. யுவராஜா மகேந்திரனும் குந்தவி தேவியும் கோயிலுக்குப் போயிருந்தபடியால் இங்கே அவ்வளவு ஜனக்கூட்டம் இல்லை. சில காவற்காரர்கள் மட்டும் அங்குமிங்கும் நின்றார்கள். பணிப் பெண்களும் ஏவலாளர்களும் கூடாரங்களுக்குள் படுக்கை விரித்தல் முதலிய காரியங்களைச் செய்து கொண்டிருந்தார்கள். மைதானத்தின் ஒரு புறத்தில் கிளுவைச் செடிகளால் ஆன உயரமான வேலி அமைந்திருந்தது. அந்த வேலி ஓரமாகப் பொன்னன் சென்றான். ஓரிடத்தில் இரண்டு பணிப் பெண்கள் வம்பு பேசிக் கொண்டிருந்தது அவன் காதில் விழுந்தது.

"ஏண்டி, மரகதம்! திருவெண்ணெய்நல்லூரில் போய் இரவு தங்குவதாக அல்லவா ஏற்பாடு இருந்தது? இங்கே எதற்காகத் தங்கியிருக்கிறோம்?" என்று ஒருத்தி கேட்டாள்.

"உனக்குத் தெரியாதா என்ன? வைத்தியர் சொன்னாராம், நோயாளிக்கு அமைதி வேண்டும் என்று. பல்லக்கிலே நெடுந்தூரம் தூக்கிக் கொண்டு போனால் அவரது உடம்பு நெகிழ்ந்து கொள்ளலாம் என்றாராம். அதற்காகத்தான்...."

"ஆமாண்டி, அது யாரடி அப்பேர்ப்பட்ட நோயாளி? அவனுக்காக இவ்வளவு தடபுடல் படுகிறதே?"

"அவன் செண்பகத் தீவிலிருந்து வந்த இரத்தின வியாபாரியாம். தேவசேனன் என்று பெயராம். மாமல்லபுரத்து வீதியில் நமது தேவியைப் பார்த்தானாம். உறையூரில் இருக்கும் தன் தாயாரைப் பார்க்கப் போவதாகச் சொன்னானாம். அவன் அந்த ஆற்றங்கரை மண்டபத்தில் அநாதையாய்க் கிடக்கவே, தேவி அவனை நம்மோடு உறையூருக்கு அழைத்துக் கொண்டு போகலாமென்று பல்லக்கில் ஏற்றிக்



கொண்டான்."

"அடி மரகதம்! இதில் ஏதோ மர்மம் இருக்கிறதடி!"

"என்னடி மர்மம்!"

"கட்டாயம் இருக்கிறது. இல்லாவிட்டால் வழியில் அநாதையாய்க் கிடந்தவனுக்கு இப்படி இராஜ வைத்தியமும் இராஜோபசாரமும் நடக்காதடி மரகதம்!"

"சீச்சீ......"

"அவனை இந்த ஊரிலேயே விட்டு விட்டு வைத்தியம் பார்த்து அனுப்பி வைக்கச் சொல்லலாமல்லவா? நம்மோடு எதற்காகப் பல்லக்கில் ஏற்றி அழைத்துப் போக வேண்டும்?"

"ஆமாண்டி, தங்கம்! அதற்குக் காரணம் இருக்கிறது. ஆனால் உனக்குச் சொல்ல மாட்டேன்."

"சொல்லாமற் போனால், நான் உனோடு பேசப் போவதில்லை."

"இல்லையடி, கோபித்துக் கொள்ளாதே, இங்கே கிட்ட வா, சொல்லுகிறேன். யார் காதிலாவது விழப் போகிறது!"

"சொல்லு பின்னே...."

"உறையூர் இராஜகுமாரன் செண்பகத் தீவில்தான் இருக்கிறானாம். அவனை நம் தேவி காஞ்சி நகர் வீதியிலே பார்த்ததும், அவனை மன்னிக்கும்படி சக்கரவர்த்தியிடம் வேண்டிக் கொண்டதும் தெரியுமோ, இல்லையோ? அந்த இராஜகுமாரனைப் பற்றி விசாரித்துத் தெரிந்து கொள்ளலாமென்றுதான் பின்னோடு இந்த இரத்தின வியாபாரியை அழைத்து வருகிறார்."

"ஓகோ! அப்படியானால் உறையூருக்குப்



போன பிறகும் இவன் நம்முடன் வஸந்த மாளிகையிலேதான் இருப்பானாக்கும்?"

"ஆமாம்."

"ஏண்டி மரகதம், அந்த இரத்தின வியாபாரியை நீ பார்த்தாயாடி?"

"பார்க்காமலென்ன? நான்தானே அவனுக்கு மருந்து கொடுக்கிறேன்!"

"அவன் இளம் வயதாமேடி?"

"ஆமாம்; அதனாலென்ன?"

"ரொம்ப அழகாயிருக்கிறானாமே? முகத்தில் களை சொட்டுகிறதாமே?"

"அதற்காக...."

"எனக்கென்னமோ மரகதம், கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. அப்படிப்பட்டவனை நமது தேவி தன் பக்கத்தில்..."

"அடி, பாவி! தேவியைப் பற்றி ஏதாவது சொன்னாயோ, உன் நாக்கைச் சுட்டு விடுவேன்!"

"சண்டாளி! தேவியைப் பற்றி நான் என்னடி சொன்னேன்?"

"ஏதோ சொல்ல ஆரம்பித்தாயே!"

"சீ! தேவியைப் பற்றிச் சொல்வேனாடி? அப்படிப்பட்ட இளம் ரூபவானுக்குப் பக்கத்தில் உன்னைக் கொண்டு போய்விட்டு, மருந்தும் கொடுக்கச் சொன்னால் நீ இலேசுப்பட்டவளாடி? பெரிய மாயக்காரியாச்சே! வேறு ஏதாவது மருந்து கொடுத்து விட்டாயானால்.... ஐயையோ! இன்னாதேடி!...."

இப்படிப் பேசிக் கொண்டே பணிப் பெண்கள் இருவரும் வேலி ஓரத்திலிருந்து அப்பால் போய் விட்டார்கள்.

பொன்னன் மேற்கண்ட சம்பாஷணையில் ஒரு வார்த்தை விடாமல் மிகவும் கவனமாய்க் கேட்டான். அவன் மனத்தில் வெகு காலமாக அறிந்திராத மகிழ்ச்சி உண்டாயிற்று. இன்னும் கொஞ்சம் தூரம் வேலி ஓரமாகப் போனான். ஒரு கூடாரத்தில் கொஞ்சம் கலகலப்பாயிருந்தது. அங்கே வேலியைச் சற்று விலக்கிக் கொண்டு உற்று நோக்கினான். தீவர்த்தி வெளிச்சத்தில், கட்டிலில் விக்கிரமன் படுத்திருப்பதும், பக்கத்தில் வைத்தியர் உட்கார்ந்து கையைப் பிடித்துப் பார்த்துக் கொண்டிருப்பதும் தெரிந்தது.

சற்று நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டே இருந்து விட்டுப் பொன்னன் அங்கிருந்து திரும்பினான்.

## 19. பொன்னனின் சிந்தனைகள்

பொன்னன் பராந்தகபுரத்தின் வீதியில் போய்க்கொண்டிருந்தபோது, எதிரில் இராஜ பரிவாரங்கள் வந்துகொண்டிருப்பதைக் கண்டு ஒதுங்கி நின்றான். பல்லக்கில் அமர்ந்திருந்த குந்தவி தேவியைத் தீவர்த்தி வெளிச்சத்தில் பார்த்தான். இதற்கு முன் அவன் மனத்தில் என்றும் தோன்றாத பக்தியும் மரியாதையும் அவனிடம் அவனுக்கு உண்டாயிற்று. தெய்வீக சௌந்தரியம் பொருந்திய இந்தத் தேவியின் உள்ளமும் தெய்வத் தன்மை கொண்டதாகவல்லவா இருக்கிறது? வழியில் அநாதையாய்க் கிடந்தவனைத் தூக்கி தன்னுடைய பல்லக்கில் ஏற்றிக் கொண்டு வருவதற்கு எவ்வளவு கருணை, தயாளம், பெருந்தன்மை வேண்டும்?

அன்றிரவு பொன்னன் அவ்வூர்க் கோயில் பிராகாரத்தில் படுத்துக் கொண்டே மேலே செய்ய வேண்டியதைப் பற்றிச் சிந்தனை செய்தான். இளவரசரோ சரியான சம்ரக்ஷணையில் இருக்கிறார். குந்தவிதேவியைக் காட்டிலும் திறமையாக அவரைத் தன்னால் கவனிக்க முடியாது. இளவரசர் எங்கே போக விரும்பினாரோ அவ்விடத்துக்கே குந்தவிதேவி அவரை அழைத்துப் போகிறார். ஏதோ சோழ வம்சத்தின் குலதெய்வமே இவ்விதம் ஏற்பாடு செய்ததென்று சொல்லும்படி எல்லாம் நடந்திருக்கிறது. எப்படியும் இளவரசருக்கு உடம்பு நன்றாய் குணமாகச் சில தினங்கள் ஆகும். அதுவரைக்கும் அவரைத் தான் பார்க்கவோ, பேசவோ சௌகரியப்படாது. பின்னர், அவருக்கு உடம்பு குணமாகும் வரையில் தான் என்ன செய்வது? பின்னோடு தொடர்ந்து போவதினாலோ, உறையூருக்குப் போய் உட்கார்ந்திருப்பதினாலோ என்ன பிரயோஜனம்? அதைக் காட்டிலும் ராணி அருள்மொழித் தேவியை விடுதலை செய்ய வேண்டிய காரியத்தைப் பார்ப்பது நலமல்லவா? இதற்குச் சிவனடியாரைப் போய்ப் பார்த்து அவருடன் கலந்து ஆலோசனை செய்ய வேண்டும். அருள்மொழித் தேவியைப் பற்றி ஏதாவது துப்புத் தெரிந்தவுடன் தம்மிடம் வந்து தெரிவிக்கும்படி சொல்லியிருக்கிறார். தம்மைச் சந்திக்க வேண்டிய இடத்தையும்

### அருள்வாக்கு

ஆசார்யாள் என்றாலே "அத்வைதம், அத்வைதம்" என்று மட்டும் கொண்டாடுவது அவரைப் பூர்ணமாகச் சொல்வதாகாது. அத்வைதந்தான் லக்ஷ்யம், அதை அசைக்க முடியாத ஸித்தாந்தமாக அவர் ஸ்தாபித்து விட்டாரென்றாலும், அதை நேராக அப்யஸிக்கக்கூடிய அதிகாரிகள் ரொம்பவும் ஸ்வல்பமே. எல்லா ஜனங்களுக்கும் அவர் செய்த பரமோபகாரம், சித்த சுத்திக்குப் பரம உபாயமான கர்மாவை சாஸ்த்ரப்படி மறுபடி பண்ண வைத்ததும், அன்பு வழியிலேயே அமைந்த ஆலய வழிபாட்டைப் பெரிய அளவில் புத்துயிர் பெறவைத்து பக்தியை வளர்த்ததுந்தான். 'ஷண்மதங்கள்' என்பதாக அவரவரும் இஷ்டதெய்வ உபாஸனையை ஸௌம்யமான முறையில் பண்ணவும், அப்படிப் பண்ணும் போதே மற்ற தெய்வங்களை நிந்திக்காமல்



அவையும் தங்களுடைய இஷ்ட தெய்வமாகியுள்ள அதே பரமாத்மாவின் வேறு ரூபங்கள்தான் என்ற த்ருஷ்டியுடன் அவற்றையும் 'பஞ்சாயதனம்' என்ற பெயரில் தங்கள் இஷ்ட மூர்த்திக்குப் பரிவாரங்களாக வைத்து ஆராதிக்கவும் அவர் ஏற்பாடு செய்து நம் மதத்துக்குள்ளேயே உட்பிணக்குகள் அறுவதற்கு வழி செய்தார்.

**- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.**

குறிப்பிட்டிருக்கிறார். மாமல்லபுரத்துக்குச் சமீபத்தில் அடர்ந்த காட்டுக்குள் மறைந்திருக்கும் சிற்பியின் வீட்டைக் கண்டு பிடிக்கச் சொல்லியிருக்கிறார். அங்கே போய் அவரைச் சந்தித்து எல்லா விஷயங்களையும் சொல்லி, அவருடைய யோசனைப்படி நடப்பதுதான் உசிதம் என்று தீர்மானித்தான்.

மறுநாள் காலையில் இராஜ பரிவாரங்கள் பராந்தகபுரத்தை விட்டுக் கிளம்பி உறையூர்ச் சாலையில் போவதைத் தூர இருந்து பொன்னன் பார்த்து, "பகவானே! எங்கள் இளவரசரைக் காப்பாற்று; நான் மாமல்லபுரத்திலிருந்து திரும்பி வருவதற்குள் அவர் உடம்பு பூரணமாய்க் குணமாகி விட வேண்டும்" என்று மனத்திற்குள் வேண்டிக் கொண்டான். பரிவாரங்கள் மறைந்ததும், எதிர்த் திசையை நோக்கி நடக்கலானான்.

அவனுடைய கால்கள் மாமல்லபுரத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோதிலும் உள்ளம் மட்டும் இளவரசர் படுத்திருந்த பல்லக்குடன் உறையூரை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

குந்தவி தேவியின் பராமரிப்பில் இளவரசர் இருப்பதினால் ஏற்படக்கூடிய அபாயம் அவனுக்கு அடிக்கடி நினைவு வந்து கொண்டிருந்தது. பல்லக்கில் படுத்திருக்கும் நோயாளி உண்மையில் சோழ நாட்டு இளவரசர் என்பதைக் குந்தவி அறிந்தால் என்ன ஆகும்? ஜுர வேகத்தில் இளவரசர் பிதற்றும் போது அந்த உண்மை வெளியாகி விடலாமல்லவா? அல்லது வஸந்த மாளிகையில் அவர் நல்லுணர்வு பெற்றதும், திடீரென்று பழைய இடங்களைப் பார்க்கும் வியப்பினால் தாம் இன்னார் என்பதை வெளியிட்டு விடலாமல்லவா? - அதனால் ஒரு வேளை ஏதேனும் விபரீதம் விளைந்து விடுமோ? குந்தவி தேவிக்கு உண்மை தெரிந்தால் அவளுடைய தமையனுக்கும் தெரிந்துதான் தீரும். பிறகு, சக்கரவர்த்திக்கும் தெரியாமலிராது. சக்கரவர்த்தியினால் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டவர் அல்லவா இளவரசர்? அதை மீறிப் பொய் வேஷத்தில் வந்ததற்குச் சிட்சை மரணமேயல்லவா?

ஆனால், கடவுள் அருளால் அப்படியெல்லாம் ஒன்றும் நேராது என்று பொன்னன் தன்னைத்தானே தைரியப்படுத்திக் கொண்டான். குந்தவி தேவிக்கு ஒருவேளை உண்மை தெரிந்தால், அவர் இளவரசரைக் காப்பாற்றவே முயல்வார். முன்னம், தேசப் பிரஷ்ட தண்டனை விதிக்கப்பட்டபோதே அவருக்காக மன்னிப்புக் கோரி மன்றாடியதாகக் கேள்விப்பட்டிருக்கிறோமே? அதைப் பற்றிச் சிவனடியார் அருள்மொழி ராணியிடம் எவ்வளவெல்லாம் சொன்னார்?....

சிவனடியாரையும் குந்தவி தேவியையும் பற்றிச் சேர்ந்தாற்போல் நினைத்ததும், பொன்னனுக்கு நேற்றிரவு மகேந்திர மண்டபத்தின் வாசலில் நடந்த சம்பாஷணை நினைவு வந்தது. மனத்தில் இன்னதென்று சொல்ல முடியாத கவலையும் திகிலும் உண்டாயின. சிவனடியாரைப் பிடித்துக் கொண்டு வரும்படி குந்தவி தேவி மாரப்ப பூபதிக்குக் கட்டளையிட்டிருக்கிறாராமே? இது எதற்காக?

அந்தச் சிவனடியார்தான் யார்? அவர் உண்மையில் உத்தம புருஷர்தானா? அல்லது கபட சந்நியாசியா? சோழ குலத்துக்கு அவர் உண்மையில் சிநேகிதரா? அல்லது சிநேகிதர் போல் நடிக்கும் பகைவரா? இளவரசர் திரும்பி வந்திருப்பது பற்றியும், இப்போது குந்தவி தேவியின் பராமரிப்பில் வஸந்த மாளிகைக்குப் போயிருப்பது பற்றியும் அவரிடம் சொல்லலாமா, கூடாதா! - ஐயோ அதையெல்லாம் பற்றி இளவரசரிடம் கலந்து பேசாமற் போனோமே என்று பொன்னன் துக்கித்தான்.

இன்னொரு விஷயம் பொன்னனுக்கு வியப்பை அளித்தது. இளவரசரை ஒற்றர் தலைவன் ஆபத்திலிருந்து விடுவித்த பிறகு அன்றிரவு காட்டில் ஒரு சிற்பியின் வீட்டில் தங்கியதாக அல்லவா சொன்னார்! தன்னைச் சிவனடியார் வந்து காணச் சொல்லியிருப்பதும் காட்டின் நடுவில் உள்ள சிற்பியின் வீட்டில்தானே? அடையாளங்களைப் பார்த்தால் இரண்டும் ஒரே இடமாகவல்லவா தோன்றுகிறது? ஒற்றர் தலைவனுக்கும் சிவனடியாருக்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டா?

சிவனடியார் ஒரு மகான் என்ற எண்ணம் பொன்னனுக்குப் பூரணமாக இருந்தது. அவர் தன்னை ஒரு சமயம் மாரப்பனிடம் அகப்படாமல் காப்பாற்றியதை

அவன் எந்த நாளும் மறக்க முடியாது. இன்னும், அருள்மொழிராணி அவரிடம் பூரண நம்பிக்கை வைத்திருந்தார் என்பதிலும் சந்தேகமில்லை.

ஆனாலும், அவர் உண்மையான சிவனடியார் அல்ல - அவ்விதம் வேஷம் பூண்டவர் என்று சந்தேகிப்பதற்கு வேண்டிய ஆதாரங்கள் இருந்தன. வள்ளி இவ்விதம் சந்தேகத்துடன் அவர் யார் என்பதைப் பற்றியும் ஒரு ஊகம் கூறினாள். அதாவது அவர் உண்மையில் பார்த்திப மகாராஜாதான் - மகாராஜா போர்க்களத்தில் சாகவில்லை - தன்னந்தனியே தாம் உயிர் தப்பி வந்ததை அவர் யாருக்கும் தெரிவிக்க விரும்பாமல் சிவனடியார் வேஷம் பூண்டிருக்கிறார் என்று வள்ளி சொன்னாள். அவளுடைய மதியூகத்தில் பொன்னனுக்கு எவ்வளவோ நம்பிக்கை உண்டு என்றாலும் இதை அவனால் ஒப்புக் கொள்ள முடியவில்லை.

அவனுடைய சந்தேகத்தை அதிகப்படுத்தும்படியான இன்னொரு சம்பவம் நேரிட்டிருந்தது. அருள்மொழிராணி தீர்த்த யாத்திரை கிளம்பிச் சென்ற பிறகு பொன்னன் பெரிதும் மனச்சோர்வு அடைந்திருந்தான். தோணித் துறைக்குச் சற்றுத் தூரத்தில் காட்டிலிருந்த ஐயனார் கோயிலுக்குப் போய்ப் பிரார்த்தனை செய்யலாமென்று அவன் போனான். அங்கே சந்நிதியில் வைத்திருந்த மண் யானைகளில் ஒன்று உடைந்து விழுந்திருப்பதைக் கண்டான். அதனருகில் அவன் சென்று பார்த்தபோது, மண் குதிரையின் வயிற்றுக்குள் ஒரு துணி மூட்டை இருந்தது. அதிசயத்துடன் அவன் அந்த மூட்டையை அவிழ்த்துப் பார்த்தான். அதற்குள் புலித்தோல், ருத்திராட்சம், பொய் ஜடாமுடி முதலியவைகள் இருக்கக் கண்டான். அப்போது அவனுக்கு உண்டான வியப்புக்கு அளவேயில்லை. யோசிக்க, யோசிக்க இது சிவனடியாருடைய வேஷப் பொருள்கள்தான் என்பது நிச்சயமாயிற்று.

அந்த வேஷதாரி யார்? அவர் நல்லவரா, பொல்லாத சூழ்ச்சிக்காரரா? அவரை நம்பலாமா, கூடாதா? அந்தப் பயங்கர மகா கபால பைரவர் மாரப்பன் காதோடு, சிவனடியாரைப் பற்றி ஏதோ சொன்னாரே அது என்ன? கருணையும், தயாளமும் உருக் கொண்ட குந்தவி தேவி எதற்காக அச்சிவனடியார் மேல் வெறுப்புக் கொண்டிருக்கிறாள்?

இதெல்லாம் பொன்னனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆனால், அவன் ஒன்று நிச்சயம் செய்து கொண்டான். இந்தத் தடவை சிவனடியாரைச் சந்தித்ததும் அவரைத் தெளிவாக "சுவாமி! தாங்கள் யார்?" என்று கேட்டு விட வேண்டியதுதான். திருப்தியான விடை சொன்னால் இளவரசர் திரும்பி வந்ததைப் பற்றியும், அருள்மொழி ராணி இருக்குமிடத்தைப் பற்றியும் அவருக்குத் தெரிவிக்க வேண்டும். தகுந்த மறுமொழி கூறித் தன் சந்தேகத்தைத் தீர்க்காவிட்டால் ஒன்றும் சொல்லாமல் திரும்பி வந்துவிட வேண்டும். இளவரசருக்கு உடம்பு குணமான பிறகு அவரை எப்படியாவது சந்தித்துக் கலந்து ஆலோசித்துக் கொண்டு மேற்காரியங்களைச் செய்ய வேண்டும்.

இவ்விதம் பலவிதமாக யோசனைகளும், தீர்மானங்களும் செய்து கொண்டு பொன்னன் வழி நடந்து சென்றான். ஆங்காங்கே போக்கு வண்டிகள் கிடைக்கும்போதெல்லாம் ஏறிக் கொண்டு போனான். கடைசியில், மாமல்லபுரம் போகும் குறுக்குப் பாதையிலும் இறங்கிச் சென்றான். காட்டின் மத்தியிலுள்ள சிற்பியின் வீட்டுக்குச் சிவனடியார் மிகத் தெளிவாக அடையாளங்கள் சொல்லியிருந்தார். அந்த அடையாளங்கள் புலப்படுகின்றனவா என்று வெகு கவனமாய்ப் பார்த்துக் கொண்டு அவன் போய்க் கொண்டிருக்கையில் அவனுக்கு எதிரே சற்றுத் தூரத்தில் ஒரு குதிரை வருவதையும், அது சட்டென்று குறுக்கே காட்டில் புகுந்து போவதையும் பார்த்தான். குதிரை மேலிருந்த வீரன் தன்னைக் கவனித்தானா இல்லையா என்பது பொன்னனுக்குத் தெரியவில்லை. ஆனால் இளவரசர் சொன்ன அடையாளத்திலிருந்து அவன் ஒற்றர் தலைவனாயிருக்கலாமென்று தோன்றியது.

திரும்ப வேண்டிய இடத்தைப் பற்றிச் சிவனடியார் கூறிய அடையாளங்கள் அதே இடத்தில் காணப்படவே பொன்னன் அங்கேயே தானும் திரும்பினான். படர்ந்து தழைத்திருந்த செடிகொடிகளை உராய்ந்து கொண்டு குதிரை போகும் சப்தம் நன்றாய்க் கேட்டுக் கொண்டிருந்தது. அந்த வழியைத் தொடர்ந்து பொன்னனும் போனான். ஒரு நாழிகை நேரம் இவ்விதம் போன பிறகு கொஞ்சம் திறந்த வெளி காணப்பட்டது. அதில் ஒரு அழகான சிற்ப வீடு தோன்றியது. அவன் சாலையில் பார்த்த குதிரை அவ்வீட்டின் பக்கத்தில் நிற்பதைக் கண்டான். அதே சமயத்தில் அவ்வீட்டிற்குள்ளிருந்து சிவனடியார் வெளியே வந்து புன்னகையுடன் அவனை வரவேற்றார். பொன்னனோ, அளவில்லாத வியப்புடனும் திகைப்புடனும் அவரை உற்று நோக்கினான்.

(தொடரும்)




"என் மாமியாருக்கு இரண்டு காதும் கேட்கவே கேட்காதுடி...."

"தெரியாமலா உன் அப்பா உனக்கு 'பாக்கியம்'னு பேரு வெச்சிருக்கிறாரு!"

- எம். அசோக்ராஜா

அமுதசுரபி - பார்க்டவுன் பெனிபிட் பண்டு லிட்
இணைந்து நடத்திய புதினப் போட்டியில்
ரூ 10,000 பரிசு பெற்ற பிரபல எழுத்தாளர்

# ஸ்ரீவேணுகோபாலன்

எழுதிய

# சொப்பன நிலா

# அமுதசுரபி

**48ஆம் ஆண்டு முதல் இதழிலிருந்து (மே'95)**

தொடர்கதையாக வெளிவருகிறது

அமுதசுரபி - கதை, கட்டுரைகள், பல புதுமைப்பகுதிகள்
நிறைந்த இலக்கிய மாத இதழ்.

தனிப் பிரதி: ரூ 6. ஆண்டுச்சந்தா: ரூ 72

ஒவ்வொரு மாதமும் முதல் தேதியன்று கிடைக்கும்.
உங்கள் ஊர் விற்பனையாளரிடம் கேட்டு வாங்குங்கள்.

---

mpbf

## மெட்ராஸ் பேரியமேட் பெனிபிட் பண்ட் லிட்.,

மாருதி காம்ப்ளெக்ஸ், நெ. 90, சூளை நெடுஞ்சாலை,
சென்னை - 112. Ph.: 5321048 Regd.No.18-20964

## வைப்பு நிதிகள் : (FIXED DEPOSITS)

ஓய்வுற்றோர்க்கள், விதவைகள், ஊனமுற்றோர்கள், முன்னாள் இராணுவத்தினர்கள், அறக்கட்டளைகள், மற்றும் 50 வயது மேற்பட்டவர்களுக்கு ரூ 10,000/- ம் அதற்கு மேலும் டெப்பாஸிட் செய்பவர்களுக்கு ஒரு வருடத்திற்கு
**20%+ 1* %** சிறப்பு வட்டி வழங்கப்படும். (*இக் குறிப்பிட்ட முதிர்வு காலத்தில் தொகையுடன் சேர்த்து வழங்கப்படும்.)

| காலவரை | 3 மாதங்கள் | 6 மாதங்கள் | 1 வருடம் | 2 வருடம் | 3 வருடங்கள் அதற்கு மேலும் |
|---|---|---|---|---|---|
| வட்டிவிகிதம் | 14% | 15% | 18% | 19% | 20% |

### நூதன வைப்புத்தொகை திட்டம் :

உயர்தரகல்வி / திருமணம் ஆகியவற்றிக்கு ரூ 500/- முதலீட்டில்
132 மாதங்கள் (11 வருடங்கள்) கழித்து Rs. 5,000/-
252 மாதங்கள் (21 வருடங்கள்) கழித்து Rs. 40,000/- பெறலாம்.
ரூ 7,500/- முதலீட்டில் 15 வருடங்கள் கழித்து ரூ 1,26,000/- பெறலாம்.

### நகைகடன்

1 சவரன் தங்க நகையின் மீது ரூ 2,400/- வரை 22.5% ஆண்டு
வட்டியுடன் வழங்கப்படும். பரிமாற்றங்கள் பங்குதாரர்களுக்கு மட்டும்

நினைவில் நீங்காத நன்னாளில்
ரூ 1000/- வீதம் நான்கு வருடங்கள்
தொடர்ந்து செலுத்தினால் 5ம் வருடம்
முதல் நீங்கள் செலுத்திய அதே நாள்
ரூ 1,250/- வீதம் ஆயுள் காலம்
முழுவதும் கிடைக்கும்

**M. முகுந்தன்**
நிர்வாக தலைவர்

Komala Ads

# அரை ஏக்கர் தென்னை; ஐம்பது ரூபாய்!

பஸ் இன்னும் வந்தபாடில்லை. சிவகாமி 'கால் வலிக்குதும்மா' என்றாள். இன்னும் ஸ்ரீவைகுண்டம் போய், பஸ் மாறி திருநெல்வேலி போக ராத்திரியாகிவிடும். அதற்குள் சிவகாமி நிச்சயம் இடுப்பில் ஏறிவிடும். அதை ஒரு கையில் தூக்கிக் கொண்டு பெருமாள்புரம் பஸ்ஸுக்காக நிற்க வேண்டும். கடவுளே! போகாமலிருந்து விடலாமா?

போகாமலிருந்து விட்டால் திரும்ப வீட்டுக்குப் போக வேண்டும். வீடு என்றால் நாகராஜன் திருப்பி எட்டி உதைப்பான்.

''போ நாயே. உங்கப்பன்ட்ட உன் பங்கு சொத்த வாங்கிட்டு வா. பிசினஸ் ஆரம்பிக்கணும்.''

மொத்தம் அறுபதாயிரம். பதினைஞ்சு பவுன் நகை. இதைப் போட்டு நாகராஜனைக் கட்டி வைக்கவே அப்பா திணறிப் போய் விட்டார். ஆறு மாசம் முன்தான் தங்கை சொர்ணா கல்யாணம் முடிந்தது. அந்த கடனிலே தத்தளித்துக் கொண்டிருப்பார். இப்போது போய் என் சொத்தைத் தா என்றால் என்ன செய்வார்?

சொத்து என்ன பெரிய சொத்து. நாகர்கோவிலில் மூன்று தென்னந்தோப்பு. ஒவ்வொன்றும் அரை ஏக்கர். இரண்டு வயல். கல்யாணத்தோடேயே ஒரு தென்னந் தோப்பு இவளுக்கு என்று பேசி முடிவானதுதான். ஆனால் இப்பவே அதற்கென்ன அவசரமாம் என்று தோன்றாதா? ஏற்கெனவே கழுத்து மூங்கும் கடனில் அப்பா. அதுதான் நாகராஜனுக்கு பயமாய் இருக்கும். எங்கே கடன் தொல்லையில் மனுஷன் தென்னந்தோப்பை விற்று விடப் போகிறாரோ... என்று. பிஸினஸ் இரண்டாம்பட்சம்தான்.

''யம்மா... பஸ் வருது...''

பெருமாள்புரத்தில் இறங்கும் போது இருட்டி விட்டிருந்தது. பெட்ரோமாக்ஸ் விளக்கு பொருத்தும் முயற்சியில் பெட்டிக்கடை முதலாளிகள் இருந்தனர். சிவகாமி இடுப்பில் ஏறிக் கொண்டாள். அப்பாவுக்காக 'அரசனில்' வாங்கின முறுக்கும் கேக்கும் ஒரு கையில் ஆடிற்று. ஹவுசிங் போர்ட் திருப்பத்தில் சிவகாமி மிட்டாய் கேட்டது.

''இருடி... தாத்தா வீடு வந்துட்டுது.''

வீட்டில் அப்பா இல்லை. அம்மா வெளியே வந்து பார்த்தவள் ''ஏய்...'' என்று சந்தோஷப் பட்டாள். விஷயம் கேட்டால் இந்த சந்தோஷம் வற்றிவிடும்.

''என்னடி... மாப்ளே வர்லியா?''

''இல்லம்மா... வேல.''

''என்ன திடீர்னு?''

இப்படி வாசலில் வைத்து ஆரம்பிக்கக்கூடிய விஷயமா இது? மெல்ல சொல்ல வேண்டும். இன்று முடிந்தால் ராத்திரி; இல்லையென்றால் காலையில். மத்யானம் கிளம்பினால் போதும்.

''சும்மா திடீர் ப்ளான்.''

உள்ளே ஹாலுக்குள் நுழைந்ததும் டி.வி. கறுப்பு வெள்ளையில் ஓடிக் கொண்டிருந்தது. பதினாலு இன்ச்.

''கலர் டி.வி. எங்கம்மா?''

''சொர்ணா கல்யாணத்துல ஏக கடன். ஒருத்தன் திடீர்னு நாளைக்குக் காலைல எட்டாயிரம் வேணும்னான். நகை எல்லாம் வித்தாச்சு. டி.வி.ய யாரோ பிரண்டுட்ட வித்துட்டார் அப்பா. நம்ம சேதுதான் அவன் பழைய டி.வி.ய சும்மா கொணர்ந்து போட்டான். ஆமா... சாப்பிடுறியா. காப்பி குடிச்சிட்டு சாப்பிடுறியா?''

சேது... அப்பாவிடம் க்ளார்க்காய் இருந்தவன். அவனுக்கே இத்தனை விசாலம் என்றால்...

''என்னடி யோசனை?''

''ஒண்ணுமில்லம்மா.

அப்பா

தமயந்தி

வரட்டும். ஒரேடியா சாப்பிட்டுறலாம்.''

''அப்பா வர நேரமாயிரும். பஸ் எப்ப வருதோ!''

''பஸ்லயா? புல்லட் இல்லே?''

அம்மா நிமிர்ந்து பார்த்தாள்.

''வித்தாச்சு.''

''ஏம்மா?''

''தட்டுப்பாடு. சிவகாமி சாப்பிடுறியாம்மா? பாட்டி சாம்பார் வச்சிருக்கேனாம்.'' சிவகாமி வெறித்தது.

மனசுக்குள் நாகராஜன் நினைவு வந்தது. அவன் ஒரு தடவை திருநெல்வேலி வரும் போது மஞ்சள் காமாலை வந்து விட, அப்பா பேயாய் அலைந்தார். அப்போது சிவகாமிக்கு ஆறு மாதம். ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டும் என்று டாக்டர் சொல்லி விட்டார்.

ஜங்ஷன் ஷிபாவில் நாகராஜன் சேர்க்கப்பட்டான். அப்பா ஆஸ்பத்திரிக்கும் வீட்டுக்குமாய் ஓடினார். சேது சாப்பாடு எடுத்துப் போனான்.

**பிளட் பிரஷரா? யாரால்? மகள்களால். அவர்கள் கல்யாணத்துக்குப் பணம் திரட்டினதால். சீர் செய்ததால். பிரசவம் பார்த்ததால்....**

ஒரு வாரம் கழித்து நாகராஜன் வீட்டுக்கு வந்தான். மெலிந்து, கறுத்து, காரம் சேர்க்காத உணவுடன்.

அந்த முறை கிளம்பும் போது அப்பாவிடம் கேட்டாள்.

''எவ்ளோப்பா ஆச்சு?''

''எவ்ளோவானா என்னம்மா?''

''இல்லப்பா... போய் அனுப்பிடறேன்.''

''போயிட்டு வா. அடிக்கடி வா. அது போதும்.''


எவ்வளவு ஆயிற்று என்று கூட நாகராஜன் கேட்கவில்லை. கேட்கத் தோன்றவில்லையோ என்னவோ. அதெல்லாம் மறந்து போனதுதான் அதை விடக் கொடுமை!

அப்பா வர பத்து மணியாகி விட்டது. சிவகாமி தூங்கி விட்டாள். அப்பா வந்ததும் அவளை நெற்றியில் இழுத்து முத்தமிட்டார். தூக்கத்தில் சிவகாமி நெளிந்தாள். இப்படித்தானே எங்களையும் வளர்த்திருப்பார்.

''மாப்ள சுகமா?''

''ம். நீங்க நல்லாருக்கீங்களாப்பா?''





**''இதுக்குத்தான், டீ.வியைப் பார்த்து, யோகாசனமெல்லாம் கத்துக்காதீங்கன்னு தலைப்பாடா அடிச்சுக்கிட்டேன்.''**

**- ஜூலி**

''ம். இருக்கேன்'' சிரித்தார்.

''சொர்ணா கல்யாணத்துல ரொம்ப கடனாயி டுச்சாப்பா...?''

''ரொம்ப ஒன்னுமில்ல... சமாளிச்சுறலாம்.''

''எப்படி? டீ.வி., பைக்... ஒண்ணொண்ணா வித்தா?''

''அம்மா சொன்னாளா?''

''ஆமா.''

அப்பா நிமிர்ந்து பார்த்தார். உள்ளே குத்திற்று. நாகராஜன் ஆஸ்பத்திரி செலவுக்கு இரண்டாயிரம் ஆகியிருக்கும். அதை இப்போது கூட கொடுக்க லாம். கொடுத்தால் அப்பாவுக்கு நிச்சயம் உதவியா யிருக்கும்.

வட்டமாய் உட்கார்ந்து தரையில் சாப்பிட்டார் கள். இங்கேதான் இப்படி எல்லோரும் உட்கார்ந்து சாப்பிடுவது எல்லாம். அங்கே நாகராஜனுக்குப் பரிமாறி விட்டுத்தான் சாப்பிட வேண்டும்.

''என்ன யோசனை. சாப்பிடலை?'' அப்பா முதுகைத் தட்டினார்.

பிரமாதமான சாப்பாடில்லை. முருங்கைக்காய் சாம்பார். கோஸ் கூட்டு. இவர்கள் வந்ததால் அப்ப ளம். ஆனாலும் ருசி பிரமாதமாய்த் தோன்றிற்று.

''வர வர நான் சமைச்ச சாப்டுறதே நல்லால்ல. இதென்ன இவ்ளோ ருசியா படுது.''

''வா. அடிக்கடி வா. நீதான் வர மாட்டேங் கிற.''

''வர்றேன். அடிக்கடி வர்றேன்ப்பா'' குரல் தளும்பிற்று இவளுக்கு.

''சொர்ணாவும் மாப்ளையும் போன வாரம் வந்தாங்க.''

''நல்லாருக்காளாப்பா?''

''ம். ஆடி சீர் செய்யணும்.''

''என்ன செய்யப் போறீங்கப்பா?''

''வரும். வழி வரும். உங்கல்லாருக்கும் வரலே?''

அப்பா சாப்பிட்டதும் அம்மா ஏதோ மாத் திரையை நீட்டினாள்.

''என்னதுப்பா?''

''மருந்து.''

''எதுக்குப்பா?''

''பிரஷர் ஏறிட்டு; டாக்டர் பிடிடா மாத்திரைன் னுட்டான்.''

பிளட் பிரஷரா? யாரால்? மகள்களால். அவர் கள் கல்யாணத்துக்குப் பணம் திரட்டினதால். சீர் செய்ததால். பிரசவம் பார்த்ததால். இப்போது கூட அப்பா கேட்கலாம். 'நாகராஜனுக்காகச் செலவு செய்ததைத் தர முடியுமா?' ஆனால் கேட்க வில்லை! என்ன மனசு, என்ன மனசு!

ராத்திரி தூக்கம் வரவில்லை. இந்த நிலை யில் எப்படி 'என் பாகத்தைப் பிரித்துத் தா' என்று கேட்க முடியும்? அப்பாவுக்கு உள்ள பெருந் தன்மை எனக்கு எப்படி எள்ளளவும் இல்லாது போகும்?

மறுநாள் ''கிளம்புறேன்ப்பா'' என்றபோது சிவகாமி கையில் அப்பா ஐம்பது ரூபாய் தாளைத் திணித்தார்.

''எதுக்குப்பா?''

''இருக்கட்டும்மா. பிள்ளைக்கு ஏதாவது வாங்கிக் கொடு.''

கடவுளே! மீண்டும் சம்மட்டியால் ஓங்கி ஓர் அடி. சிவகாமி அதைக் கைக்குள் இடுக்கிக் கொண் டது.

''அப்பா... ஏன் நீங்க நாகர்கோவில் நிலத்தை வித்துறக் கூடாது? கடன் ஒழியுமே!''

''அது ஒவ்வொண்ணும் ஒவ்வொருத்திக்கு வாக்கு கொடுத்தாச்சு. ஏதோ எங்க காலத்துக் கப்புறம் உங்களுக்கு ஒன்னு வேணாம்?''

'உங்க காலத்திலேயே அதை வாங்கிவிட முயற்சி நடக்கிறதென்பது உங்களுக்குத் தெரியுமா அப்பா?'

தெரியாது. தெரியக்கூடாது. தெரிய வேண் டாம்.

''அப்பா....!''

''என்னம்மா....?''

''என் பங்கை வித்து நீங்க கடனை அடைச் சுடுங்கப்பா.''

''நீ சொன்னதே போதும் தாயி.''

''இல்லப்பா நிஜமா சொல்றேன்.''

அப்பா கண்கலங்க நின்றார்.

அப்பா பஸ் ஏற்றி விட்டார். நிலத்தை விற் பாரா விற்க மாட்டாரோ தெரியவில்லை. பாகம் பிரித்துத் தாவென்று கேட்கவில்லை. அது போதும். பஸ் புகை கக்கி கிளம்பிற்று. மனசுக்குள்ளிருந்து புகை வெளிக் கிளம்பி ஜன்னல் வழி வெளியேற, மனசு லேசானது.

''சிவகாமி!''

''என்னம்மா?'' சிவகாமி சிரித்தாள்.

''அம்பது ரூபாய தொலைச்சிராதே. அப்பாட்ட கொடுத்து ஏதாவது வாங்கிக்க... என்ன?''

சிவகாமி சந்தோஷமாய்ச் சிரித்தாள். நாசரேத் போக, இருட்டிவிடும்.



வெற்றி பெறும் வகைகள், நீடித்துழைக்கும் நிறங்கள்
பாம்பேடையிங்
பள்ளிச்
சீருடைத்துணிகள்.
வெற்றி வாகை சூடி என்றும் முன்னணியில் உள்ள இத்துணிகள் கீழ் கண்ட சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளன:
துவைக்க மற்றும் உடுக்க எளிதானது
நிறங்கள் மங்காது
ஒவ்வொரு சலவைக்குப் பின்னும் புத்தம் புதியது போல் தோன்றும்
சுருக்கங்கள் ஏற்படாது
உங்களுக்குத் தேவையான நிறங்களில் கிடைக்கிறது.
பாம்பே டையிங் பள்ளிச் சீருடை அணிவரிசையில் சூட்டிங்ஸ் மற்றும் தூய பருத்தி மற்றும் பாலியெஸ்டர் ப்ளெண்டுடன் கூடிய ஷர்ட்டிங்ஸ், பள்ளிப் பைகள் மற்றும் லாக்ஸ்களும் உட்பட்டதாகும்.
SEASONS/BD/687/TAM
பள்ளிச் சீருடைத்துணிகள்
பாம்பே டையிங்

**ஜோதிர்லதா கிரிஜா**

# மணிக்கொடி

இந்தியாவில் புதிய வைசிராய் மவுண்ட்பேட்டன் பதவியேற்றதும் இந்தியத் தலைவர்களையெல்லாம் சந்தித்தார். மனம் விட்டுப் பேசினார். காந்திஜியைச் சந்தித்து அவர் விவாதித்தபோது, "பிரிவினையைத் தவிர நீங்கள் வேறு எது செய்தாலும் சம்மதமே," என்றார் அவர்.

தேசம் பிளவுபடக் கூடாது என்பதற்காக, "ஜின்னாவையே பிரதமராக்கி விடலாம். அவரே அமைச்சரவை அமைக்கட்டும்," என்று கூறும் எல்லைக்கும் போனார் காந்தியடிகள். ஆனால் யாருமே இந்த யோசனையை ஒப்புக் கொள்ளவில்லை.

நேருவையும் வல்லபபாய் படேலையும் சந்தித்துப் பிரிவினைக்கு அவர்களின் ஒப்புதலைப் பெற்ற பின்னர், மறுபடியும் காந்தியடிகளைச் சந்தித்த மவுண்ட்பேட்டனிடம், "எனது பிணத்தின் மீதுதான் பிரிவினையைக் கொண்டு வர முடியும்," என்றார் அவர். ஒரு காலகட்டத்தில், 'நீங்களே இதைக் கைவிட்டாலும் நான் கைவிடுவதாக இல்லை' என்று ராஜாஜி தயாரித்திருந்த பிரிவினைத் திட்டத்தை எதிர்த்திருந்த காந்தியடிகள்தாம் இன்று இப்படித் தலைகீழாகப் பேசினார்! இதற்கான காரணம் ராஜாஜியின் திட்டத்துக்கும் இதற்கும் நிறைய வேறுபாடு உண்டு என்பதுதான் என்றாலும் காந்திஜி காரணங்களை வெளியிடவில்லை.

மவுண்ட்பேட்டன் நிலையைத் திரும்பவும் எடுத்துச் சொன்னதும், காந்தியடிகள் முழுமனத்துடனல்லாத ஒப்புதலைப் பிரிவினைக்கு வழங்கினார்.

நேரு, நாட்டு மக்களுக்கு வானொலியில் உரையாற்றினார். "பிரிவினையை ஏற்க நாம் மறுத்துப் பிடிவாதம் செய்தால், நமக்கு இப்போதைக்குச் சுதந்திரம் கிடைக்காது. காந்திஜியே பிரிவினைக்கு ஒத்துக் கொண்டு விட்ட பிறகு நாமும் அதை ஏற்றுக் கொள்ளுவதைத் தவிர வேறு வழியே இல்லை" என்ற வரிகள் அவரது பேச்சில் முக்கியமானவை.

பிரிவினையைத் துளியும் ஒப்புக் கொள்ளாதவர்களில் அபுல்கலாம் ஆஜாதும் ஒருவராக இருந்தார்.

நாடு பிரிக்கப்பட்டுவிடும் என்பது உறுதியானதும் நாடு முழுவதும் கொந்தளிப்பு ஏற்பட்டது. கலவரங்கள் தில்லியிலும் பஞ்சாபிலும் நடைபெற்றன. எண்ணிறந்த கொலைகள் நிகழ்ந்தன. கொள்ளைகள், தீயிட்டு அழித்தல் போன்ற ரவுடித்தனங்களைக் கட்டுப்படுத்தவோ அடக்கவோ அரசு எதுவும் செய்யாது செயலற்றிருந்தது.

மணவாளநாயுடு பரபரப்புடன் அதிகாலையில் ராமசாமியின் வீட்டுக்கு வந்தார்.

"வர்ற ஆகஸ்டு 15ஆம் தேதியே சுதந்திரம் தந்துடறாங்களாங்காணும். பி.பி.சில சொன்னான்."

"அட!"

"ஆமா, அய்யர்வாள். ஒரு வழியா நம்ம போராட்டம் ஒரு முடிவுக்கு வரப் போகுது."

"அதுக்குள்ள ரொம்பவுந்தான் சந்தோஷப்பட்டுக்காதேயும். இன்னும் ஒண்ணரை மாசம் இருக்கு. அதுக்குள்ள என்ன வேணா நடக்கலாம்."

"இனிமே எந்த மாற்றமும் இருக்காது, அய்யர்வாள். ஜூன், 1948-க்குள்ள தர்றேன்னவன் இப்ப ஆகஸ்டு 47க்குக் குடுத்துடறேன்னு இன்னும் வெரசா இறங்கி வந்துட்டான். இந்தியா தன்னோட கையை விட்டுப் போனாப் போதும்னு அவிங்க



அவனுக்குன்னு தோணுது. இல்லையா, அய்யர்வாள்?"

"இன்னும் இருக்கிற இந்த ஒண்ணரை மாசத்துக்குள்ள ரத்த ஆறுகள் ஓடாம இருக்கணும்," என்று கங்கா குறுக்கிட்டுக் கூறினான்.

"ரமணியும் நானும் சுதந்திர தின விழாவை டில்லிக்குப் போய்ப் பார்க்கலாம்னு இருக்கோம், அஞ்சனா மாமி."

"நல்ல ஐடியா."




"அமராவதி மாமி எங்கே?"

"தங்கத்தோட கடைக்குப் போயிருக்கா.... உங்கிட்ட ஒண்ணு சொல்லணும், கங்கா."

"சொல்லுங்கோ..." என்ற கங்காவின் பார்வை அவளையும் அறியாது சுவரில் தொங்கியபடி சிரித்துக்கொண்டிருந்த பவித்ராவின் புகைப்படத்தின் மேல் பதிந்து மீண்டது.

"சுதந்திரம் கிடைச்சுடப் போறது. இனிமேலும் நீ பிடிவாதம் பிடிக்காம சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கணும்."

கங்கா சிரித்தான். "அது என்னால முடியவே முடியாது. சாரி."

"நீ இப்படி காலம் முழுக்க பிரும்மச்சாரியாவே இருந்தா, ஒரு நல்ல கணவன் ஒரு பொண்

**நமக்கு வன்முறையால் சுதந்திரம் கிடைத்ததா, இல்லாவிட்டால் அகிம்சை வழியிலா? எந்த வழியில்?**

ணுக்குக் கிடைக்கிற வாய்ப்பை அநியாயமாப் பறிக்கிறேன்னு அர்த்தம்."

கங்கா கடகடவென்று சிரித்தான். "பவித்ரா மாதிரி ஒரு பொண்ணுக்கு மட்டும்தான் என்னால நல்ல கணவனா இருக்க முடியும்."

"பவித்ரா மாதிரி எத்தனையோ பொண்ணுகள் இருக்கா, கங்கா. நான் உனக்குத் தேடித் தர்றேன்."

"இந்த உலகத்துல ஒரே ஒரு பவித்ராதான் இருக்க முடியும். ஒரே ஒரு கங்காதான் இருக்க முடியும்."

"இவ்வளவு பிடிவாதம் கூடாது கங்கா உனக்கு. வய

சான அப்பாவை நெனச்சுப் பாரு. உங்க அத்தை, பாவம், ஒரு தாயாரை விட உசந்த வள்னே நான் சொல்லுவேன்."

"குழந்தைகளோட சந்தோஷந்தான் பெரிசுன்னு நினைக்கிறவாதான் உண்மை யான அப்பா - அம்மா.. தவிர..."

"தவிர...?"

"........"

"சும்மா சொல்லு, கங்கா. ஏன் தயங் கறே?"

"நான் ஒண்ணு சொல்ல வந்தேன்... வேணாம், தப்பு."

"சொல்ல வந்ததைச் சொல்லிடு, கங்கா. அப்புறம் ராத்திரி முழுக்க என்னால தூங்க முடியாது. எதுவானாலும் பரவால்லே. நான் தப்பாவே எடுத்துக்க மாட்டேன்."

"என்ன சொல்ல வந்தேன்னா.... நீங்க கல் யாணமே பண்ணிக்கல்லே. லவ் பண்ணின தாவும் தெரியல்லே. அதான் என்னோட மனசு உங்களுக்குப் புரியல்லேன்னு சொல்ல வந்தேன்."

அஞ்சனா உடனே தனது பார்வையை விலக்கிக் கொண்டாள். அவள் கண்கள் கணத்துக்குள் நிறைந்து விட்டதைக் கண் ணுற்ற கங்கா பதறிப் போனான்.

"ஐம் ஸாரி, அஞ்சனா மாமி. வெரி ஸாரி... தெரியாம விளையாட்டுத்தனமா, திறுக்குத்தனமா, வாயில வந்ததைச் சொல் லிட்டேன். மன்னிச்சுக்குங்கோ."

"பரவால்லே, கங்கா... நானும் லவ் பண்ணி இருக்கேன். ஆனா... யாருக்குமே தெரியாது."

"உங்க தங்கைக்குக் கூடவா?"

"நான் யாரை 'லவ்' பண்ணினேனோ அவருக்கே அந்த விஷயம் தெரியாது! அப் புறம்னா தங்கைக்குத் தெரியறதுக்கு?"

"யாரு, மாமி?"

"இத்தனை வயசு கழிச்சு அதைப் பத்திப் பேசறதே தப்பு. அசட்டுத்தனம். ஆனாலும் என்னமோ வாயில வந்துடுத்து."

"யாரது, மாமி? நீங்களே அவர்கிட்ட சொல்லி இருந்திருக்கலாமே?"

"சொல்லக் கூடாத 'லவ்' அது, கங்கா. தப்பான 'லவ்'. வரக் கூடாத 'லவ்'. ஆனா வந்துடுத்து. என்ன செய்ய? ஊமை கண்ட கனவு மாதிரி மனசுக்குள்ளேயே ஆழமாக் குழிதோண்டிப் புதைச்சுட்டேன். யாருக்கும் தெரியாது."

"யாரு மாமி அது? எனக்குத் தெரிஞ்ச வரா?"

"ஆமா, கங்கா, உனக்கு ரொம்ப நெருக்க மானவர்.... உங்கப்பா!"

கங்கா அதிர்ச்சியில் நெட்டுக்குத் தானான். அவன் கண்கள் விரிந்து கொண் டன. விழிகளில் வியப்பும் வேதனையும் தெரிந்தன.

"கல்யாணம் ஆன ஒருத்தர் மேல 'லவ்' வரலாமா? தப்பில்லே அது? சொல்லு, கங்கா."

கங்கா பிரமித்துப் போய் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

"இப்ப ஒரு வேகத்துல நான் சொன்னது எதையும் சத்தியமா நீ யார்கிட்டயும் சொல்லக் கூடாது. உன்னைத் தாண்டி இது யாருக்குமே போகக் கூடாது."

"சத்தியமாப் போகாது. ஆனா அப் பாவை நினைச்சுண்டே வாழ்ந்துட்ட நீங்க என்னைப் பவித்ராவை மறக்கச் சொல் றேளே, நியாயமா அஞ்சனா மாமி?"

சற்று நேரம் அஞ்சனா பதில் சொல்லா திருந்தாள். பிறகு, "நான் கல்யாணமே பண் ணிக்க வேண்டாம்னு இருந்தவதானே? அத னால என்னோட ஒரிஜினல் முடிவுப்படி நான் இப்படியே இருந்துட்டேன். நீ அப்படி இல்லியே?"

"கல்யாணமே பண்ணிக்காம இருக் கணும்னு நான் நினைச்சதில்லேதான். ஒத் துக்கறேன். ஆனா, கல்யாணம் பண் ணிண்டா அது பவித்ராவைத்தான்கிறது தானே என்னோட நெனைப்பா இருந்தது? நான் மட்டும் அதுலேருந்து மாற முடியுமா?"

"நன்னாத்தான் பேசி மடக்கறே...."

வெளியே போயிருந்த அமராவதியும் தங்கமும் சாமான்கள் வாங்கிய பைகளுடன் திரும்பி வந்தார்கள். அதன் பிறகு அன்றைய அரசியல் நிலவரம் பற்றி நிறையப் பேசி னார்கள். கொஞ்ச நேரத்தில் வெளியே போயிருந்த நரேந்திரநாத் பானர்ஜியும் வர, அவர்களுக்குப் பேசுவதற்கும் அலசுவதற்கும் நிறைய விஷயங்கள் அகப்பட்டன.

கங்காவும் ரமணியும் சுதந்திர தின விழாவைப் பார்க்க தில்லி போக இருப் பதையறிந்ததும், நரேந்திரநாத் பானர்ஜி தானும் வருவதாக உற்சாகத்துடன் கூறி னான். பின்னர் கங்கா விடைபெற்றுக் கிளம் பினான்.

'உனக்கு ரொம்ப நெருக்கமானவர்...


"என்னது, உங்கப்பா தினம் ரெண்டு டீ.வி.யாவது தின்பாரா? நம்ப முடி யலையே!"

"எங்க வீட்ல, டீ.வி.ன்னா, தயிர் வடைன்னு அர்த்தம்!"

— ஜூலி

உங்கப்பா’ எனும் அஞ்சனாவின் சொற்கள் வெகு நேரம் வரையில் அவன் செவிகளில் ஒலித்தவாறு இருந்தன. அன்றிரவு அவனுக்குத் தூக்கம் வரவில்லை.

மூவரும் தில்லியை இரண்டு நாட்கள் முன்னதாகவே அடைந்து விட்டார்கள். கனாட் பிளேசின் விடுதி ஒன்றில் அவர்களுக்கு ஓர் அறை ஒரு நண்பர் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அடுத்த கட்டடம் ஒட்டலாக இருந்தது.

சுதந்திர நாளுக்குரிய கோலாகலத்துடன் தில்லி விழாக் கோலம் பூண்டிருந்தது. வெள்ளைக்காரர்கள் நிறைய பேர் ஆங்காங்கு சுறுசுறுப்பாகத் தெருக்களில், கடைகளில், ரெயில்வே நிலையத்தில், விமான தளத்தில் என்று கும்பல் கும்பலாய்க் குடும்பங்களுடன் காணப்பட்டார்கள். இந்தியாவை விட்டுக் கிளம்பி தாய்நாடு திரும்ப நேர்ந்து விட்டதில் அவர்களுக்கெல்லாம் ஒரு பக்கம் மகிழ்ச்சி என்றாலும் இன்னொரு பக்கம் வருத்தம்தான் என்று அவர்களின் முகங்களைப் பார்த்து மூவரும் நினைத்தார்கள்.

ஓய்வான அவ்விரண்டு நாட்களிலும், கங்காவும் நரேந்திரநாத் பானர்ஜியும் ரமணிக்கு டில்லி முழுவதையும் சுற்றிக் காட்டினார்கள். யமுனா நதிக்கரையில் அமைந்திருந்த செங்கோட்டை, ஜும்மா மசூதி, காஷ்மீரி கேட், குதுப்மினார், புரானா கிலா, ஹுமாயூன் கல்லறை, ராஜ்காட்-சலீம்கர், ஆக்ராவில் தாஜ்மகால் என்று கிட்டத்தட்ட எல்லா இடங்களுக்கும் போனார்கள்.

ஆகஸ்டு பதினான்காம் நாள் இரவிலிருந்தே மக்கள் தெருக்களில் சாரி சாரியாக நடந்து அமைச்சர்கள் ஊர்வலம் செல்ல இருந்த வீதிகளின் இருமருங்கிலும் கூடத் தொடங்கி விட்டார்கள்.

இந்திய வரலாற்றில் சிறப்பு மிக்க அத்திருப்பம் அன்றிரவு சரியாக மணி பன்னிரண்டு அடித்ததும் தொடங்கியது. பதினைந்தாம் நாளின் விடியல் நோக்கி உலகம் புறப்படத் தொடங்கிய அந்த இருண்ட நேரத்தில் இந்தியா ஒளி பெற்றது.

சுதந்திர நாளைத் தொடங்கி வைத்து ஜவாஹர்லால் நேரு பேசலானார்.

‘உலகம் உறங்கிக் கொண்டிருக்கும் இந்த நள்ளிரவு நேரத்தில், இந்தியா வாழ்வும் விடுதலையும் அடைந்து விழித்தெழுந்துள்ளது. ஒரு யுகம் முடிவுற்றுப் பழைமையிலிருந்து வெளியேறிப் புதுமையை நோக்கி அடியெடுத்து வைக்கும் வேளையும், நீண்ட காலமாக அடக்கி வைக்கப்பட்டு வந்துள்ள ஒரு நாட்டின் ஆன்மாவின் குரல் கேட்கும் வேளையும், வரலாற்றில் எப்போதாவதுதான் வரும்’ என்ற வாக்கியத்துடன் அவர் தமது பேச்சைத் தொடங்கித் தொடர்ந்து பேசினார்.

மவுண்ட் பேட்டன் சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் - ஜெனரலாக நியமனம் பெற்றார். அவையின் தலைவர் ராஜேந்திர பிரசாத் உலகெங்களுமிருந்து வந்து குவிந்த வாழ்த்துச் செய்திகளைப் படித்தார். மவுண்ட்பேட்டன் இங்கிலாந்து மன்னரின் வாழ்த்தைப் படித்தார்.

தமது நன்றியுரையிடையே ராஜேந்திர பிரசாத் கூறினார். “நாம் அடைந்துள்ள வெற்றிக்கு நம் தியாகங்களும், நாம் பட்ட துன்பங்களும் பெருமளவுக்குக் காரணங்களானாலும், உலகத்துச் சக்திகளும் நிகழ்ச்சிகளின் போக்கும் நமக்கு உதவியுள்ளன என்பதும் உண்மையாகும். பிரிட்டிஷ் மக்களின் ஜனநாயகக் கோட்பாடுகளுடையவும், வரலாற்று மரபுகளுடையவும் உச்ச நிலையே நமது சுதந்திரத்தில் முடிந்தது.”

பதவியேற்புப் பிரமாணம் முடிந்த பின் அமைச்சர்களின் ஊர்வலம் நடைபெற்றது. லார்ட் மவுண்ட்பேட்டனும், லேடி மவுண்ட்பேட்டனும் பவனி வந்த போது இலட்சக்கணக்கில் கூடி நின்ற மக்கள் மகிழ்ச்சியுடன் ஆரவாரம் செய்தார்கள். ‘மவுண்ட்பேட்டன் தம்பதியரே! உங்கள் நாட்டு அரசு எங்களைப் பலநூறு ஆண்டுகள் அடிமைப்படுத்தி இருந்தபோதிலும், எங்களுக்கு வெள்ளையர் மீது எத்தகைய கசப்போ காழ்ப்போ துளியும் இல்லை; இனி நாம் நண்பர்களாக இருக்கலாம்’ என்று சொல்லுவது போன்று மக்களின் ஆரவாரம் இருந்தது என்று ஒரு மாபெரும் வரலாற்று ஆசிரியர் பின்னர் தமது நூலில் எழுதினார்.

அங்குலம் அங்குலமாக நகர்ந்து கொண்டிருந்த கூட்டத்தில், நரேந்திரநாத் பானர்ஜி, ரமணி, கங்கா ஆகியோர் கைகோத்தவண்ணம் நகர்ந்தார்கள்.

“பாவம் காந்திஜி! இந்தக் கோலாகலத்தில் எந்தப் பங்கும் ஏற்காமல் அவர் கல்கத்தாவில் அமைதியை நிலைநாட்டும் பணியில் இன்னமும் இருக்கிறார்.”






"மேற்கு வங்காள கவர்னராக ராஜாஜி போயிருக்கிறார் - அவர்தான் அங்குள்ள வகுப்புக் கலவர நிலவரத்தைச் சமாளிக்க வல்லவர் என்பதால்."

"ஆமாம். காந்திஜியைப் பொறுத்தவரை இந்தியாவின் வரலாற்றில் இந்த ஆகஸ்ட் 15 ஒரு துக்க நாள். அவர் கனவு கண்ட ஏக இந்தியா அமையவில்லை. இந்துக்களும் முஸ்லிம்களும் இணைந்திருக்கச் சம்மதிக்க வில்லை. அவர் அநேகமாக இன்று பட்டினி இருந்தாலும் இருப்பார்."

ஆமாம். காந்தியடிகள் அன்று உபவாச மிருந்தார். ஒருவரை ஒருவர் அடித்துக் காயப் படுத்திக் கொண்டு அலங்கோலமாய்க் கிடந்த பிள்ளைகளைப் பெற்ற துயரத்தில் கண்ணீர் விடும் தாயின் நிலையில் அவர் இருந்தார் என்பது மிகை இல்லை.

பேசிக் கொண்டே வெகு தொலைவு நடந்த பிறகே சாலைகளில் கால் வீசி நடக்க முடிந்தது.

"கங்கா, நீ என்ன நினைக்கிறாய் நமக்கு வன்முறையால் சுதந்திரம் கிடைத்ததா, இல்லாவிட்டால் அகிம்சை வழியிலா? எந்த வழியில்?" என்று கேட்டான் நரேந்திரநாத் பானர்ஜி.

ராஜாராமய்யருடன் அன்றொரு நாள் அது பற்றிய பந்தயத்தில் தான் ஈடுபட்டதும், நூறு ரூபாய் பந்தயம் கட்டியதும் அப்போது கங்காவுக்கு ஞாபகம் வந்தன.

"இரண்டு வழிகளும் தத்தம் பங்கை ஆற்றி இருக்கின்றன என்றே தோன்றுகிறது. மிஸ்டர் நரேந்திரநாத்" என்றான் ரமணி.

"உலகத் தலைவர்களின் கருத்துக்கள், உலகப் பத்திரிகைகளின் கருத்துக்கள், உலகத் துப் பெரிய மனிதர்களின் கண்டனங்கள் - பெர்னார்ட் ஷா, பெர்ட்ராண்ட் ரஸ்ஸல், மிஸ் பேர்ல் பக் போன்றவர்களின் ஆணித் தரமான அறிவிப்புகள் - குறிப்பாக அமெரிக் காவில் பிரிட்டனுக்கு எதிராக ஏற்பட்ட எண்ணங்களின் வெளிப்பாடு இவையும் தான் உதவியுள்ளன" என்றான் கங்கா.

பேசிக் கொண்டே விடுதியை அடைந் தார்கள்.

"எப்படியோ ஒருவழியா சுதந்திரம் கிடைச்சுடுத்து..." என்ற கங்கா அந்த உணர்வை அனுபவிப்பவன் போல் கால் களை நீட்டி மல்லாந்து படுத்தான்.

"ஆனா அதுக்கு நாம குடுத்த விலைதான் அதிகம்," என்றான் ரமணி.

"உண்மைதான்," என்றான் நரேந்திரநாத் பானர்ஜி.

பவித்ராவை எண்ணி அவன் கண்கள் கலங்கின. "நானும் அமராவதியும் மகளைப்

# அபிராமியின் டெபாசிட் சேகரிப்பு விழா

## 14.04.95 முதல் 14.05.95 வரை

### வைப்பு நிதி திட்டம்

உங்கள் முதலீடு ரூ. **5000/-**

| காலம் | வட்டி விகிதம் |
|---|---|
| 46 நாட்கள் | 15% |
| 91 நாட்கள் | 18% |
| 6 மாதங்கள் | 21% |
| 1 வருடம் | 24% |

### மறு முதலீட்டுத் திட்டம்

தொகை : ரூ. 1000/- காலம் 1 வருடம்

1000/- த்தின் பெருக்கம்

| | | |
|---|---|---|
| 12 MONTHS | Rs. 1270/- | 27% |
| 24 MONTHS | Rs. 1610/- | 30.5% |
| 36 MONTHS | Rs. 2050/- | 35% |
| 48 MONTHS | Rs. 2600/- | 40% |
| 60 MONTHS | Rs. 3305/- | 46% |

(மாதம் ரூ. 100 வீதம்)

### தொடர் வைப்பு நிதி திட்டம்

| காலம் | முதிர்வு தொகை | காலம் | முதிர்வு தொகை |
|---|---|---|---|
| 12 MONTHS | Rs. 1357/- | 48 MONTHS | Rs. 7259/- |
| 24 MONTHS | Rs. 3011/- | 60 MONTHS | Rs. 9977/- |
| 36 MONTHS | Rs. 4974/- | | |

### அஷ்டலெஷ்மி டெபாசிட் திட்டம்

**ரூ. 3000/- = ரூ. 108190/- 15வருடங்கள்**

### பணத்திற்கு உத்திரவாதம் எப்படி?

★ 20 ஆண்டு கால தேக்கு மரத் திட்டத்தின் மூலம் பல ஆயிரக்கணக்கான உறுப்பினர்களைப் பெற்றுள்ளோம்.

★ பல நூற்றுக்கணக்கான நிலங்களை பக்க பலமாக கொண்டுள்ளது.

★ நன்னீர் இறால் வளர்ப்பு திட்டத்தில் முன்னோடியாக திகழ்கிறது

★ வீட்டுமனை மற்றும் அபார்ட்மெண்ட் கட்டி தருகிறோம்.

★ முன்தேதியிட்ட காசோலை வழங்குகிறோம்.

★ 14.05.95 வரை 3% ஊக்கத்தொகை தருகிறோம்

★ பென்ஷனர் மற்றும் விதவைகளுக்கு 1% அதிக வட்டி வழங்கப்படும்.

## அபிராமி HIGH இன்வெஸ்ட்மெண்ட்ஸ்

(இது ஒரு அபிராமி குரூப் நிறுவனத்தின் அங்கம்)

| பதிவு அலுவலகம் : | கிளை அலுவலகம் : | கிளை அலுவலகம் : | கிளை அலுவலகம் : |
|---|---|---|---|
| சித்ரா காம்ப்ளெக்ஸ்,<br>சத்திரம் பேருந்து<br>நிலையம் அருகில்,<br>திருச்சி - 2.<br>போன்: 31467 | 49/21, பிருந்தாவன் தெரு,<br>முருகன் காம்ப்ளெக்ஸ்,<br>மேற்கு மாம்பலம்,<br>சென்னை - 33<br>போன்: 4840258 | சின்னையா<br>காம்ப்ளெக்ஸ்,<br>ஐந்து ரோடு,<br>கௌரி தியேட்டர்<br>அருகில்,<br>சேலம் - 636 004. | D-6, K.L.R. பில்டிங்,<br>207, சாஸ்திரி ரோடு,<br>ராம் நகர்,<br>கோயம்புத்தூர்.<br>போன்: 230345 PP |



**"ஜெ..ஜெ. டீ.வி.யில் இன்னிக்குப் பட்டி மன்றமாமே, தலைப்பு என்ன?"**

**"மந்திரிக்கு அழகு கட்அவுட் வைத்தலா? காலில் விழுதலா?"**

**— ஜூலி**

பறிகொடுத்தோம். கங்கா தன் காதலியைப் பறிகொடுத்தான். வகுப்புக் கலவரங்களிலும், தேசிய விடுதலைப் போராட்டங்களிலும் பல்லாயிரக்கணக்கான மனிதர்கள் இறந்து போனதால் எண்ணிறந்த ஆண் பெண்கள் தங்களுக்கு நெருக்கமானவர்களை இழக்க நேர்ந்தது. சிறைக்குப் போய், அங்கு நடந்த கொடுமைகளில் இறந்தவர், அங்கவீனப் பட்டவர்கள் எத்தனை பேர்! இரத்த ஆறுகள் நாடு முழுவதும் ஓடிய பிறகுதான் சுதந்திரம் வந்தது.'

"ராஜேந்திர பிரசாத் பிரிட்டானியர்களின் ஜனநாயகக் கோட்பாடு, வரலாற்று மரபு இந்த இரண்டையும் சிலாகித்து இரண்டு வார்த்தை சொன்னாரே, நீ என்ன நினைக்கிறாய், கங்கா?"

"அவர் சொன்னது சரிதான், மிஸ்டர் நரேன் அவர்கள் நினைத்திருந்தால் நம் தேசத் தலைவர்கள் எல்லாரையும் - காந்திஜி உட்படவும்தான் - என்றைக்கோ கட்டுக் கொன்றிருக்க முடியும். ஆனால் செய்ய வில்லை. உலகம் முழுவதும் ஹிட்லரைக் கூடத்தான் கண்டித்தது. காந்தி கூட அவனுக்குக் கடிதம் எழுதினார். ஆயினும் அவன் அசைந்து கொடுக்கவில்லையே. ஆனால், உலக அபிப்பிராயங்களுக்கு மதிப்புக் கொடுத்தும் இனிமேலும் இங்கே இருப்பது அசிங்கம் என்பதை நம் எதிர்ப்புப் போராட்டங்களிலிருந்து புரிந்து கொண்டும் கௌரவத்துடன் பிரிட்டன் விலகியது பெரிதுதான். அதில் துளியும் சந்தேக மில்லை..." என்றான் கங்கா.

'சாரே ஜஹாங்சே அச்சா ஹிந்துஸ்தான் ஹமாரா' எனும் இனிய பாடல் எங்கிருந்தோ மிதந்து வந்து அவர்கள் செவிகளை நிறைத்தது.

(முற்றும்)

## பின்னுரை

அன்புள்ள பெரியப்பா!

நீங்கள் கொடுத்த பணியை முடித்து விட்டேன். சரியாகச் செய்துள்ளேனா இல்லையா என்பதை விமர்சிக்க நீங்கள் உயிருடன் இல்லை. கூடிய வரையில் உரையாடல்களில் வரலாற்று நிகழ்ச்சிகளை நகர்த்த முயன்றுள்ளேன். அது சாத்தியப் படாத சில இடங்களில் பாடப் புத்தகப் பாணியில் நிகழ்ச்சிகளை விவரிப்பதை எவ்வளவோ முயன்றும் தவிர்க்க முடியவில்லை. வெறுங்கதை மட்டுமல்லாது, வரலாறும் கணிசமான அளவில் நகர வேண்டும் என்பதைக் குறிக்கோளாய்க் கொண்டதால் வந்த குறை - இது உண்மையில் ஒரு குறையானால், 'சுதந்திரம் அடைவதற்காக அந்தக் காலத்து மனிதர்கள் எப்படியெல்லாம் கஷ்டப்பட்டார்கள், எப்படியெல்லாம் தியாகங்கள் செய்தார்கள் என்பது இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்குச் சுத்தமாய்த் தெரியவில்லை' என்று சொன்னீர்கள். 'சுத்தமாய்த் தெரியாதவர்களின்' பட்டியலில் நானும் உள்ளேன் என்பதை இம் முயற்சியில் ஈடுபட்ட வேளையில் தெரிந்து கொண்டேன்.


அன்னியர் ஆண்ட போது அவர்களுக்குத் தொல்லை விளைவிப்பதற்காகக் கடைப்பிடித்த கடையடைப்பு, வன்முறைக் கோஷங்கள், நாசவேலைகள், பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்தும் அடாவடித்தனமான வழிமுறைகள் ஆகியவற்றை இன்னமும் கையாண்டு நாட்டின் பொருளாதாரத்துக்கு ஊறுவிளைவிக்கும் நம் அரசியல்வாதிகள் கொஞ்சமேனும் திருந்த மாட்டார்களா எனும் ஆதங்கமும் வந்தது. காந்தியடிகளையும் அவர் விட்டுச் சென்ற உன்னதக் கருத்துக்களையும் நாம் அறவே மறந்ததன் விளைவே இன்று நாட்டில் நிலவுகின்ற வன்முறைக் கலாசாரம் என்பதும் புரிந்தது. 'இந்தியா பிரிட்டனின் காமன்வெல்த் அணியில் தொடர்ந்து அங்கம் வகிக்கும்' எனும் ஜவாகர்லால் நேருவின் பெருந்தன்மையான அறிவிப்பு, கலங்காத சர்ச்சிலின் கண்களிலும் நீரை வரவழைத்தது என்று சொல்லப்படுகிறது. அரசியலில் கூட அன்பு வென்று விடும் என்பதற்கு இதை விடவும் சிறந்த எடுத்துக்காட்டு உண்டா?

பெரியப்பா! நீங்களெல்லாம் செய்துள்ள தியாகங்களை எண்ணிப் பார்க்கும் போது, சுதந்திர இந்தியாவின் இன்றைய நிலை குறித்த எத்தனை ஏமாற்றங்களுக்கும் வேதனைகளுக்கும் நீங்கள் ஆட்பட்டிருப்பீர்கள் என்பதை நினைத்துப் பாராதிருக்க முடிய வில்லை.

எப்படியோ, ஒரு சுய பரிசீலனைக்கும் விமரிசனத்துக்கும் என்னை உட்படுத்திக் கொண்டு அலசிக் கொள்ளும் ஒரு வாய்ப்பாகவும் நீங்கள் எனக்கு அளித்த பணி பயன்பட்டது. அதற்காக நன்றி, நன்றி, நன்றி!

# நிம்மதியான ஓய்வு நிரந்தர வருமானம் நிலைத்த பாதுகாப்பு




## அமராவதி பெனிபிட் பண்ட் லிட்

வழங்கும்

**வைஸ் பென்ஷனர் திட்டம்**

★ ஒரு முழுமையான நிறுவனத்தின் முத்தான திட்டம் ★ பென்ஷன்தாரர்களுக்கென்று உருவாக்கப்பட்டது ★ திறமை மிக்க நிர்வாகத்தினரால் நடத்தப்படுவது ★ எமது இதர திட்டங்கள்: பிக்சட் டெபாசிட், ரெக்கரிங் டெபாசிட், கிருஷ்ணா ரொக்கப் பத்திரம், யமுனா தொடர் வைப்புத் திட்டம், கங்கா மறு முதலீட்டுத் திட்டம்.

Transactions with Members only.

C.N. வெங்கடசுப்ரமணியன்
Retd. Asst. General Manager,
United India Insurance Co. Ltd.
**CHAIRMAN**

## அமராவதி பெனிபிட் பண்ட் லிட்

(C.I. No. 18-29133/94)

CORPORATE OFFICE: 24, CONRAN SMITH ROAD GOPALAPURAM, MADRAS – 86.

H.O.: அக்ரஹாரம் கொழுமம் உடுமலைப்பேட்டை (Tk) கோவை (Dt).

B.O.: பிளாட் நெ. 2, நெ. 10, வேளச்சேரி மெயின் ரோடு சேலையூர் சென்னை-73

பழனி ரோடு, நெய்க்காரப்பட்டி, திண்டுக்கல், அண்ணா மாவட்டம்.

YOUNG-INDIA

# நீங்கள் கேட்டவை - தராசு

● கே. என். பாலகிருஷ்ணன், கும்பகோணம்.

*? சு. சுவாமியின் பேச்சு, செயல் எல்லாவற்றையும் நீங்கள் ஆதரிக்கிறீர்களா?*

! இல்லை; அவர் பேச்சிலும் பிசிறு தட்டும்; குட்டை குழப்புவதும் உண்டு. குறிப்பாக ஒவ்வொரு வெற்றிப்படி ஏறியதும் அடக்கம் தேவை.

● இரா. ராஜேஸ்வரி, கும்பகோணம்.

*? முதல்வரை அவரது கட்சியினர் புகழ்வது நடிப்பு, ஜால்ரா என்றெல்லாம் பள்ளி மாணவர்களான எங்களுக்கே தெரியும்போது முதல்வருக்குத் தெரியாதா?*

! அரசியலில் அவர் ஆரம்பப் பள்ளிக்கூடம் போனதில்லை; அதற்குள் டாக்டர் பட்டத்தைக் கையில் கொடுத்து விட்டார்கள், அதான் தடுமாற்றம்!

● தென்றல் பிரியன், மேலூர்.

*? ரஜினி தேர்தலில் நின்றால்?*

! மற்றவர்கள் உட்கார்ந்து விடுவார்கள்!

● மு. கருணாநிதி, தேவராய நேரி.

*? "காலில் விழுவது அவரவர் விருப்பம்" என்று "ஜெ" கூறியிருக்கிறாரே?*

! ஏற்றுக் கொள்வதும் அவரவர் விருப்பம்தானே? அது தெரியாதது போல் நடிப்பதா?

● ஆர். கர்ணன், பெத்தரங்கபுரம்.

*? ஆகஸ்ட் 47 - ஏ.கே. 47 - ஒப்பிடுக!*

! பின்னது இல்லாமலே முன்னது கிடைத்தது என்றாலும் முன்னதைக் காக்க பின்னது தேவைப்படுகிறது!

● தேனம்மாள் ராமசாமி.

*? "ஆட்சியைக் கலைத்தால் அவதாரம் எடுத்து உணர்த்துவோம்" என்று 'ஜெ' கூறியுள்ளாரே?*

! அவதாரம் ஏற்கெனவே எடுத்தாயிற்றே! வன்முறை அவதாரம்!

● ஏ.ஜி. கல்யாணசுந்தரம், மணியக்காரன்பாளையம்.

*? சமீபத்தில் தங்களை வியப்பில் ஆழ்த்திய நிகழ்ச்சி ஏதாவது...?*

! ஏப்ரல் 22, சனிக்கிழமை, இரவு தொடங்குகிற நேரம். சேப்பாக்கம் மைதானத்தில் கிரிக்கெட் ரசிகர்களுக்குப் பதில் சிவாஜி ரசிகர்கள். அத்தனை பேரில் ஒரு அம்மா அனுதாபி கூடவா இல்லை? சுஹாசினி, கே.பி., பாரதி ராஜா, விஜ சரத்குமார் இ சினி நட்சத்திரங்கள், மேடையில் வீற்றிருக்கும் 'ஜெ'யை அவ்வப்போது போற்றிப் புகழ ஒரு கைதட்டல்? ஒரு விசில்? அட, அதுதான் போகட்டும். 'ஜெ' பேசத் தொடங்கிய போது? அல்லது முடித்தபோது? ஊஹூம்! மக்கள் மத்தியில் தமது image தூள் தூள் ஆகிவிட்டதை அன்று 'ஜெ' கண்முன் காண நேரிட்டது! நமக்கு வியப்பு; அதிர்ச்சி 'ஜெ'க்கு!

● டி. எஸ். கிருஷ்ணன், திருப்பரங்குன்றம்.

*? இவ்வருடம் அதிக உஷ்ணம் (120 டிகிரி) ஏற்படுமாமே?*

! அரசியல் சூட்டால் மரத்துப் போய்விட்ட நமது தோல் இதையும் தாங்கும்; இன்னமும் தாங்கும்!

● கே. எம். ரவிச்சந்திரன், மதுரை.

*? "தடா சட்டத்தை அரசு கௌரவப் பிரச்னையாகக் கருதவில்லை" என்கிறாரே, எஸ். பி. சவாண்?*



• தேர்தலில் நின்றால்...?

• "அவரவர் விருப்பம்!"



• தடா சட்டம்...



• மாறுவேட ஆற்றல்!





• செவாலியர் விழாவுக்கு...



• "அழைக்கப் படாதது...?"



• சமயோசித பதிலடி!



• புதுமை முயற்சி

! அதை நீக்கி விடுவதையும் ஒரு கௌரவப் பிரச்னையாக எண்ணிச் செயல்படக் கூடாது. அது துஷ்பிரயோகமாகாமல் தடுக்க ஒரு ஏற்பாட்டைச் செய்து விட்டால் போதும். இது சுலப சாத்தியமே!

● **விழிமா சரவணன், சென்னை - 15.**

*? ஆவின் பால் விலை ஏற்றம் குறித்து கண்டித்து எதிர்க்கட்சி ஒன்று கூட அறிக்கை விடவில்லையே?*

! அம்மையாருக்கு எதிராக ஊழல் பட்டியல் தயாரிப்பு, ஆர்ப்பாட்டம், அறிக்கை, எதிர் அறிக்கைகள் இவற்றுக்கு இடையில் மக்களை உடனடியாகவும் நேரடியாகவும் பாதிக்கும் இந்த விஷயம் எல்லோருக்கும் மறந்தே போயிற்று!

● **தி. பாலசுப்பிரமணியன், முடிவைத்தானேந்தல்.** ☐

*? செவாலியர் சிவாஜி விழாவுக்குக் கலைஞர் அழைக்கப்படாதது பற்றி...?*

! ரொம்பக் கேவலம். 'ஒரு கலைஞரைப் பாராட்டும் போது அரசியல் கருத்து மாறுபாடுகள், இரு கட்சித் தலைவர்களும் ஒரே மேடையில் தோன்

! "எண்ணித் துணிக கருமம், துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு" என்ற வள்ளுவர் வாசகத்தைத் தான். துணிவதற்கு முன் யோசித்து இருந்தால், அந்தர் பல்டி அடித்து அம்மா வழக்கை வாபஸ் பெற்று அவமானப்பட நேர்ந்திராது.

● **கே. ரமேஷ்பாபு, சேலம்.**

*? அன்பளிப்பு எந்த அளவில் இருக்க வேண்டும்?*

! நமக்கு ஆக வேண்டிய காரியத்தைப் பொறுத்து கவர், ஷூபாக்ஸ், பிரீஃப் கேஸ், ஸூட்கேஸ் என்று பல வகைப்படும்!

● **தெட்சகுட்டி, சென்னை.**

*? சுப்பிரமணியசுவாமியைத் தமிழக அரசு சிக்கலில் மாட்டி வைத்தது...?*

! அவருக்குள்ள மாறுவேட ஆற்றலை உணர்த்தவும், மன்

பும் முயற்சியும் எதையும் சாதிக்கவில்லை. புஸ்வாணம்!

● **இ. ராதாகிருஷ்ணன், பட்டுக்கோட்டை.**

*? "நீங்கள் சாக்லேட் கேட்கிறீர்கள்; நான் பைவ் ஸ்டார் தரப் போகிறேன்" என்று 'ஜெ' கூறியுள்ளாரே?*

! ஜெ. ஜெ. மூவி, சூப்பர் டூப்பர் மூவியைப் பொறுத்த மட்டில் அதிகார பலமும் பணபலமும் துணைநிற்க, கேக், ரஸமலாய், பாதாம் அல்வா, ஜோன்பப்படி என்று சுபளீகரம் செய்து கொண்டிருக்கிறார்கள்!

● **எம். பிரபு, குமாரட்சி.**

*? பெருகி வரும் தொலைக்*

# ரஜினி தேர்தலில் நின்றால்...?

நத் தலையாக நின்றிருக்க வேண்டியதில்லை. அந்த கைய பரந்த மனப்பான்மையுடைய அரசியல் இங்கே மறுமலர்ச்சி பெற பராசக்தி தான் துணைபுரிய வேண்டும்.

● **டி. ஆர். பாலசந்தர், திருநெல்வேலி.**

*? ஆதி திராவிடர்களை இழிவாகப் பேசியுள்ள சு. சுவாமி மீது ஜெ. நடவடிக்கை எடுத்தது எதைக் குறிக்கிறது?*

ளிப்புக் கோருவதன் மூலமே அம்மையாரின் மன்னிப்புக் கோராத ஆணவத்தைப் புரிய வைக்கவும் உதவியது!

● **சோ. இராமு, செம்பட்டி.**

*? 'ஆதி திராவிடர்களை இழிவாகப் பேசிய சு. சுவாமி மீது நடவடிக்கை' என்ற "ஜெ" அறிவிப்பு...?*

! "உடன்கட்டை ஏறுவேன்" என்று கூறியதற்காக "ஜெ"க்கு பத்து வருஷம் ஜெயில் தண்டனை விதிக்கலாம்" என்ற குமரிஅனந்தனின் சமயோசித பதிலடிக்கு அதிகமாக 'ஜெ'யின் அறிவிப்

*காட்சி நிலையங்களால் என்ன பலன்?*

! மக்கள் சோபா கிழங்குகளாக (couch potatoes) மாறவும், மது விளம்பரங்கள் பார்த்து மயங்கவும், ஆபாசங்களைக் கண்டு மனம் விகாரப்பட்டுப் போகவும் உதவுகின்றனவே! விதிவிலக்காக, அரிதாக சில நல்ல நிகழ்ச்சிகள்: புதுக் கவிதையைத் திரைக் கவிதையாக்கும் வைரமுத்துவின் உலகப் புதுமையான முயற்சி போன்று...

**☐ ரூ 25 பரிசு பெறுபவர் : தி. பாலசுப்பிரமணியன், 8/132, நடுத் தெரு, முடிவைத்தானேந்தல் - 628 102.**



"என்னப்பா... வர வர போட்டல் டாலி யாகாம... டான்ஸ் ஆடுது!" என்று மானேஜர் என் மேஜையருகே வர, எல்லோர் கண்களும் பலாப்பழ ஈயாய் என்னை மொய்த்தன.

"ஸார்... அவர் டாலி செய்யலை. அத... அவர் லீவுல இருந்தப்ப நான்தான் செஞ்சேன்" என்றபடி நித்யா எழுந்து வந்ததும் ஆயிரம் வாட்ஸ் ஷாக்!

நித்யாவின் பின்னால் பார்த்தேன். யாரும் இல்லை.

அப்படியென்றால், இந்த ஆம்பிளைக் குரல் நித்யாவுக்கு உரியதா?

நான் சுதாரிப்பதற்குள் வெட்ஜருடன் கண்களின் ஓரத்தில் கண்ணீர் கட்ட விரைந்தாள் நித்யா.

இப்படிப்பட்ட ஒரு அழகிக்கு இப்படியொரு குரலா? அவள் வேலைக்குச் சேர்ந்த ஒரு வாரத்தில் 'பேசா மடந்தை', 'கர்வக்காரி' என்று பெயர் வாங்கிய காரணம் புரிந்ததும் என் மனத்தை வேதனை வாட்டியது.

லஞ்ச் அவரில் என்னைப் பார்த்து விட்டுத் தலைகுனிந்து கொண்டாள்.

"என்னடா... ஆம்பளை... மாட்டிக்கிச்சா... மேனேஜர்ட்ட..."

"அதவிட... என்னா ஜோக் தெரியுமா... நம்மாளு... அரவிந்த்... ஷாக் ஆயிருச்சு. பொம்பளை அழகாருக்குன்னு... விழுந்துட்டான்! வாய்ஸை கேட்டுட்டு..." - சிரித்தார்கள்!

எனக்கு எரிச்சல் அமிலம் சுரந்தது.

மற்றவர் வேதனையில் சுகம் காணும் கூட்டம்.

நான் வலிய அவளிடம் சென்றேன்.

தயக்கமாய் நிமிர்ந்தாள்.

"மேடம்... நித்யா, ஒரு தடவைக்கு... இரண்டு தடவை டாலி பண்ணிடுங்க. டவுட் இருந்தா இனி என்னைக் கேளுங்க. சாப்பாட்டுல என்ன ஸ்பெஷல்? மாவடுவா... நாளைக்கு இரண்டா கொண்டுவாங்க... எனக்குப் பிடிக்கும்..."

அவள் திகைத்ததைப் பொருட்படுத்தாமல் சிரித்துவிட்டு நகர்ந்தேன்.

"யாரும் என்னோட சகஜமா பேசாதப்ப ரொம்ப வருத்தமா இருக்கு. எல்லா இ அண்ட் டி ஸ்பெஷலிஸ்ட்டையும் பார்த்தாச்சு. பிரயோஜனமில்லை...!"

மறு வாரம் ஆபீஸ் ஸ்டாஃப் ஒருத்தியின் திருமணத்துக்குப் போக வேண்டியிருந்தது.

நித்யாவுடன் பஸ்ஸில் போகும் போது மடமடவென மனசு திறந்தாள்.

"யாரும் என்னோட சகஜமா பேசாதப்ப ரொம்ப வருத்தமா இருக்கு. எல்லா இ அண்ட் டி ஸ்பெஷலிஸ்ட்டையும் பார்த்தாச்சு. பிரயோஜனமில்லை...!"

கல்யாணச் சத்திரம் வந்தது.

ரிஸப்ஷன் மெல்லிசையில், "இப்போது எல்.ஆர். ஈஸ்வரி குரலில் பாடி ரமேஷ் நம்மை அசத்துவார்" - அறிவிப்பைத் தொடர்ந்து "செல்லாத்தா செல்ல மாரியாத்தா..." முழங்க கூட்டத்தில் ஒரே க்ளாப்ஸ்.

"இவரு யாரு... ஸார்? இவ்வளவு சூப்பரா வாய்ஸ் மாத்திப் பாடறது..." என்றேன் என் பக்கத்து சீட் இளைஞரிடம்.

"இவன் என் க்ளோஸ் தோஸ்த்... மாத்தியெல்லாம் பாடலை... குரலே அப்படித்தான்... ஆரம்பத்துல பாக்காத டாக்டர் இல்லை. கொஞ்ச நாள் பேசாம இருந்தானா? அப்புறம், அதையே ப்ளஸ் பாயிண்ட்டா ஆக்கிட்டு, இன்னிக்கு நம்பர் ஒன் மேடைப் பாடகனா இருக்கான்!"

நான் நித்யாவைப் பார்த்தேன்.

அவளும் என்னைத் தன்னம்பிக்கையுடன் பார்த்தாள்.

# குயிலோசை

திருமாமகள்

# T.S.S. NIDHI LTD. ESTD 1973

**THIRUMYLAI SASWATHA SAHAYA NIDHI LIMITED**

Regd. Off.: 230, R.K. Mutt Road, Mylapore, Madras 600 004. ☎ 4942303 / 4943365

**BRANCHES :**

| | | |
|---|---|---|
| THIRUVANMIYUR | : 112, Thiruvalluvar Salai, Kamaraj Nagar, Madras - 41. ☎ 410058 | |
| TONDIARPET | 667, T.H. Road, Madras - 81. ☎5950472 | |
| SAIDAPET | 11 Jones Road, Madras - 15. ☎ 4851468 | |

## FIXED DEPOSIT SCHEME

| Period (Months) | 12 | 24 | 36 | 60 |
|---|---|---|---|---|
| Rate of Int. P.A. | 17% | 18% | 19% | 20% |

## KARPAGA VIRUTCHAM DEPOSIT SCHEME

(Re-Investment Plan) For Deposit of Rs.1,000/-

| Period (Months) | 12 | 24 | 36 | 45 | 67 |
|---|---|---|---|---|---|
| Maturity Value Rs. | 1190 | 1425 | 1760 | 2025 | 3025 |

Minimum Deposit Rs. 10,000/-

## SENIOR CITIZEN DEPOSIT SCHEME

Period - 12 months

Interest payable monthly **19.5%** p.a. Interest payable annually **21%**

(APPLICABLE FOR AGED PERSONS ABOVE 55 YEARS, PENSIONERS, HANDICAPPED, WIDOWS, REGD. EDUCATIONAL AND CHARITABLE ORGANISATIONS)

## T.S.S. SPECIAL DEPOSIT SCHEME

For Deposit of Rs.10,000/-

| Period (Months) | Maturity Value |
|---|---|
| 120 | Rs.66,000 |
| 180 | Rs.1,82,000 |

## RECURRING DEPOSIT SCHEME

MONTHLY DEPOSIT Rs. 100/-

| Period in Months | 12 | 24 | 36 | 48 | 60 | 72 |
|---|---|---|---|---|---|---|
| Maturity Value | 1310 | 2850 | 4650 | 6710 | 9050 | 11,580 |

## SAVINGS DEPOSIT SCHEME 9% P.A.

## BUSINESS HOURS

| | Week Days | | Sunday | Holiday |
|---|---|---|---|---|
| Regd. Office Mylapore | 9.00 to 12.30 | 2.00 to 4.30 | 9.00 to 12.30 | Friday |
| Branch Offices | 9.00 to 12.30 | 2.00 to 4.30 | 9.00 to 12.30 | Tuesday |

## HIGHLIGHTS

* Recognised as a **NIDHI COMPANY** by Central Government of India.
* **Company is in 21st year of service.**
* Transaction with members only (Rupees two only for membership)
* Premature repayment facility as per terms and conditions.
* Monthly Interest Warrants would be despatched in advance for the year of Deposits.

## LOANS

* A) Jewel loans granted on Gold ornaments at Rs.300/- per gms. (Rs.2400/- per 8 gms.)
  * No Ceiling
  * No Charges
  * No Interest Tax
  * Recurring Deposit not required
  * **Your Jewels are insured at our cost.**

B) Property Mortgage Loans granted on RD basis within Madras city limits.

**P.S. SAMBASIVAM** Secretary

**G. KUMARAVELU** Vice-President

**K.R.V. RAMANI** President

# சினேகம் ஃபைனான்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ்
## (சினேகம் குரூப் ஆஃப் கம்பெனிகள்)

உங்கள் முதலீட்டிற்கு **24%** வருட வட்டி

**குறைந்தபட்ச முதலீடு**

ரூ.5000/- அதற்கு மேலும்

காலம் 1 ஆண்டு அதற்கு மேலும்

**+ 3% ஊக்கத்தொகை**

- பென்சன்தாரர்களுக்கு
- வயது முதிர்ந்தோருக்கு
- தர்ம ஸ்தாபனங்களுக்கு கூடுதலாக 1% ஊக்கத் தொகை

**விரைவில் எங்கள் கிளைகள்**

கோவை, மதுரை, திருச்சி, காரைக்குடி நகரங்களில் திறக்கப்படுகிறது

## சிறப்பு அம்சங்கள்

- வட்டிக்கும், டெபாசிட் தொகைக்கும் பின் தேதியிட்ட காசோலைகள் வழங்கப்படும்

**சினேகம் (முதலீடு இரட்டிப்புத் திட்டம்)**

| உங்கள் முதலீடு | 36 வது மாத முடிவில் |
| --- | --- |
| ரூ.10,000 | ரூ.20,000 |

- சினேகம் மழலைத் திட்டம்
- சினேகம் அறிவொளித்திட்டம்
- சினேகம் திருமணத் திட்டம்
- சினேகம் முதியோர் திட்டம்

விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்
தலைமை & நிர்வாக அலுவலகம்

**சினேகம் ஃபைனான்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ்**

31, முதல் அவின்யூ, அசோக் நகர், சென்னை - 600 084.
போன் : 4825105 / 4825566

Right place for the Right people

கிளை அலுவலகங்கள்

- 71-G, சூரமங்கலம் மெயின் ரோடு, (தியாகராசர் பாலிடெக்னிக் அருகில்) சேலம் - 636 005, போன் : 446961.
- 137, சாரதா காலேஜ் ரோடு, சாந்தம் காம்ப்ளக்ஸ், சேலம் - 636 016. போன் : 448872
- 161, மிஷன் தெரு, பாண்டிச்சேரி போன் : 43275
- 18/7, M.G.R. ரோடு, (ரங்கா தியேட்டர் எதிரில்) நங்கநல்லூர், சென்னை - 600 061.

**பாதுகாப்பு! நம்பிக்கை! துரித சேவை!**

தொழில் வல்லுநர்களால் நடத்தப்படும் நிறுவனம்

# நினைவலைகள்

40

கே. பாலசந்தர்

MAN HAS LEARNT TO FLY LIKE A BIRD; BUT HE HAS NOT LEARNT TO LIVE LIKE A MAN —

Dr. S. RADHAKRISHNAN

'தண்ணீர்-தண்ணீர்', படத்திற்குப் பிறகு சர்ச்சைக்குரிய எனது இன்னொரு படம் "அச்சமில்லை; அச்சமில்லை."

'தண்ணீர்-தண்ணீர்' அரசாங்க அதிகார வர்க்கத்தின் மெத்தனத்தை - மனோபாவத்தை ஆவேசத்துடன் சுட்டிக் காட்டியது. 'அச்சமில்லை' நாட்டின் ஜனநாயக அமைப்பு முறை பற்றிக் குரல், எழுப்பியது. நல்லெண்ணத்தோடு நிறுவப்பட்ட இந்த ஜனநாயக அமைப்பு, நடைமுறைப் பிரயோகத்திலே வரும் போது எத்தனை கேலிக் கூத்துகளை உருவாக்கியிருக்கிறது என்று வேதனையோடும் குமுறலோடும் சொன்னது.

மிக மிகச் சாமான்யர்களிடம் கூட அசாதாரணமான சாத்தியக் கூறுகள் இருக்கும் என்கிற நம்பிக்கையின் அடிப்படையில்தான் ஜனநாயகம் செயல்படத் தொடங்கியது. ஆனால், 'ஜனநாயகம்' என்கிற மேடை மீது 'அரசியல்' உண்டாக்கும் அவலங்களையும், கண்ணியமாக வாழ்ந்த ஒரு தனி மனிதனின் வாழ்க்கை அவன் அரசியலில் புகுந்தபிறகு எப்படியெல்லாம் சீர்குலைந்து போகிறது என்பதையும் எடுத்துக் காட்டுகின்ற ஒரு வாய்ப்பாகத்தான் 'அச்சமில்லை' கதை அமைக்கப்பட்டது.

அண்டை மாநிலத்தில் அப்பொழுது நடைபெற்ற சில கேவலமான சம்பவங்களும், போதிய மெஜாரிட்டி இல்லாத கட்சிகள் மற்ற கட்சிகளிலிருந்து எம்.எல்.ஏ.க்களை வெளிப்படையாக விலைக்கு வாங்கிய (horse trading) வினோதங்களும் மக்களுக்கு வேதனையும் அவநம்பிக்கையும் ஊட்டிய நேரம் அது.

ஒரு குடிமகனாக, ஒரு சாதாரண இந்தியப் பிரஜையாக எண்ணிப் பார்க்கும் போது இந்த அரசியல் கேவலங்கள், புனிதமான ஜனநாயகத்திற்கே நேர் எதிரிடையாகச் செயல்படும் இந்த செயல்முறைகள் - என்னை மிகவும் பாதித்தன. ஆகவேதான் இதையே ஒரு கதைக்கருவாகக் கொண்டு ஒரு திரைப்படம் எடுக்க வேண்டுமென்கிற உத்வேகம் என்னிடம் ஏற்பட்டது.

நமது இந்திய ஜனநாயகத்தை விமர்சிக்கும் போது பாலசந்தர் ஒரு பிற்போக்குவாதி, ஒரு 'reactionary' என்று முத்திரை குத்தி விடுவார்கள் என்கிற பயம் என்னுள் எழுந்த போதிலும், 'ஜனநாயகம்' என்கிற புனிதமான அந்த institution ஐ எப்படியெல்லாம் தங்கள் சுயநல எண்ணங்களுக்குக் கேவலமான அரசியல்வாதிகள் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்று எடுத்துக் காட்டுவதில் உயர் நோக்கமுள்ள ஒரு குறிக்கோள் இருப்பதாகவே எனக்குப் பட்டது.

இது போன்ற விஷயங்களைத் திரைப்படங்களிலே கையாளும் போது மிகவும் உன்னிப்பாகவும், கவனமாகவும், ஒரு டாக்குமெண்டரி பாணியிலே திரைக்கதை அமைந்து விடக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருத்தல் மிக மிக அவசியமாகிறது.

ஒரு கணவனுக்கும் மனைவிக்குமிடையே ஏற்படுகின்ற உணர்ச்சி மோதல்களின் அடிப்படையிலே இந்தக் கருத்தினை அமைத்தால் தான் திரைப்படத்திற்கு ஒரு நம்பகத்தன்மை கிடைக்கும்; அது வெகுஜனரீதியாக ஒப்புக் கொள்ளப்படுவதற்கும் ஏதுவாக இருக்கும் என்று முடிவு செய்தேன். ஒரு தாம்பத்ய வாழ்க்கையில் ஏற்படும் விரிசலின் பின்னணியாக மொத்தக் கதையும் அமைக்கப் பட்டது.

திருநெல்வேலி மண்ணின் ராகம் கூட

மாறாமல் பேசுகின்ற கலப்படமற்ற ஒரு நல்ல இளைஞன், அரசியலில் சிக்கி மாவட்ட மண்ணின் - கிராமப்புறச் சூழ் நிலையின் - அந்த இனிமையான பேச்சுத் தமிழ் கூட நாளாவட்டத்தில் தேய்ந்து கலப்படமாகி, சிதைந்து உருமாறுவது, கிராமப்புற மனித நேயத்தின் சிதைவு (dis-integration symbol) ஆகக் கையாளப் பட்டது.

"Conscience warns us as a friend before it punishes as a



• 'அச்சமில்லை அச்சமில்லை'
(படம் உதவி : செல்லப்பா)

judge."

— Stanislaus —

இதுவேதான் 'அச்சமில்லை'யின் கதைக் கருவென்று கூடச் சொல்லலாம்.

கதாநாயகனை 'warn' பண்ணுகின்ற மனசாட்சிக்கு, மனைவியாக உருவம் கொடுத்தேன். அவனைக் கடிந்து கொண்டே அடிக்கடி எச்சரித்துக் கொண்டிருக்கும் அந்த தேன்மொழி கடைசியில் ஒரு நீதிபதியாகத் தீர்ப்புக் கூறுகிறாள்.

ஒரு அருவியைப் பின்னணியாக வைத்துத்தான் இந்தக் கதையைச் சொல்ல வேண்டுமென்று மட்டும் ஏற்கெனவே தீர்மானித்துக் கொண்டிருந்தேன். அதற்காக நிறைய இடங்களைச் சுற்றிப் பார்த்தோம். சேலம், மதுரை அருகிலே உள்ள அருவிகளையெல்லாம் சென்று பார்த்தோம். எதுவும் திருப்திகரமாக அமையவில்லை. கடைசியில் குற்றால அருவியையே பயன்படுத்திக் கொள்ள நினைத்தேன்.

மொத்தப் படமும் குற்றாலத்தருகிலேயுள்ள இயற்கை எழில் பொங்கும் இடங்களில்தான் படமாக்கப்பட்டது.

குற்றாலத்திலே சீசன் இல்லையென்றாலும் அவ்வப்போது திடீரென்று மழை பெய்கின்ற நாட்களிலெல்லாம் குற்றால அருவி நிரம்பி வழியும். அப்பொழுதெல்லாம் படப் பிடிப்பை அருவிக்கருகில் மாற்றிக் கொண்டு காட்சிகளைப் படமாக்கி விடுவோம்.

நாங்கள் அங்கே போன பிறகுதான் நல்ல மழை பொழிகிறது என்று குற்றாலத்து மக்களுக்கு எங்கள் யூனிட்டின் மீது அபிமானம் பிறந்தது!

போகப் போக பொங்கி வழியும் அந்த குற்றால அருவி என் கதையின் ஒரு குணசித்திரமாகவே எனக்குத் தோன்றியது.

ஆம்! நடக்கின்ற சம்பவங்கள் அனைத்தையும் இந்த அருவி மௌனமாகப் பார்த்துக் கொண்டேயிருக்கிறது. நாயகன் உலகநாதனையும் நாயகி தேன்மொழியையும் இந்த அருவிதான் சேர்த்து வைக்கிறது. அவர்களது காதல் மலர்ந்து கனியாகும்போது அந்த மலையருவி உற்சாகப் பெருக்கெடுத்து வெள்ளமாகக் கொட்டுகிறது. இன்னொரு இளம் ஜோடியின் காதல் அந்த அருவியிலேதான் உதயமாகிறது.

அந்தக் காதலி அரசியல் காரணங்களுக்காக இதே அருவியில் தள்ளப்பட்டுத்தான் கொலை செய்யப்படுகிறாள்.

குற்றால நீர்வீழ்ச்சியிலே, கடந்த முப்பது ஆண்டு கால சரித்திரம் காணாத அந்த வெள்ளப் பெருக்கை அதே நேரத்திலே அங்கே படப் பிடிப்புக்காக கூடாரமடித்திருந்த நாங்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டோம்.

இதனாலேயே படத்தின் ஆரம்ப 'டைட்டில்' காட்சிகளில் நடிக நடிகைகள் பட்டியலோடு 'மற்றும் மலையருவி' என்று தனியாக அதற்கு ஒரு credit கொடுத்திருந்தேன்.

இன்னும் சொல்லப் போனால் மொத்தக் கதையும் மலை யருவியின் வழியாக flash back முறையில் சொல்லப்பட்டிருக்கிறது. அதனால்தான் ஆரம்பத்தில் அருவியைக் காட்டியவுடன் அருவி அப்படியே 'reverse'ல் போவதாக அமைக்கப்பட்டிருந்தது: அதாவது மலையருவி நடந்தவற்றை நினைத்துப் பார்ப்பதைப் போல!

இந்தப் படத்திலே வருகின்ற இன்னொரு symbol பற்றியும் இங்கே நான் குறிப்பிட்டாக வேண்டும்.

கதாநாயகியின் சகோதரன் கதாபாத்திரத்திற்கு ஒரு குள்ள

# நான் எதையுமே லேசுல நம்பமாட்டேன்!...



ஏந்த விஷயமா இருந்தாலும் தீர விசாரித்து முடிவெடுப்பது என் சுபாவம்.

நான் பத்தாவது வரை படித்திருக்கிறேன். ஆனால் இங்கிலீஷ் அவ்வளவாகத் தெரியாது.

கான்வென்டில் படிக்கும் என் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லித்தர. அவர்களுடன் சகஜமாக நாலு வார்த்தை இங்கிலீஷில் பேச என்னால் முடிய வில்லையே என்ற மனக்குறை எனக்கு நீண்ட நாட்களாக இருந்து வந்தது.

**விவேகானந்தாவின்** இங்கிலீஷ் கோர்ஸ் பற்றிய விளம்பரங்களைப் பார்க்கும் போதெல்லாம் தபால் மூலம் இங்கிலீஷ் கற்றுக் கொள்ள முடியுமா என்று எனக்குச் சந்தேகமாக இருந்தது.

போன வருடம் சேலத்திற்குப் போயிருந்த போது என் அக்காவின் மகள் **விவேகானந்தாவின்** பாடங்களை மிகுந்த ஆர்வத்துடன் படித்துக் கொண்டிருந்ததை கவனித்த நான் பாடங்களை வாங்கிப் புரட்டிப்பார்த்தேன்.

ஒரு டீச்சர். நேரில் பாடம் சொல்லித்தருவது போல். பாடங்கள் எளிதில் புரியும் வகையில் அமைக்கப்பட்டிருப்பதைக் கவனித்தேன்.

ஊர் திரும்பியதும் முதல் வேலையாக நான் **விவேகானந்தாவின்** கரஸ்பான்டன்ஸ் கோர்ஸில் சேர்ந்தேன்.

மாதா மாதம் அவர்கள் அனுப்பிய பாடங்களைப் படித்து. பிராக்டிஸ் செய்து ஆறே மாதங்களில் கோர்ஸை கம்ப்ளீட் செய்தேன்.

என்னால் இப்பொழுது தயக்கமில்லாமல் சகஜமாக இங்கிலீஷ் பேச முடிகிறது. அது மட்டுமல்ல

பாடசம்பந்தமாக குழந்தைகள் கேட்கும் சந்தேகங்களுக்கு விளக்கமளிக்க. அவர்கள் ஹோம் ஒர்க் செய்ய உதவ **விவேகானந்தாவின்** பயிற்சி ரொம்ப யூஸ்ஃபுல்லா இருக்கு.

'The Proof of the Pudding is in the eating' என்று இங்கிலீஷில் ஒரு பழமொழி உண்டு. ஆம். சுவைத்துப்பார்த்தால் தான் உணவின் ருசி தெரியும்.

**- திருமதி உமா லட்சுமி நாராயணன்**

வீட்டிலிருந்தபடியே. ஓய்வு நேரத்தில் தபால் மூலம் நீங்களும் இப்பயிற்சியினை மேற்கொள்ளலாம்.

இன்றே ஒரு போஸ்ட்கார்டில் **“நான் ஆங்கிலப்பயிற்சி பெற விரும்புகிறேன்”** என்று எழுதி எங்களுக்கு அனுப்புங்கள். பயிற்சி பற்றிய விவரங்களை உடனே உங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.

**நேர்முகப்பயிற்சியும் உண்டு**

**பெண்களுக்குத் தனி வகுப்புகள்**

✆ : 4341216, 4347034, 4341164

**விவேகானந்தா கல்வி நிலையம்**

தபால்பெட்டி எண் K.L. 4986

9. நடேசன் தெரு. தி.நகர். சென்னை-600 017

**We accept Fixed Deposits at the rate of 24% with 2% incentivies.**

**காசி குரூப் ஹவுசிங் பெனிபிட் ஸ்கீமின்** வெற்றிகரமான 16-வது குலுக்கல் வருகிற 25.06.95 அன்று நடைபெற உள்ளது. **"காசி குரூப் ஹவுசிங் பெனிபிட் ஸ்கீம்"** திட்டத்தில் ரூ. 1,500/- முதல் ரூ. 5,000/- வரை மாதத் தவணைகளாகச் செலுத்தி 300 சதுரடிகள் முதல் 1000 சதுரடிகள் வரை உள்ள வீட்டினை பதிவு செய்யும் உறுப்பினர்களுக்கு 10.05.95 வரை முதல் தவணைத் தொகையில் 50% சிறப்பு தள்ளுபடி வழங்கப்படும்.

**சுபமங்களா திட்டம் :**

இத் திட்டத்தில் ரூ. 10,000/- மட்டுமே முன்பணமாகச் செலுத்தி சொந்த வீடு பெறலாம். மீதமுள்ள தொகைக்கு நாங்களே கடன் உதவி ஏற்பாடு செய்து தருகிறோம். இத் திட்டத்தின் கீழ் தமிழ்ப் புத்தாண்டினை முன்னிட்டு 10.05.95 வரையில் வீடு பதிவு செய்பவர்களுக்கு சிறப்புத் தள்ளுபடியும், ரூ. 5,000/- ரொக்கத் தள்ளுபடியும் செய்யப்படும்.

**வீடு கிடைக்கும் இடங்கள் :**

சென்னை கே.கே. நகர் மேற்கு, விருகம்பாக்கம், வடபழனி, தி. நகர் (சாரங்கபாணி தெரு) சாலிகிராமம், கில்நகர், போரூர், பெசன்ட் நகர், அடையார், வளசரவாக்கம், கோடம்பாக்கம் (ரெங்கராஜபுரம் மெயின் ரோடு) திருவொற்றியூர் (காலடிப்பேட்டை) ஆகிய இடங்களில் வீடுகள் கட்டித் தருகிறோம்.

**வைப்பு நிதி திட்டம் :**

இத் திட்டத்தில் முதலீடு செய்பவர்களுக்கு தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு 10.05.95 வரையில் 24% வட்டியுடன் 2% முதல் 4% வரை ஊக்கத் தொகையும் அளிக்கிறோம். மேலும் எங்களது கூட்டு வட்டி வைப்பு நிதியில் தாங்கள் செய்யும் முதலீடு 3½ ஆண்டுகளில் இரட்டிப்பாகிறது.

*மேலும் விவரங்களுக்கு :*

**காசி பில்டர்ஸ்**

மற்றும்

**காசி ஹவுஸிங் & டெவலப்மெண்ட் லிமிடெட்**

*காசி தியேட்டர் காம்ப்ளக்ஸ்,*
91, 92 ஜவாஹர்லால் நேரு சாலை,
அசோக் நகர், சென்னை - 600 083.
போன் : 4822206, 4821969, 4825606, 4825506 FAX : 044-4822206
கிளை அலுவலகம் : நெ. 13, கிழக்கு ஜோன்ஸ் ரோடு, சைதாப்பேட்டை,
சென்னை - 600 015, போன் : 456464

*குறிப்பு : உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க இத் திட்டத்தின் சிறப்பு தள்ளுபடி 10.05.95 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. விலையேற்றத்தை தவிர்க்க உடன் பதிவு செய்து பயனடையுங்கள்.*

**ஞாயிறு முழு அலுவலகம் உண்டு**

நடிகரைப் (midget) பயன் படுத்தியிருந்தேன்.

வளர்ச்சி குன்றிப் போயிருக்கிற நமது இந்திய சுதந்திரத்தின் ஒரு symbol ஆக இந்தக் கதாபாத்திரத் தைப் பயன்படுத்திக் கொண் டிருந்தேன். அந்தக் கதா பாத்திரம் 1947 ல் பிறந்தத னால் அவருக்குச் சுதந்திரம் என்று அவரது தந்தையார் - ஒரு காந்தியவாதி - பெய ரிட்டிருந்தார்.

சுதந்திரத்தை நான் கிண் டல் செய்வதாகச் சொல்லி சில காந்தியவாதிகள் வருத் தப்பட்டார்கள். அவர்க ளிடம் நான் கேட்டேன்: "உண்மையாக நெஞ்சிலே கையை வைத்துச் சொல்லுங் கள்! நாம் வளர்ந்திருக் கிறோமா! நாம் பெற்ற சுதந் திரம் வளர்ந்திருக்கிறதா?" என்று.

''உண்மை அதுவாக இருக்கலாம்; ஆனாலும் இப்படிக்காட்டியிருப்பது மனதிற்குக் கஷ்டமாக இருக்கிறது'' என்று அவர் கள் சொன்னார்கள்.


என் மகள் புஷ்பா கூட படத்தைப் பார்த்துவிட்டு இதே கருத்தைத்தான் வெளியிட்டாள்.

"அப்படி ஒரு reactionஐத் தான் நான் எதிர் பார்க்கி றேன்!" என்று நான் சொன் னேன்.

**தே**ர்தல் நடக்கும் போது, வோட்டுப் போட நிற்கிற கியூவிலே கிருஷ் ணரும், விநாயகரும் நிற்ப தாக டெல்லி நாயக்கர் கற் பனை செய்து பார்ப்பதாக ஒரு காட்சி இருந்தது.

கியூவில் நிற்கும் ஒருவர் தன் முன்னால் நிற்கும் கிருஷ்ணரிடம், 'உங்கள் வோட்டு யாருக்கு?' என்று கேட்பார்.

''சந்தேகமென்ன, என்.டி. ஆருக்குத்தான்;




— குல்லூ

அவர்தான் சினிமாவில் என் வேடத்தைப் பலமுறை போட்டு என்னைப் பிரபலப்படுத்தியவர்'' என்று சொல்வார்.

இன்னொரு 'ஷாட்'டிலே ராமர் தம் வலது கையை மேலே தூக்கி ஆசிர்வதிக்கிற மாதிரி கியூவிலே நின்று கொண் டிருப்பார். உடனே ஒரு கான்ஸ்டபிள், ராமர் அருகில் வந்து, "தயவு செய்து கையைக் கிழே போடுங்கள்" என்று கேட்டுக் கொள்வார்.

"இல்லையே! நான் எப்பொழுதும் என் கையை இப்படித் தானே வைத்துக் கொள்வேன்! அதைப் போய் நீ ஏன் தடுக் கிறாய்?" என்று ராமர் சொல்ல, கான்ஸ்டபிள் சொல்வார்:

"அதில்லேங்க! இப்படி உள்ளங்கையைத் தூக்கிக் காட் டினா ஏதோ ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு வோட்டுப் போடுங் கன்னு சொல்ற மாதிரி இருக்கு. கியூவிலே நின்னுகிட்டு அப்படிச் செய்யக் கூடாதுங்க, தப்புங்க!" என்று கான்ஸ்ட பிள் சொல்வார்.

கடைசியில் இந்தக் காட்சிகளைப் படத்திலிருந்து நீக்கி விட்டேன். என் உதவியாளர்களுக்கு ரொம்ப வருத்தம்.

ரொம்பவும் hilarious ஆக இருக்கும் இந்தக் காட்சியை நீக்கிவிட்டதற்காக என் உதவியாளர்கள் உண்ணாவிரதம் இருக்கும் அளவுக்கு எதிர்த்தார்கள்.

படம் முழுவதும் யாரையும், எந்த ஒரு தனிப்பட்ட கட்சி யையும் குறிப்பிடாமல் மிகக் கவனமாக இருந்துவிட்டு, இந்த ஒரு இடத்திலே மட்டும் ஒரு குறிப்பிட்ட கட்சியின் சின்னத் தைப் பற்றி ஏன் மறைமுகமாகச் சொல்லவேண்டுமென்று படம் சென்சாருக்குப் போவதற்கு முன்னாலேயே இந்தக் காட்சியை நீக்கிவிட்டேன்.

**வெ**ளியான பிறகு இந்தப் படம் வியாபார ரீதியில் நல்ல வெற்றியும், விருதுகளையும், சிறந்த இயக்குநராக எனக்கு விருதுகளையும் பெற்றுத் தந்ததை இங்கே மகிழ்ச்சி யுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

ஓரிரு அன்பர்கள் மட்டும் 'படத்தில் pessimismதான் இருக் கிறது. எதிலும் தோல்வி நோக்கும் மனப்பான்மை எப்படி வளர்ச்சிக்கு அடிகோலும்?' என்று குற்றம் சாட்டினார்கள்.

George Bernard Shaw சொன்னார்:

"Both optimists and pessimists contribute to society. The optimist invents the aeroplane the pessimist, the parachute."

(தொடரும்)

# அதிர்ஷ்ட போன்

போனில் உங்கள் அதிர்ஷ்டம், அடுத்த
வாரம் என்ன நடக்கும் என அறிந்திடலாம் போனில்
உங்களுக்கு கிடைத்திடும் எல்லாம்

☎ 0011 222 222 0+

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 31 மேஷம் | 32 ரிஷபம் | 33 மிதுனம் | 34 கடகம் | 35 சிம்மம் | 36 கன்னி |
| 37 துலாம் | 38 விருச்சிகம் | 39 தனுசு | 40 மகரம் | 41 கும்பம் | 42 மீனம் |

## பட்சி சாஸ்திரம்



ஒரு பண்டைய
ஆருட முறை உங்கள் குறிப்பிட்ட
கேள்விகளுக்கு பதில் சொல்கிறது.

☎ 0011 222 222 043

## உற்றாரும்-உறவினரும்

நண்பர்கள், உறவினர்கள், உடன்வேலை
செய்வோர் மற்றும் வாழ்க்கைதுணை
யாராகிருப்பினும் போனில்
தெரிந்து கொள்ளலாம்
அவர்களுக்கும் உங்களுக்கும்
எத்தனை பொருத்தம் என்று.

☎ 0011 228 888 829

இது சர்வதேச போன் கால். அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்கள்.
எம் 4 ஏ. யு.எஸ்.ஏ.

---

சத்யம் சீலம் நாணயம் தர்மம் = இதுதான் சசிநாத் சத்யம் சீலம் நாணயம் தர்மம் = இதுதான் சசிநாத்

## உங்களுக்கு தெரியுமா?

**6** மாதத்தில் **6** கிளைகள், **1000%** டெப்பாசிட் வளர்ச்சி

கம்பெனி ஆஸ்த்தி **1** கோடி

ஆதரவு அளித்தவர்களுக்கும் அளிப்பவர்களுக்கும் நன்றி! நன்றி!! நன்றி!!!

நீங்கள் எப்போது இணைகிறீர்கள்?

### சசிநாத் சாஸ்வத நிதி லிமிடெட்

H.O. 36, ரங்கநாதன் தெரு, சென்னை-17, PH: 4348233, 4346786

B.O. 35, M.C. ரோடு, சென்னை-21, 205, N. M. ரோடு, ஆவடி, சென்னை-54, 34-C, ரயில்வே ரோடு, காஞ்சிபுரம்-631 501, 56 கடப்பா டிரங் ரோடு, திருத்தணி - 631 209, 38, ஆற்காடு சாலை, வேலூர் 632 004, 161, S.V. பட்டேல் ரோடு, பாண்டி-605 001

ஞாயிறு தவிர மற்ற அனைத்து நாட்களும் இயங்கும்

SOORYA ADVERTISEMENTS

* இவை தவிர இன்னும் பல டெப்பாசிட் திட்டங்களும், 6 மாத வட்டி 1 வருட வட்டி டெப்பாசிட் செய்தவுடனேயே பெறும் திட்டங்கள் உண்டு.

மக்கள் சேவையில் 17 ஆம் ஆண்டு சசிநாத்துடன் இணைவோம்! சௌக்கியமாக வாழ்வோம்

சத்யம் சீலம் நாணயம் தர்மம் = இதுதான் சசிநாத் சத்யம் சீலம் நாணயம் தர்மம் = இதுதான் சசிநாத்

# பணம் பண்ணலாம் வாங்க!

## மொரார்ஜியின் சூப்பர் ஐடியா!

சிகாமணியின் அம்மா என்னைச் 'சிக்கென்'ப் பிடித்துக் கொண்டார். ''இந்தப் பயலுக்குக் கொஞ்சம் நீயாவது எடுத்துச் சொல்லக் கூடாதா? சும்மாவேனும் 'அதில போடறேன் இதுல போடறேன்'னு பணத்தைப் போட்டு லாபம் சம்பாதிக்கப் பார்க்கிறான். அதெல்லாம் ஒட்டாது! உழைச்சு சம்பாதிக்கறதுதான் ஒட்டும்....!'' என்று புலம்பினார்.

''உழைப்பாளர் தினத்துக்கு ஏத்த பேச்சு தான்மா! ஆனா நடைமுறைக்கு ஒத்து வருமான்னு யோசிச்சுப் பாரு....'' என்றார் சிகாமணி கடுப்புடன்.



''அம்மாவுக்கு விளக்கிச் சொன்னா புரிஞ்சுப்பாங்க'' என்று கூறிவிட்டுத் தொடர்ந்தேன்:



''நீங்க நினைக்கறது சரியில்லைம்மா. சிகாமணியும் இன்னும் பல்லாயிரம் பேரும் போடுற பணத்துனாலதான் ஒரு பெரிய தொழில் நடக்குது. அதனால பலபேருக்கு வேலை கிடைக்குது அவங்க குடும்பம் பிழைக்குது... அது மட்டுமில்ல, நாம முதலீடு செய்யுற கம்பெனி நல்ல லாபத்துல நடந்துதுன்னா அதனோட உரிமையாளர்களுக்கும் நல்ல ஆதாயம் இல்லையா.....? அந்த ஆதாயத்துல ஓரளவைத்தான் அவங்க நம்மளோட பகிர்ந்துக்கறாங்க....''

கிழவி கொஞ்சம் அடங்கினார்.

''இன்னும் சொல்லப் போனா மியூசுவல் ஃபண்டுகள்ல நாம போடற பணம் பல தொழில்களுக்கு மட்டுமில்லாம வங்கிகளுக்குக் கூட உதவுது. சமீபத்துல தான் இதுக்கான ஏற்பாடை ரிசர்வ் வங்கி செய்து கொடுத்தது: அதாவது ஒரு மியூசுவல் ஃபண்டு நிறுவனம் தன் பணத்தை பாங்குகளுக்குக் கடனாகத் தந்து வட்டி சம்பாதிக்கலாம். இதற்கு வட்டி சில சமயம் நூறு சதவிகிதம் வரை கூட கிடைக்கும்!

"Inter Bank Call Money Market ன்னு இருக்கு - வங்கிகளுக்கிடையே கடன் கொடுத்து - வாங்குற சந்தை. பல நேரங்கள்ல, வரும் செக்குகளின் தொகையைவிட அந்த வங்கி பணம் கொடுக்க வேண்டிய செக்குகளின் தொகை அதிகமாயிருக்கும். இது மாதிரி சமயத்தில் குறுகிய காலத்துக்கு - ஒரு நாள் முதல் பத்து, பதினைந்து நாள் வரை - அந்த வங்கி கடன் வாங்க வேண்டியிருக்கும். கடன் தொகை கோடிக்கணக்கில் என்பதால் மியூசுவல் ஃபண்டு நிறுவனத்துக்கு எக்கச்சக்க வட்டி கிடைக்கும். வங்கியும் நம்பகமானதாக இருக்கும். அதனால் முதலுக்கும் மோசமில்லை....''

''போன வாரம் போட்ட விக்கிரமாதித்தன் புதிருக்குப் பதில் தெரிஞ்சு போச்சு....'' என்றார் சிகாமணி. ''போடற பணத்தை ஷேர் மார்க்கெட் தவிர இந்த மாதிரி இன்டர் பாங்க் மார்க்கெட்டுலயும் அவங்க முதலீடு செஞ்சா ஷேர் மார்க்கெட்ல கொஞ்சம் நஷ்டம் வந்தாலும் இன்டர் பாங்க் மார்க்கெட் அதை ஈடு கட்டிடும்.... அப்படித் தானே?''



''அதே! அதே! அப்புறம் ஷேர் மார்க்கெட்லயும் இப்ப நல்ல எதிர்காலம் இருக்கு. எஃகு, மருந்து தயாரிப்பு, ஜவுளி, கார்கள், ஸ்கூட்டர், எலக்ட்ரானிக்ஸ் சாதனங்கள், வாஷிங் மெஷின், ஃப்ரிஜ் மாதிரியான வீட்டு வசதிப் பொருட்கள் உற்பத்தி, ஃபைனான்ஸ் கம்பெனிகள் - இந்தத் துறைகளெல்லாம் நம்ம நாட்டுல வளர்நிலையில இருக்கு. அதனால் இது மாதிரியான நிறுவனங்கள்ல மியூசுவல் ஃபண்டுகள் முதலீடு செஞ்சா நல்ல லாபம் வரும். அது மட்டுமில்ல, மியூசுவல் ஃபண்டுகள் கையில நிறைய பணம் இருக்கிறதால அவங்க பல நிறுவனங்கள்ல முதலீடு செய்யலாம். ஒரு நிறுவனத்துல லாபம் இல்லாவிட்டாலும் மற்றதுல நிறைய லாபம் இருக்கும். ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது கணிசமா லாபம் கிடைக்கும்.''



''அதனாலதான் இப்ப பாங்குகளே கூட மியூசுவல் ஃபண்டுகளைத் தொடங்க ஆரம்பிச்சிருக்கு போலிருக்கு...'' என்றார் சிகாமணி.

**வி. கோபாலன்**



## அடுத்த இதழ் திகில் ஸ்பெஷல்!

**வாசன்** எழுதும் மாண்புமிகு

**மர்மம் நிறைந்த விஞ்ஞானத் தொடர் ஆரம்பம்**

''ஆமாம் ஸ்டேட் பாங்க் ஆ·ப் இந்தியா, இந்தியன் பாங்க், கானரா பாங்க் மாதிரி பல பாங்குகள்ல ஆரம்பிச்சுருக்காங்க. போன வருஷம் இந்தியன் பாங்க் ஆரம்பிச்ச மியூசுவல் ·பண்ட் (இன்ட்-பாங்க் மியூசுவல் ·பண்ட்) நல்ல லாபம் சம்பாதிச்சதால அந்த பாங்க் சிறப்பா முன்னேறி யிருக்குன்னு எம். கோபாலகிருஷ்ணன் சமீபத்துல சொன்னார்.''

''இந்த மியூசுவல் ·பண்டு யோசனை நல்ல யோசனைதான். இது மாதிரி மியூசுவல் ·பண்டு களைத் தொடங்கி நடத்தலாம்னு முதன் முதல்ல யாரு நினைச்சிருப்பாங்க....?''

''மொரார்ஜி தேசாய்தான் இந்த ஐடியாவை முதன் முதல்ல அறிமுகப்படுத்தினார். அவர் நிதி யமைச்சரா இருந்தப்போ 1964ல நாடாளு மன்றத்துல ஒரு சட்டம் கொண்டு வந்து, யூனிட் டிரஸ்ட் ஆ·ப் இந்தியாவை ஆரம்பிக்க வழி பண்ணினார். இந்த முப்பத்தோரு வருஷத்துல அது ஆல மரமா வளர்ந்து போச்சு. சுமார் 50,000 கோடி ரூபாயை இப்ப அந்த நிறுவனம் பல்வேறு விதமா முதலீடு செய்துகிட்டு வருது. அதுல பணம் போடறவங்களுக்கு நல்ல டிவிடன்ட் கிடைக்குது. வருஷா வருஷம் புதுசு புதுசா முதலீடு திட்டங் களை உருவாக்கித் தருது யூ.டி.ஐ. 'யூனிட் ஸ்கீம் 1964' அப்படிங்கற திட்டத்துக்கு எக்கச்சக்க வர வேற்பு. இந்தத் திட்ட உறுப்பினர்களுக்குக் கடை சியா 26 சதவிகிதம் டிவிடன்ட் கிடைச்சிருக்கு.....''

''நாம பணத்தைக் கொடுத்து யூனிட்டுகள் வாங்கிட்டா அவங்க முதலீடு செய்யப் போறாங்க. அப்புறம் எதுக்குப் புதுப் புது திட்டம்......?''

''முதலீட்டாளர்களைக் கவர்றதுக்காகத்தான். Open ended scheme இல் முதலீடு செஞ்சா வருஷா வருஷம் டிவிடன்ட் வரும். Close ended scheme என்னும் போது மூணு அல்லது அஞ்சு வருஷம் கழிச்சு டிவிடன்ட் தொகையோட முதல் தொகையும் சேர்த்துக் கிடைச்சுடும். இதில் முதலீட்டாளருக்கு லாபம் கூடுதலாகக் கிடைக்கும். இப்ப மியூசுவல் ·பண்டோட இன்ஷூரன்ஸையும் இணைச்சுத் திட்டங்கள் கொண்டு வந்திருக்காங்க. சில மியூசுவல் ·பண்டுகள்ல பணம் போட்டா ஆட்டோமாடிக்கா ஆயுள் காப்பீடும் மருத்துவக் காப் பீடும் கிடைச்சுடும்.''

''அட கடவுளே! அப்போ இன்ஷூரன்ஸ் கம் பெனிங்க பிழைப்புல மண்ணுதான்....!''

''கிடையவே கிடையாது, சிகாமணி! ஏன்னா அவங்களும் புதுப் புது திட்டங்களா கொண்டு வராங்க. அது மட்டுமில்ல.... மியூசுவல் ·பண்டு கள் இன்ஷூரன்ஸ் திட்டம் வழங்கறதுக்கு முன் னாடி, இன்ஷூரன்ஸ் கம்பெனிங்களே மியூசுவல் ·பண்டுகளை ஆரம்பிச்சுட்டாங்க - எல்.ஐ.சி., ஜி.ஐ.சி. மியூசுவல் ·பண்டுகள் இருக்கே.....!''

''வேடிக்கைதான்! போகிற போக்கைப் பார்த்தா இன்ஷூரன்ஸ் கம்பெனில அகவுண்டும் பாங்குல பாலிஸியும் வைச்சுக்கலாம் போலிருக்கு....''

நான் சிரித்த சப்தம் கேட்டுச் சிகாமணியின் மனைவி எட்டிப் பார்த்தார்.

''ஜோக்கெல்லாம் இருக்கட்டுங்க. அடுத்த முறை நம்ம எ·ப்.டி. மெசூர் ஆகும் போது மியூ சுவல் ·பண்டுல கொண்டு போடுங்க...'' என்றார்.

சிகாமணியின் மனைவி என்றால் சும்மாவா?!

(பணம் பெருகும்)



# அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி – 1995

## முதல் பரிசு ரூ. 1,500;
## இரண்டாவது பரிசு ரூ. 1,000;
## மூன்றாவது பரிசு
## (இரு கதைகளுக்குத் தலா
## ரூ. 500 வீதம்) ரூ. 1,000.

**ஆக மொத்தம் ரூ. 3,500 பரிசுகளாக வழங்கப் பெறும்.**

தவிர, பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 125 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.

- கதைகள் சொந்தக் கற்பனை என்றும் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் பிரசுரமானதில்லை என்றும் உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை எழுத மாட்டேன் என்றும் உறுதிமொழி தரவேண்டும்.
- நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

**கதைகளை அனுப்ப வேண்டிய கடைசித் தேதி : ஜூன் 15.**

- உறையின் மேல் 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய அளவு தபால்தலை ஒட்டிய சுயவிலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.
- போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் ஆகஸ்டு 6 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.
- எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

**ஆசிரியர், கல்கி, 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.**

# மின்சார இலாகாவுக்குக் கிடைத்த 'ஷாக்'

**எறும்பார் ரிப்போர்ட் :**

தகவல்கள் : **எஸ்.எஸ். மணி**

"உஸ்! அப்பா! என்ன வெயில்! ஃபான் ஃபுல் ஸ்பீடுலதான் ஓடுதா...?" என்றபடி வியர்க்க விறுவிறுக்க வந்தார் மிஸ்டர் எறும்பு.

"உம் உம்! இதைவிட வேகமா ஓடினா நீங்களே பறந்துடுவீங்க" என்றேன்.

"இன்னும் நல்ல ஜோக்கா ஒண்ணு சொல்றேன் கேட்டுக்கோ" என்று ஆரம்பித்தார்.

"கேரளாவில மூவாற்றுப்புழான்ற ஒரு ஊரு. அங்க நாலஞ்சு நாள் சேர்ந்தாப்புல கரன்ட் போயிடுச்சு. ஜனங்க மின் சப்ளை ஆபீஸ்ல புகார் குடுத்தப்போ, 'டிரான்ஸ்ஃபார்மர் ரிப்பேர்', 'ஒயர் தீர்ந்துடுச்சு', 'லைன் மேன் வரலை'ன்னு தினம் தினம் ஒரு சாக்கு சொல்லிட்டு வந்திருக்காங்க. ஒன் ஃபைன் டே, மூவாத்துப் புழாக்காரங்க ஒரு பெரிய பூட்டைக் கொண்டு வந்து அந்த ஆபீஸ் கேட்டைப் பத்து மணிக்குப் பூட்டிட்டாங்க! தாமதமா வந்த இரண்டு இஞ்சினியர்களை கேட்டுக்கு வெளியில நிக்க வைச்சு 'கேரோ'வும் பண்ணிட்டாங்க. சாயந்திரம் அஞ்சு மணி வரைக்கும் இது நடந்திருக்கு..."

"மின்சார இலாகா ஊழியர்களுக்கு ஷாக் ட்ரீட்மெண்டா?"

"ஆமாம்! அதுக்கு நல்ல பலனும் இடைச்சிருக்கு. அன்னிக்கு ராவோட ராவா அவங்க ஊருக்குக் கரன்ட் சப்ளை குடுத்துட்டாங்க."

"என்னயிருந்தாலும் கேரளாக்காரங்களுக்குப் போராட்ற குணம் அதிகம். ஆன்னா ஊன்னா கோதாவுல இறங்கிடுவாங்க."

"அப்படி ஒரேயடியாவும் பாராட்டிட முடியாது!"

"அப்படி ஒரேயடியாவும் பாராட்டிட முடியாது!"

"அப்படி ஒரேயடியாவும் பாராட்டிட முடியாது!"

"ஏன், என்ன ஆயிடுச்சு?"

"காயம்குளம்னு ஒரு சட்டசபைத் தொகுதி இருக்கு கேரளாவுல. அதில தேர்தல்ல போட்டிபோடற ஒவ்வொரு வேட்பாளரும் தான் ஜெயிச்சா, முதல் வேலையா காயம்குளம் நகரத்தைத் தாலுகா சென்டராக்கிடுவேன்னு வாக்குறுதி குடுப்பாங்க."

"அப்புறம் குடுத்த வாக்குறுதியைக் காப்பாத்த மாட்டாங்க. ஜனங்களும் அதை மறந்து போயிடுவாங்க. அப்புறம் அடுத்த எலக்ஷன் வரப்போ அதே வாக்குறுதியை மறுபடியும் குடுப்பாங்க.... இதுதானே விஷயம்!"

"நீ சொல்றது கிட்டத்தட்ட சரிதான்."

"கிட்டத்தட்டன்னா..."

"அந்தத் தொகுதியோட இப்போதைய எம்.எல்.ஏ.வும் முன்னாள் அமைச்சருமான தச்சடி பிரபாகரன் கொஞ்சம் வித்தியாசமா சவால் விட்டார்."

"எப்படி?"


"இந்த மார்ச் 31 ந் தேதிக்குள்ள காயம்குளத்தைத் தாலுகா ஆக்காட்டி நான் என்னோட எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செஞ்சுடுவேன். அரசியல் லிருந்தும் விலகிடுவேன்னு ஒரு சபதமே போட்டார். ஜனங்களும் 'அட, புது மாதிரியான சபதமா இருக்கே'ன்னு மார்ச் 31-ந் தேதியை ஆவலா எதிர் பார்த்தாங்க."

"மார்ச் 31 தான் வந்தது. தாலுகா சென்டர் வரலை யாக்கும்!"

"அதே! அதே! அதனால தன்னோட சபதப்படி பதவியையும் அவர் ராஜினாமா செஞ்சிருக்க வேண்டாமா? செய்யலை. கேட்டதுக்கு, 'நான் சபதம் போட்டது கருணாகரன் ஆட்சிக் காலத்துல. ஆனா இப்ப நடப்பதோ அந்தோணி ஆட்சி. அதனால எனது சபதம் செல்லுபடியாகாது'ன்னு ஒரே போடா போட்டுட்டார்!"

"ஏமாத்தறதுக்கு எல்லையே இல்லாம போச்சு பார்த்தீங்களா!"

"அரசியல்வாதிங்க பல்டியடிக்கறதெல்லாம் நம்ம நாட்டுல சகஜமான விஷயம்தானே! இதுக்குப் போயா அலட்டிக்குவாங்க." என்ற எறும்பார் தாமும் ஒரு பல்டி அடித்துக் காண்பித்துவிட்டுக் கிளம்பினார்.







பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி, பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

# ஸ்ரீ கந்தசுவாமி

## பர்மனென்ட் பண்டு லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் துவக்கம் 1990
பதிவு அலுவலகம்: 60, சாமி பண்டாரம் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை- 600 002.
கிளை அலுவலகம்: 36, ஜீனிஸ் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை-600 015. போன்: 459569



கந்தகோட்டம்
ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி

### பிக்சட் டிபாசிட்

| 46நாள் | 3மாதம் | 6மாதம் | ஆண்டு | 2ஆண்டு | 3ஆண்டு | 4ஆண்டு | 5ஆண்டு |
|---|---|---|---|---|---|---|---|
| 13% | 14% | 15% | 17% | 18% | 18.5% | 19% | 20% |

**21%**

5 வருடங்கள்
ரூ.50,000/-
அதற்கு மேலும்

**PB பாண்டு**

| முதலீடு | காலம் | திரும்பப் பெறும் தொகை |
|---|---|---|
| ரூ. 25,000 | 60 மாதம் | ரூ. 70,000 |


### சொத்துக்கள் மீது கடன்

- ❑ வீடு / ஃப்ளாட் பேரில் கடன் வழங்கப்படும்.
- ❑ மாத வட்டி ரூ.1.85 மட்டுமே
- ❑ விரைந்த சேவை.
- ❑ சென்னை மாநகராட்சி எல்லைக்குள் இருக்க வேண்டும்.



### நகைக்கடன்

- ❑ குறைந்த வட்டிக்கு கிடைக்கும்
- ❑ 10 கிராமுக்கு ரூ.3000 வழங்கப்படும்.
- ❑ R.D. கட்டத் தேவையில்லை
- ❑ எந்த சார்ஜும் வசூலிப்பதில்லை



**பாதுகாப்புப் பெட்டக வசதியும் உண்டு.**

# பென்ஷனர் நலத்திட்டம்

**20% P.a** ரூபாய் 10 ஆயிரமும் அதற்கு மேலும் காலம் 1 ஆண்டு வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

சேர்மன்:
**P. பாலசுப்பிரமணியம்,** B.Sc.,
முதன்மை அறங்காவலர்,
ஸ்ரீகந்தக்கோட்டம்,
சென்னை–600 003.
ஆலோசகர்
பார்க் டவுன் பெனிபிட்
பண்டு லிட்.



இயக்குநர்கள் குழு
R.விவேகானந்தன் B.Com.,
(Chairman : Park Town Benefit Fund Ltd.)
A.சுப்பிரமணியன்
V.சண்முகவடிவு B.A.,
V.விஜயகோபால் B.Com., D.C.P.
M.ராஜேந்திரன்
P.ஏகாம்பரம்

பங்குதாரர்களுக்கு மட்டும்

H.O. Friday Holiday (It is a P.B. Group Concern) B.O. Tuesday Holiday

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka


# தூய்மையான பண்ணைப் பால்

## இலவசமாக

### தினந்தோறும், அடுத்த 10 ஆண்டுகளுக்கு பெறுவது எப்படி.......



இன்று பாலின் விலை என்ன என்பது உங்களுக்குத் தெரியும்... இனிவரும் காலத்தில் அது இன்னும் எவ்வளவு உயரும் என்பதை யாரால் சொல்ல முடியும்? ஆனால் **பாலுக்காக** நீங்கள் பெரும் தொகை செலவு செய்ய வேண்டியிருப்பது நிச்சயம். ★ இதில் உங்கள் பிரச்னையைத் தீர்க்க உதவுகிறது **காமதேனு.** இது ஓர் உயர் தொழில்நுட்பப் பால் பண்ணை ஆகும். பால் மற்றும் பணம் - இரண்டிலுமே உங்கள் தேவைகளை நிறைவேற்ற இது பொருத்தமான திட்டங்களை வழங்குகிறது. ★ **அம்ருத் யோஜனா திட்டம்** - இதில் ரூ. 11,000 முதலீடு செய்யுங்கள். அடுத்த 10 ஆண்டுகளுக்கு உங்களுக்கு **உயர்ந்த தரமான, தூய்மையான, புத்தம் புதிய பண்ணைப் பால் - இலவசமாக - ஒவ்வொரு நாளும் ஒரு லிட்டர்** கிடைக்கும். **இப்படி பாலாக பெறும் பொழுது உங்கள் முதலீட்டிற்கு வருவாய் 36%** க்கு மேலும் இருக்கும். நீங்கள் 'வருமானத்தை ரொக்கமாகப்' பெற விரும்பினாலும் அது சாத்தியமே. பத்தாவது ஆண்டின் இறுதியில் உங்கள் அசல் தொகை திருப்பியளிக்கப்படும். ★ அது மட்டுமல்ல... **NMSS-II, ஆரோக்கிய யோஜனா மற்றும் கா∴ப் திட்டங்களையும்** வழங்குகிறது காமதேனு. இவை உங்கள் தேவைக்கு ஏற்ற வகையிலும், எளிதில் முதலீடு செய்யும் வகையிலும் திட்டமிடப் பட்டுள்ளன. முக்கியமாக, காமதேனு திட்டங்கள் எல்லாமே, எளிதில் ரொக்கமாக்கும் வசதியைக் கொண்டவை. மேலும் விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.

KADF

**காமதேனு அக்ரோ & டெய்ரி ஃபார்ம்ஸ் லிட்.,**
குணா பில்டிங், 304-305, மவுண்ட் ரோடு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
தொலைபேசி : 456565, 452080.

**காமதேனு - இங்கே பாலைப் பணமாய்க் கறக்கலாம்.**

APARNA/KADF/738/95